13 லட்சம் பரிசு வெல்லுங்கள்
விவரம் உள்ளே...!

# உதயன்

விலை ரூ.20
பக்கம் 28

சுடர் 30 | கதிர் 086 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 8 வெள்ளிக்கிழமை 20-02-2015

# பேசியவற்றை விரைந்து செயற்படுத்துக

## அரசிடம் காட்டமாகத் தெரிவித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20
ஏற்கனவே பேசப்பட்ட விடயங்களில் தாமதிக்காமல் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர் பேச்சுகளை நடத்துவதற்கு முன்பாக ஏற்கனவே பேசப்பட்ட விடயங்களைச் செயலுருப்படுத்துங்கள் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குக் காட்டமாகத் தெரிவித்துள்ளது.

பக்கம் 24

## தெஹிவளையில் மட்டுமே புலி உண்டு!

கொழும்பு, பெப்.20
இந்த நாட்டில் தெஹிவளை விலங்குகள் சரணாலயத்தில் மட்டுமே புலிகள் உள்ளன என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தால், உயிர் பெறுவது இந்நாட்டிலுள்ள வேறு யாருமல்ல, புலிப் பயங்கரவாதிகளே என தாம் தெரிவித்திருந்த தாக தூய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில கருத்து வெளியிட்டிருந்தார்.
அதற்குப் பதிலளிக்கையிலேயே நிதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## சம்பூர் மீள்குடியமர்வு விரைவில் ஆராய்வு

### பிரதமர் ரணில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 20
சம்பூரில் மக்களின் மீள்குடியமர்வை எவ்வாறு மேற் கொள்வது என்பது தொடர்பில் விரைவில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது. சம்பூர் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என்றும் அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இரவு இடம்பெற்ற சந்திப்பிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வலி.வடக்கில் ஆயிரம் ஏக்கர் விடுவிப்பதுடன், கிழக்கு மாகாணத்திலும் காணிகள் விடுவிக்கப்படும் என்று கடந்த வாரம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கிழக்கு மாகாணத்தில் மிக முக்கியமாக சம்பூரில் காணிகள் மக் களிடம் விரைவில் கையளிக்கப்படும் என்றும் குறிப்பி டப் பட்டுள்ளது.
சம்பூரில் மக்கள் காணிகள் கையளிக்கப்படுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும், அதனை எவ்வாறு மீள்குடியமர்வு செய்வது என்பது தொடர்பில் விரைவில் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ற-5)

## பாதுகாப்பற்ற கடவையில் மாணவனை மோதியது ரயில்

### தூக்கி வீசப்பட்ட மாணவன் ஆபத்தான நிலையில்
### யாழ். நகரில் சம்பவம்



யாழ்ப்பாணம், பெப். 20
தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட பாடசாலை மாணவனை ரயில் மோதியது. தூக்கிவீசப்பட்டு படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் மாணவன் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையான அன்னசத்திரச் சந்தி என்ற

பக்கம் 24

## மாவீரர் குடும்பங்களுக்கான செயற்றிட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 20
மாவீரர் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், தமிழ் அரசியல் கைதிகளுக்கு உதவுவதற்காக, வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டம் இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

பக்கம் 24

## இருநாட்டு மீனவர்கள் அடுத்த மாதம் சந்திப்பு

டில்லி,பெப்.19
இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் வருகைக்கு முன்னதாக இலங்கை– இந்திய மீனவர்களது பிரச்சினைகள் தொடர்பில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி மீனவர்கள் சந்திப்பொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்கம் 24

## உள்ளூராட்சி வேட்பாளர்களை சந்திக்கிறார் தேசப்பிரிய

யாழ்ப்பாணம், பெப்.20
முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வேட்பாளர்களுடனும் – பாதுகாப்புத் தரப்பினருடனும், தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நாளை சனிக்கிழமை கலந்துரையாடல் நடத்தவுள்ளார். அதனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களையும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு வருமாறு, முல்லைத்தீவு மாவட்ட உதவித்

பக்கம் 24

## சரணடைந்து காணாமல்போனோர் குறித்து முப்படையின் அறிக்கை

### தமிழ்க் கூட்டமைப்பிடம் தெரிவித்தார் ரணில்

யாழ்ப்பாணம், பெப். 20
சரணடைந்து காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் முப்படையினரிடமிருந்து அறிக்கை பெற்றுச் சமர்ப்பிப்பதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இரவு இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பக்கம் 24

## ஓய்வுபெற்ற ஆசிரியரும் இடமாற்றப் பட்டியலில்

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்.வலயம் தயாரித்துள்ள ஆசிரியர்களின் இடமாற்ற பெயர்ப்பட்டியலில், ஒரு வருடத்துக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது. இடமாற்ற சபை இன்றியும் பலருக்கு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று ஆசிரியர்களால் கூறப்பட்டுள்ளது.

பக்கம் 24

## கரைதுறைப்பற்று சபையின் செயலாளருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 20
கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தலில், அந்தச் சபையின் தற்போதைய செயலாளரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வேட்பாளர்களுள் ஒருவராகவும் போட்டியிடுகின்றார். இந்த நிலையில் குறித்த வேட்பாளர்

பக்கம் 24

## ஐ.எஸ். தீவிரவாதத்தை அழிப்பதில் தாமதம் ஏன்?

பக்.16



அல்வாய் - வேவிலந்தை
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
மகா சத சண்டி யாகம் – 2015
அம்பிகை அடியார்களே! நிகழும் மங்கலகர ஜய வருஷம் மாசித்திங்கள் சுக்கிலபக்ஷ மாசி மகத்தை முன்னிட்டு மாசித்திங்கள் 10 ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரை (22.02.2015- 04.03.2015) அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 100 முறை சண்டி பாராயணமும் 10 முறை சண்டி ஹோமமும் செய்வதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அனைத்து அடியார்களும் 11 தினங்களும் காலை, மாலை நடைபெறுகின்ற பூஜை, மகாயாகம் இலட்சார்ச்சனைகளுக்கு வருகைதந்து உபயமேற்க மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி மற்றும் மஹாமுத்துமாரி திருவருளுக்கு ஆளாகும் வகையிலும் இலங்கையில் எப்பகுதியிலும் நடைபெறாத மஹா சத சண்டி ஹோமம் நம் ஆலயத்தில் இரண்டாம் முறையாக செய்வதற்கு இந்தியாவிலிருந்து சிறந்த சிவாச்சாரியார்களும் இலங்கையில் பிரபல்யம் பெற்ற சிவாச்சாரியார்களும் இணைந்து நடத்துவதற்கும் அம்பிகையின் திருவருள் பாலித்துள்ளது.
அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
தொ.பே.இல. 021 226 4265
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
ஆலய பரிபாலன சபையினரும் மற்றும் அம்பிகை அடியார்களும்

# இனப்படுகொலைத் தீர்மானம் பிரதேச சபைகளிலும் ஆதரவு

யாழ்ப்பாணம், பெப் .20

வடக்கு மாகாண சபையின் இனப்படுகொலைத் தீர்மானத்துக்கு ஆதரவாக கரவெட்டி பிரதேச சபை, வலி.கிழக்குப் பிரதேச சபை ஆகியவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையில் கடந்த அமர்வின்போது கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட' இலங்கையில் தமிழர் மீது. அரசால் மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலையே' என்ற தீர்மானத்தை ஆதரித்து வலி.கிழக்குப் பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் கே.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களால் மூன்று தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு அவை எதுவித எதிர்ப்பும் இன்றி நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வில் நிவேற்றப்பட்ட' இலங்கையில் தமிழர் மீது அரசால் மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலையே' என்ற தீர்மானதுக்கு ஆதரவாக வலி.கிழக்குப் பிரதேச சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், கரவெட்டிப் பிரதேச சபையில் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த ஆதரவுத் தீர்மானத்தை ஆளும் தரப்பு உறுப்பினர் ஆ.மதியரசன் முன்மொழிந்தார்.

போர் என்பது இரு தரப்புக்கும் இடையே இடம்பெற்றது.இதில் இரு தரப்பினரும் கொல்லப்படலாம். ஆனால் பச்சிளம் குழந்தை முதல் முதியவர் வரை கொல்லப்பட்டனர். இது முற்றிலும் இனப்படுகொலையே. போர்க்குற்றம் தொடர்பாக உள்ளக விசாரனை எமக்குத் தேவையில்லை. சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும். சர்வதேச விசாரணைக் குழுவில் தமிழர் ஒருவரும் இல்லை.அவ் விசாரணையிலும் மொழிப்பிரச்சினை உண்டு.எனவே வடக்கு மாகாண சபையின் இனப்படுகொலைத் தீர்மானத்தை முழுமையாக நாம் வரவேற்கின்றோம் எனப் பிரேரணையை முன்மொழிந்தபோது உறுப்பினர் மதியரசன் தெரிவித் தார்.

இதனை மற்றுமொரு ஆளும் தரப்பு உறுப்பினரான க.பரஞ்சோதி வரவேற்று வழிமொழிந்தார். (த-17-173)

## உயர்தரப் பரீட்சைக்கு மார்ச் 5 வரை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், பெப். 20

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தகுருகுலராஜா தெரிவித்துள்ளார்.

உரிய கட்டணங்களைத் தபால்கந்தேரில் செலுத்தி மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அண்மைக்காலமாக பரீட்சைகளின்போது பல பரீட்சார்த்திகள் உரிய காலத்தில் விண்ணப்பங்களை அனுப்பாதமையால் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

21வயதுக்குட்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்து விண்ணப்பங்களை அவர்கள் ஊடாகவே அனுப்பி வைக்க வேண்டும். விஷேட தேவையுடையவர்களும் இவ்வாறு விண்ணப்பிக்கலாம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-4)

## இந்திய ட்ரோலர்கள் நேற்று விரட்டியடிப்பு

இராமநாதபுரம், பெப்.20

இராமேஸ்வரம் மீனவர்களது 600 இற்கும் மேற்பட்ட ட்ரோலர் படகுகளை இலங்கைக் கடற்படையினர் நேற்று விரட்டியடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கடற்படையினர் மீன்பிடி வலைகளை அறுத்து பிடித்த மீன்களையும் அள்ளிச் சென்றுள்ளதாகக் கரை திரும்பியுள்ள மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று 600இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 2ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் கச்சதீவுப் பகுதியில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு 5 ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை மீன்பிடிக்கவிடாமல் விரட்டியடித்ததோடு 10இற்கும் மேற்பட்ட வலைகளை கடலில் வெட்டிவிட்டு 30 இற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீன்களை அள்ளிச் சென்றுள்ளனர் என்று குற்றச்சாட்டியுள்ளனர் இந்திய மீனவர்கள்.

இலங்கைக் கடற்படையினர் தம் மீதுதாக்குதல் நடத்தியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்படை அதிகாரி ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இலங்கைக் கடற்படையினர் ரோந்துக் காவலில் ஈடுபட்டிருந்தபோது கச்சதீவுப் பகுதியில் தலைமன்னாருக்கு அண்மித்து நூற்றுக்கணக்கான இந்தியப் படகுகள் மீன்பிடித்துக் கொண்டிருந்தன. எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடவேண்டாம் என அவர்களிடம் தெரிவித்து அங்கிருந்து செல்லுமாறு கடற்படையினர் கூறினர்.

கடற்படையினரைக் கண்ட இந்திய மீனவர்கள் கரை திரும்பியதாகவும், மீனவர்களைத் தாக்கவோ, அவர்களது வலைகள், மீன்களைப் பறிமுதல் செய்யவோ இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (த-14)

## தவறி விழுந்து காயம்

உழவு இயந்திரப் பெட்டியில் ஏற்றப்பட்ட நெல்மூடைகளின்மீது அமர்ந்து பயணித்தவர் வயல் வரம்பில் பெட்டி ஏறிய போது தவறி வீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மறவன்புலோவில் இடம்பெற்றது.

மறவன்புலோ மத்தியைச் சேர்ந்த பத்மநாதன் மகேஸ்வரன் (வயது 65) என்பவேர காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# பணம் பெற்று ஏமாற்றிவிட்டது யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

## மாணவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் 2 வருடக் கற்கைநெறிக்கு என மாணவர்களிடம் தலா 28 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்ட நிர்வாகத்தினர் ஒரு வருடக் கற்கை நெறியை வழங்கி விட்டுச் சான்றிதழ் வழங்கவுள்ளதாகக் கூறியுள்ளனர். இதனால் மாணவர்கள் விசனம் அடைந்துள்ளதுடன் தம்மை அவர்கள் ஏமாற்றியுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்கள்மேலும்தெரிவித்துள்ளதாவது:- குறித்த நிறுவனத்தில் பல கற்கை நெறிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2008 ஆம் ஆண்டு தேசிய எந்திரவியல் தொழில்நுட்பப் பட்டயக் கற்கைநெறிக்கு விண்ணப்பித்தோம். ஒவ்வொருவரிடமிருந்தும் 28 ஆயிரம் ரூபா பணம் அறவிட்டனர். முழுத் தொகையையும்செலுத்திவிட்டோம். விரிவுரை ஆரம்பித்து 9 ஆவது மாதத்தில் இந்தக் கற்கைநெறிக்குத் தொழில்நுட்பப் பயிற்சித் திணைக்களத்தில் அனுமதி பெறப்படவில்லை என்று கூறி இடைநிறுத்தப்பட்டது. ஆனாலும் தாம் செலுத்தியிருந்த பல மில்லியன் ரூபா பணத்துக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது. பணத்தைத் திருப்பித் தருவதாகப் பணிப்பாளர் கூறியிருந்தார். தற்போது ஆட்சி மாறிவிட்டது. கற்கைநெறியை நீங்கள் பூர்த்தி செய்ததாகச் சான்றிதழ் தரப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

எம்மிடமிருந்து மில்லியன் ரூபா பணம் பெறப்பட்டு 6 வருடங்களாகியபோதும் பணமும் தரப்படவில்லை. சான்றிதழும் தரப்படவில்லை. கடுமையாக மன உழைச்சலுக்கு ஆளாகியுள்ளோம்.

2 வருடக் கற்கைநெறியான இது வார இறுதி நாள்களில் நடைபெற்று வந்தது. கற்கைநெறியின் 50 வீதம் கூட நாங்கள் கற்றிருக்கவில்லை. முன்னைய வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெற்றிருக்கவில்லை. இந்நிலையில் கற்கையை நிறைவு செய்ததாகச் சான்றிதழ் தந்தாலும் எமக்கு எதுவும் தெரியாது. எங்கு என்ன வேலையை செய்வது? போலியான சான்றிதழைச் சமர்ப்பித்து எதனை அடையப்போகிறோம் என்று தொழில்நுட்பக் கல்லூரி நிர்வாகத்தினர் எதிர்பார்க்கிறார்கள்? இதற்கு உரிய தீர்வு பெற்றுத் தரவேண்டும் என்று மாணவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் கல்லூரியின் பணிப்பாளர் யோகராஜனுடன் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் பணம் கல்லூரியின் தலைமையகமான கொழும்புக்குஅனுப்பப்பட்டுவிட்டது.அதனை மீளப் பெறுவது தொடர்பில் எதுவும் கூறமுடியாது. இந்தக் கற்கை நெறியை மாணவர்கள் பூர்த்தி செய்ததாக சான்றிதழ் வழங்கப்படவுள்ளது – என்றார்.

கற்கையைப் பூர்த்தி செய்யாததால் அது பயனளிக்காதே என்று கேட்டபோது, இது ஒரு வருடம் மற்றும் இரண்டு வருடங்களைக் கொண்டிருப்பதனால் ஒரு வருடக் கற்றைநெறியைப் பூர்த்தி செய்ததாகச் சான்றிதழ் வழங்கப்படும். அவர்கள் மேற்கொண்டு எங்காவது பட்டப்படிப்புக்களைப் படிக்க முடியும் – என்றார். மாணவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 2 வருடக் கற்கைநெறிக்கே பணம் செலுத்தியுள்ளனர் என்று கேட்டபோது, கற்கை தொடர்பில் தலைமையகத்தில் கலந்துரையாடப்பட்டு வருகிறது. விரைவில் முடிவு தெரிய வரும். அரசியல் காரணமாக அந்தக் கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டது. – என்றார். (த-4)

## போதையால் பறிபோனது லைசன்ஸ்

தென்மராட்சி, பெப். 20

மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வரின் சாரதி அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் மது போதையில் வாகனம் செலுத்தியதாகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் தனித்தனியாக நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, மதுபோதையில் விபத்தினை ஏற்படுத்தும்வகையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 16ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

# ஜெனிவா தொடருக்கு முன்னர் வலி.வடக்கில் மீள்குடியமர்வு

## வேண்டும் என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக, வலி.வடக்கு மற்றும் சம்பூர் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நல்லூரில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். நிலங்களை விடுவித்து மக்களைக் குடியமர்த்துவோம் என்று தேர்தலின்போது இந்த அரசு வாக்குறுதியளித்திருந்தது. தேர்தல் முடிந்தவுடன் சம்பூர் மக்கள் அவர்களது சொந்த இடங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களால் குடியமர்த்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் அதனைத் தடுத்தனர். அதன்போது எங்களுடன் அவர்கள் பேசினர்.

தேர்தல் முடிந்தவுடன் வடக்கில் இராணுவத்தினர் மீது கல்வீச்சு நடக்கின்றது. இராணுவ முகாம்கள் தாக்கப்படுகின்றது என்று தெற்கில் பரவலாக வதந்திகள் பரவியிருந்தன. அந்த நேரத்தில், சம்பூரில் மக்களை குடியமர்த்தியிருந்தால் வீணான சண்டைகள் இராணுவத்தினருடன் வந்திருக்கும். அதனால் நாம் மக்களை மீளவும் இடைத் தங்கல் முகாமில் தங்க வைத்தோம்.

ஆனால் இன்று வரையில் ஒரு அங்குல நிலத்தில் கூட மக்கள் குடியமர்த்தப்படவில்லை. கேப்பாபிலவு, பரவிப்பாஞ்சான், சம்பூர், முள்ளியான், வலி.வடக்கு என்று எங்கேயும் மக்கள் குடியமர்த்தப்படவில்லை.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சந்திப்பதற்கு முதல் நாள் வலி.வடக்கில் ஆயிரம் ஏக்கர் விடுவிப்பதாகச் சொன்னார்கள்.



அதிலும் மக்களால் நிராகரிக்கப்பட்ட திட்டத்தையே இந்த அரசு முன்வைத்தது. அதனை நாம் உடனடியாகவே எதிர்த்தோம். திட்டத்தை மாற்றுவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்று வரையில் அதைப் பற்றி பின்னர் எதுவும் தெரிவிக்கவில்லை.

சம்பூர் மக்கள்சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது.அப்போது அரசு, இந்த மக்களை அங்கு குடியமர்த்துவதற்காகத்தான் போர் நடத்துவதாகவும், அதன் பின்னர் கண்ணிவெடிகளை அகற்றி மக்களை குடியமர்த்துவதாகவும் உயர் நீதிமன்றத்துக்கும், நாடாளுமன்றத்திற்கும் வாக்குறுதி கொடுத்தது. ஆனால் இன்று வரையில் எதுவும் செய்யவில்லை.

சம்பூரில் 825 குடும்பங்களையும் உடனடியாக மீள்குடியமர்வு செய்ய முடியும். அதே போல் வலி.வடக்கில் 6 ஆயிரத்து 451 குடும்பங்களை மீள்குடியமர்வு செய்யலாம் என்று 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் உயர் நீதிமன்றத்துக்கு மாவட்டச் செயலகத்தினால் உறுதிவழங்கப்பட்டுள்ளது. எனவே உடனடியாகச் குடியேற்றக் கூடிய இந்த இடங்களை தாமதமின்றி விடுவிக்க வேண்டும்.

அதுவும் மார்ச் இரண்டாம் திகதி, ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் நடைபெற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இதன்போது சம்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் நாகேஸ்வரனும் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கெடுத்தார். (த-5)

## இந்திய அணிக்குள் குழப்பம்

இந்திய அணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சர் கழற்றிவிடப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்திய அணி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்கின்றது. இந்த நிலையில் அணியின் இயக்குனர் ரவிசாஸ்திரி, அணியின் பயிற்சியாளர்களுடன் ஆட்ட வியூகம் குறித்து தனியாக ஆலோசனை நடத்தியதாகவும், இந்தக் கூட்டத்துக்கு இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் டங்கன் பிளட்சருக்கு எந்தவித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. டங்கன் பிளட்சர் பயிற்சியில் வெளிநாட்டு மண்ணில் இந்திய அணி மோசமாக செயல்பட்டதால் அவர் அணியில் இருந்து

பக்கம் 04

## அதிரடி

இலங்கை அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் இருப்பது தனக்குப் பொருத்தமாக உள்ளதாக லஹிரு திரிமன்ன தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஆரம்ப துடுப்பாட்ட வீரராக அறிமுகமான திரிமன்ன துடுப்பாட்ட வரிசையில் ஒன்று தொடக்கம் எட்டு வரை சகல இடங்களிலும் விளையாடியுள்ளார்.

உலகக் கிண்ண ஆட்டங்

பக்கம் 04

# இலங்கை வீரர்களுக்கு மனஅழுத்தம்



இலங்கை அணியில் தற்போது பல வீரர்கள் மனஅழுத்தத்தில் இருக்கின்றனர். அத்துடன் இளம் வீரர்களுக்கு வாய்ப்பும்வழங்கப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் இலங்கை அணி எவ்வாறு கிண்ணத்தை வெல்லப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று அந்தர் பல்டி அடித்து கருத்து வெளியிட்டிருக்கிறார் இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க.

இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய நிலை குறித்து கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதேவேளை, உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் வைத்து கருத்துத் தெரிவித்திருந்த, ரணதுங்க, இலங்கை அணி கிண்ணத்தை கைப்பற்றி மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வரும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற் போது, எவ்வாறு கிண்ணத்தை வெல்லப் போகின்றது என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார்.

உலகக் கிண்ணத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை அணியானது சிறப்பான ஒரு அணியல்ல. திறமையான வீரர்கள் அணிக்குவெளியில் இருக்கும்

பக்கம் 04




## அஸ்வின் காயம்

உலகக் கிண்ண ஆட்டத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மோதும் ஆட்டத்துக்கான பயிற்சியில் அஸ்வின் ஈடுபட்டிருந்த போது அவர் காயத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்திய அணி வீரர்கள்வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது உமேஷ் யாதவ் வீசிய வேகப்பந்து வீச்சை எதிர்கொண்ட அஸ்வின் காயம் அடைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக அவருக்கு ஐஸ் ஒத்தடம் கொடுக்கப்பட்டது. பின்னர் அவர் 20 நிமிடம் தொடர்ந்து துடுப்பாட்ட பயிற்சி செய்தார். சிறிய காயம் தான். கவலைப்பட ஏதுமில்லை. என்று அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. (5-ரி)

# கத்துக்குட்டிகளின் கலகலப்பு

### போராடியே வென்றது சிம்பாப்வே




வாட்மோரின் பயிற்சி. மாற்றத்தைக் காண்பிக்கின்றது சிம்பாப்வே. இதனால் ஆட்டங்களில் எதிரணிக்கு கடுமையான அச்சுறுத்தல். ஆனாலும்,சிம்பாப்வேயையே நேற்றுக் கொஞ்சம் ஆட்டிப் பார்த்தது ஐக்கிய அரபு இராச்சியம். சிம்பாப்வே – ஐக்கிய அரபு இராச்சியம் இரு அணிகளும் அன்று தொட்டு இன்று வரை உலகக் கிண்ணத்தில் கத்துக்குட்டி அணிகளாகவே இருக்கின்றன.

சிம்பாப்வேயே வெல்லும் என்றமுன்கணிப்புடன்தொடங்கிய ஆட்டத்தில், நாணயச் சுழற்சி வெற்றி முதலில் கிடைத்தது. எதிரணியை பணித்தது துடுப்பெடுத்தாட. சிம்பாவேயின் திட்டப்படியே அலி ஆரம்பத்தில் பலியாகினார். அலியின் வழியில் பெர்ரின்கர் வந்தார். சந்திரன். ஐக்கிய அரபு அணியிலும் ஒரு கேரளத் தமிழன். நல்ல விடயம்தான். சந்திரனுக்கு கைகொடுத்தார் கான். கணிசமான வேகத்தில் இணைப்பாட்டமாக 82 ஓட்டங்கள் குவிப்பு. தொடர முடியவில்லை. சிறிது நேரத்துக்குள்ளே அடுத்தடுத்த இலக்குச் சரிப்புகள். 34 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை எட்டியது ஐ.அ.இராச்சியம். களமிறங்கினார் அன்வர். துவைத்துக் காயவைத்தார் சிம்பாவேயின் பந்துகளை. 37 பந்துகளில் அரைச்சதமும் கண்டார். அன்வரை அப்படியே பின்பற்றினர் பின்வரிசை

பக்கம் 04

## வியூகம் வகுக்கும் மும்மூர்த்திகள்

தென்னாபிரிக்க அணியை இந்தியா ஒரு போதும் வீழ்த்தியதில்லை. இந்த வரலாற்றைத் தொடர்வதற்காக, இந்திய அணியை வீழ்த்தும் யுக்திகளை தென்னாபிரிக்க அணியினருக்கு, இந்திய அணியின் பலம் – பலவீனம் அறிந்த ஹரி கிறிஸ்டன், அலன் டொனால்ட், மைக்கல் ஹஸி ஆகியோர் தெரிவித்து வருகின்றனர்.

ஐ.பி.எல். தொடரில் சென்னை



சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடியபோது இந்திய அணி வீரர்களுடன் நெருங்கிப் பழகியுள்ளதால், மைக்கல் ஹஸியின் அனுபவ ஆலோ சனைகள், தென்னாபிரிக்க வீரர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கம் 04

## அனல் பறக்குமா இன்றைய ஆட்டம்

நியூஸிலாந்து அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையில் இன்று காலை 6.30 மணிக்கு வெலிங்டனில் இடம்பெறும் ஆட்டம் அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மக்கல்லம் தலைமையில் நியூஸிலாந்து அணி இந்த உலகக் கிண்ணத் தொடரை அசத்தலாகத் தொடங்கியுள்ளது. அந்த அணியின் துடுப்பாட்ட வரிசை சூப்பர் திறனில் உள்ளது. பிரண்டன் மக்கல்லம், வில்லியம்சன், அண்டர்சன், மார்டின்குப்தில்,எலியட் ஆகியோர் சிறப்பாக் துடுப்பெடுத்தாடி வருகின்றனர். ஆனால் ஸ்கொட்லாந்துக்கு எதிரான லீக் ஆட்டத்தில், அவசரப்பட்டு விளையாடி இலக்குகளை விரைவாக பறிகொடுத்தது நியூஸிலாந்துக்கு சற்று பின்னடைவாகக் கருதப்படுகிறது.




அந்தத் தவறை திருத்தி கொண்டு, இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் நியூஸிலாந்து மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என்று எதிர்பார்க்கலாம். நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சும் எதிரணிகளை அச்சுறுத்தும் வகையில் உள்ளது. சவுத்தி, அடம் மிலன், டானியல் வெட்டோரி சிறப்பாக பந்து வீசி வருகின்றனர்.

எலியம் அண்டர்சன் ஆகியோர் பந்து வீச்சிலும்

பக்கம் 04



நியூஸிலாந்துக்கு எதிரான இன்றைய ஆட்டத்துக்காக தயாராகும் இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரூவேர்ட் புறோட்

## இந்தியா அபாய அணியாம் !



இந்திய அணி முதல் ஆட்டத்திலேயே சிறப்பாக விளையாடி பாகிஸ்தானை தோற்கடித்தது. இந்தச் சிறப்பான தொடக்கம் இந்தியாவுக்கு புத்துணர்வை ஏற்படுத்தி இருக்கும். பாகிஸ்தான் அணி பலவீனமாகவே உள்ளது. இந்திய அணியில் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். அந்த அணி முதலில் பார்ப்பதற்கு பெரிதாகத் தெரியாவிட்டாலும் அபாயகரமான அணியாகும். தற்போது கடும் போட்டியாக மற்ற அணிகளுக்கும் விளங்கும். இவ்வாறு

பக்கம் 04

# சச்சினுடன் சாப்பிட லட்சங்கள் தேவையாம் !

உலகக் கிண்ணத் தொடரில், சச்சினுடன் இரவு விருந்தில் பங்கேற்கும் அரிய வாய்ப்பு ரசிகர்களுக்கு காத்திருக்கிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி மெல்போர்ணில் உள்ள ஹோட்டலில் சச்சினுடன் இரவு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இவருடன் 60 முக்கிய விருந்தினர்கள் பங்கேற் கின்றனர். 12 பேர் சச்சினுடன் ஒரே மேசையில் அருகில் அமர்ந்து இரவு விருந்து சாப்பிடலாம்.

அவ்வப்போது கேள்வியும் கேட்கலாம். இதற்கு ஒவ்வொருவரும் 75 ஆயிரம் முதல் ஒன்றரை லட்சம் வரை (இந்திய மதிப்பில்).கட்டணம் செலுத்த வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் தொகை சச்சினின் அறக்கட்டளைக்கு செல்லும். இவர்களுக்கு சச்சினின் கையெழுத்திட்ட, அவரது சுயசரிதை புத்தகம்பரிசாகஅளிக்கப்படும்.இதேபோன்று சச்சினுடன்உலகக்கிண்ண இறுதிநடக்கவுள்ளமெல்போர்ணில்மீண்டும்நடக்கஉள்ளது.(5–ரி)

# இலங்கை வீரர்களுக்கு மனஅழுத்தம்

போது எவ்வாறு இது போன்ற திறமையற்றஅணியொன்றை தெரிவுக்குழுவினரால்தெரிவு செய்ய முடிந்தது.

அணியில்மாற்றங்களைசெய்யும் போது முதலில் கலந்தாலோசித்து தீர்மானம் எடுக்க வேண்டும். தற்போதைய இலங்கை அணியில் நிறைய வீரர்கள் மன அழுத்தத்துடன் இருக்கின்றனர். அணியின் சிரேஷ்ட வீரர்களான மஹேல ஜெயவர்தன,குமார்சங்ககார மற்றும் டில்ஷான் ஆகியோருக்கு இது இறுதி உலகக் கிண்ணம் என்பதால் வெற்றியுடன் வழியனுப்ப வேண்டும்.

குறிப்பாக இலங்கை அணியில் இளம்வீரர்களுக்குவிளையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவது குறைவாகவே காணப்படுகின்றது. முக்கிய பிரச்சினையாக கடந்த நான்கு மாதங்களில் தினேஸ் சந்திமல், லஹிரு திரிமன்னே மற்றும் திமுது கருணாரத்ன ஆகியோருக்கு அணியில் சரியாக விளையாட சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் மனதளவிலும் உடலளவிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குசல் பெரேரா ஆட்டத்தின் தன்மையை மாற்ற கூடிய வீரர். ஆனால் இவரை அணிக்குத் தெரிவு செய்யவில்லை. திறமையற்ற வீரர்கள் யார் இருக்கின்றனர் என்பதை பற்றி பேசுவதை விட குசல் பெரேரா போன்ற திறமையான வீரர்களை தெரிவு செய்யாதமைதான் கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறான ஒரு நிலையில் இலங்கை அணி எவ்வாறு கிண்ணத்தை வெல்லும் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் – என்றார். (5–ரி)

# இந்திய அணிக்குள் குழப்பம்

ஓரங்கட்டப்பட்டு வருகிறார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மறுத்துள்ளது. இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடக இணைப்பாளர் கருத்து தெரிவிக்கையில், டங்கன் பிளட்சர் இல்லாமல் தனியாக கூட்டம் எதுவும் நடக்கவில்லை. அணியின் கூட்டங்களில் பிளட்சர் ஓரங்கட்டப்பட்டு வருகிறார் என்பது முற்றிலும் தவறான செய்தியாகும் – என்று குறிப்பிட்டுள்ளார். (5–ரி)

# கத்துக்குட்டிகளின் கலகலப்பு






ஐ.அ.இராச்சியம் எதிர் சிம்பாப்வே
சிம்பாப்வே 4 இலக்குகளால் வெற்றி
நாணயச் சுழற்சி சிம்பாப்வே

ஐக்கிய அரபு இராச்சியம்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அலி | C எர்வின் B சர்ரா | 07 | 17 | 01 | 0 |
| பொரிங்கர் | C ரெய்லர் B மிறி | 22 | 36 | 03 | 0 |
| சந்திரன் | C சிக்கும்புறா B மிறி | 34 | 63 | 03 | 0 |
| ஷான் | C வில்லியம்ஸ் B சர்ரா | 45 | 55 | 06 | 0 |
| பரில் | C சக்கபவ B வில்லியம்ஸ் | 32 | 38 | 04 | 0 |
| அன்வர் | C எர்வின் B வில்லியம்ஸ் | 67 | 50 | 09 | 01 |
| முஸ்ரபா | C ரெய்லர் B சர்ரா | 04 | 06 | 0 | 0 |
| ஜவீட் | ஆட்டமிழப்பில்லை | 25 | 19 | 03 | 01 |
| நவீட் | ஆட்டமிழப்பில்லை | 23 | 17 | 01 | 02 |
| உதிரிகள் | | 26 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பனியாங்கரா | 09 | 66 | 0 | 0 |
| சர்ரா | 10 | 42 | 03 | 01 |
| மிறி | 08 | 39 | 02 | 0 |
| கமுன்கோசி | 10 | 53 | 0 | 0 |
| சிக்கும்புறா | 01 | 12 | 0 | 0 |
| வில்லியம்ஸ் | 08 | 43 | 02 | 0 |
| ரசா | 03 | 11 | 0 | 0 |
| மசகட்சா | 01 | 09 | 0 | 0 |

TOTAL 285/7 (50)

1-26 (அலி), 2-40 (பொரிங்கர்), 3-122 (சந்திரன்), 4 -134 (ஷான்) 5 -216 (பரில்) 6 -230 (முஸ்ரபா) 7 -232 (அன்வர்)

சிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரசா | C சந்திரன் B மொகமட் | 46 | 44 | 06 | 01 |
| சக்கபாவ | HW B மொகமட் | 35 | 62 | 04 | 0 |
| மசகட்சா | LBW B ஜவீட் | 01 | 04 | 0 | 0 |
| ரெய்லர் | LBW B அஸிஸ் | 47 | 44 | 05 | 01 |
| வில்லியம்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 76 | 65 | 07 | 01 |
| மிறி | C பரில் B நவீட் | 09 | 22 | 0 | 0 |
| எர்வின் | C& B சந்திரன் | 42 | 32 | 02 | 0 |
| சிக்கும்புறா | ஆட்டமிழப்பில்லை | 14 | 15 | 02 | 0 |
| உதிரிகள் | | 16 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| நவீட் | 10 | 60 | 01 | 01 |
| ஜவீட் | 09 | 49 | 01 | 0 |
| அஸிஸ் | 10 | 53 | 01 | 0 |
| மொகமட் | 09 | 51 | 02 | 0 |
| சந்திரன் | 09 | 59 | 01 | 0 |
| முஸ்ரபா | 01 | 08 | 0 | 0 |

TOTAL 286/6 (48)

1-64 (ரசா) 2-72 (மசகட்சா) 3-112 (சக்கபவ) 4-144 (ரெய்லர்) 5-167 (மிறி) 6 -250 (எர்வின்)

ஆட்ட நாயகன் வில்லியம்ஸ்

வீரர்கள். இதனால் 285 ஓட்டங்களை குவிக்க முடிந்தது. சற்றும் எதிர்பார்க்கவில்லை சிம்ப்பாவே. இலகு வெற்றி என்ற கனவு சென்று எப்படியாச்சும் வெல்லவேண்டும் என்ற எண்ணம் படிப்படியாக ஆட்கொண்டது.

ஆரம்பத்தில் சிம்பாப்வே நிதானம். அரைச் சதம் கடந்த முதல் இலக்கு இணைப்பு. வீழ்ந்த வேகத்தில் வந்த மஷகட்ஷாவையும் வெளியேற்றினர். ரெயிலர் கொஞ்சம் அடித் தாடினார். வில்லியம்ஸ் கைகொடுத் தார். ஐக்கிய அரசு இராட்சியத்துக்கு நெருக்கடி. பந்து வீச்சுபவர் பிளேக்கு முன்னதாக முடிந்தது ரெயிலரின் அதிரடி.

மிஷ் தாக்குப் பிடிக்கவில்லை. தோற்குமோ சிம்பாப்வே என்று எண்ணும் நிலை உருவாகியது. வில்லியம்ஸ் – எர்வின் ஏட்டிக்குப் போட்டியாக போட்டுத்தாக்க வெற்றி வாய்ப்பு கொஞ்சம் நெருங்கியது. பந்து வீச்சும், வெற்றிக்குத் தேவையான ஓட்ட மும் சமாந்தரப் பயணம். இதனால் ஆட்டம் திரிலானது. ஆனால் 48 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய நவீட் வாரிக் கொடுக்க வில்லியம்ஸ் சுழற்றி அடிக்க, சிம்பாப்வேயிடம் வந்து சேர்ந்தது வெற்றி. (5–ரி)

உலகக் கிண்ணம் தொடர்பாக முகநூலில் பதிவேற்றப்பட்ட சில நகைச்சுவைப் பதிவுகள்




# அனல் பறக்குமா இன்றைய ஆட்டம்




கொடுப்பது நியூஸிலாந்துக்கு வலுச்சேர்க்கிறது. வேகப்பந்து வீச்சாளர் போல்ட் தென்னாபிரிக்காவுடன் நடந்த பயிற்சி ஆட்டத்தில் 5 இலக்குகளையும், ஸ்கொட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 4 இலக்குகளையும் கைப்பற்றி சிறப்பான திறனில் உள்ளார்.

இங்கிலாந்து முதல் லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவுடன் படுதோல்வியடைந்தது. இங்கிலாந்து அணிக்கு பெரிய தலைவலியாக இருப்பது அணித்தலைவர் இயன் மோர்கனின் திறன். கடைசியாக துடுப்பெடுத்தாடிய 5 இன்னிங்ஸில் 2 ஓட்டங்களை மட்டுமே அவர் எடுத்துள்ளார். நியூஸிலாந்தைசமாளிக்கவேண்டுமானால், மோர்கன் மீண்டும் திறனுக்குத் திரும்புவது அவசியம். திறமையான துடுப்பாட்ட வீரர்கள் இருந்தபோதும், ஏனோ இங்கிலாந்து சொதப்பி வருகிறது. ஆஸ்திரேலியாவுடன் நடந்த முதல் லீக் ஆட்டத்தில், இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல், ஆஸ்திரேலிய வேகங்களுக்கு தங்கள் இலக்குகளை வாரி வழங்கினர்.

ஜேம்ஸ் ரெய்லர் மட்டும் தனி ஆளாக போராடி 98 ஓட்டங்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்த ஆட்டத்தில் இயன் பெல், கிறிஸ் வோக்ஸ் ஆகியோரும் ஓரளவு சிறப்பாக துடுப்பெடுத்தாடியிருந்தனர். இவர்களுடன் மொயின் அலி, பலன்ஸ்,ஜோ ரூட் கைகொடுக்கும் பட்சத்தில் நியூஸிலாந்துக்கு சவால் விடுக்கலாம்.

பந்து வீச்சில் ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்ரூவர்ட் பிரோட் அசத்த காத்திருக்கின்றனர். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கடைசி நேரத்தில் ஸ்டீவன் பின் 'ஹற்றிக்' கைப்பற்றி அசத்தினார். கிறிஸ் வோக்ஸ், மொயின் அலி ஆகியோர் பந்து வீச்சிலும் கை கொடுக்கலாம்.

நியூஸிலாந்து அணிக்கு இது மூன்றாவது ஆட்டமாகும். தொடர்ச்சியாக மூன்றாவது வெற்றியை பெற்று காலிறுதி வாய்ப்பைஅதிகரித்துகொள்ள நியூஸிலாந்தும், முதல் வெற்றியைப் பதிவு செய்ய இங்கிலாந்தும் போராடும் என்பதால், அனல் பறக்கும் ஆட்டத்தை ரசிகர்கள் பார்க்க முடியும். (5–ரி)

# வியூகம் வகுக்கும் மும்மூர்த்திகள்

இதேவேளை ஹரிகிறிஸ்டன் இந்திய அணி 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற போது அந்த அணியின் பயிற்சியாளராக இருந்தவர். இதனால் இந்தியாவின் ஒட்டுமொத்த சரித்திரத்தையும் தெரிந்து வைத்திருப்பவர்.

டுமினி, அம்லா ஆகியோர் வலைப்பயிற்சி செய்யும் போது, இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி ஹஸி டிப்ஸ் வழங்கி வருகிறார். அதே போல வேகப்பந்துவீச்சாளர்கள் மோர்னி மோர்கல், பார்னெலுக்கு வித்தியாசமான முறையில் அலன் டொனால்டு பயிற்சி அளிக்கிறார்.

ஆடுகளத்தில் வெவ்வேறு நீளங்களில் அடையாளங்களை வைத்து குறைவாக பவுன்சர்களை வீசவும், பார்னெல் நல்ல அளவில் யார்க்கர் பந்துவீச்சில் கவனம் செலுத்தும் வகையிலும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. (5–ரி)

# அதிரடி

களில் அவருக்கு மீண்டும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கும் வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கிறது. இந்த வாய்பை அவர் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சரியாகப் பயன்படுத்தினார். அரைச் சதம் அடித்து அசத்தியிருந்தார்.

இந்த நிலையில் தமது துடுப்பாட்ட பாணியை அவதானிக்கையில், துடுப்பாட்ட வரிசையில் ஆரம்ப இடத்தில் இருப்பது இலங்கை அணிக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று லஹிரு திரிமன்னே நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (5–ரி)

# இந்தியா அபாய அணியாம் !

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு பிறகு இந்திய அணி நல்ல நிலைக்கு திரும்பியது மிகவும் முக்கியமானதாகும். அந்த அணியின் பந்துவீச்சு கவலை அளிப்பதாக உள்ளது. எப்போதுமே பந்துவீச்சில் பலவீனம் தான். ஆஸ்திரேலியா போன்ற ஆடுகளங்களில் அவர்களது பந்துவீச்சு பலவீனமாகத் தான் இருக்கும். அதை சரி செய்யும் வகையில் துடுப்பாட்டம் பலம்வாய்ந்துகாணப்படுகிறது.

உலகக் கிண்ணத்தை கைப்பற்ற ஆஸ்திரேலியாவுக்கே அதிகமான வாய்ப்பு உள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆட்டத்திலேயே அந்த அணி மெய்சிலிர்க்கும் வகையில் விளையாடியது – என்றார். (5–ரி)

# ஆபிரிக்காவை இந்தியா அடக்கும்



உலகக் கிண்ணத் தொடரில் வரலாற்றை இந்தியா மாற்றி எழுதும் என்று தெரிவித்துள்ள இந்திய அணியின் முன்னாள் வீரர் வி.வி.எஸ். லக்ஷ்மன், தென்னாபிரிக்க அணியை இந்தியா வீழ்த்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் இந்திய – தென்னாபிரிக்க அணிகள் மோதிய மூன்று ஆட்டங்களிலும் (1992, 1999, 2011) தென்னாபிரிக்கா வென்றது.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன், இந்தியாவின் வெற்றி வாய்ப்பு குறைவாக கணிக்கப்பட்டது. ஆனால் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய துடுப்பாட்ட வீரர்களின் திறன், இந்தக் கணிப்பைப் பொய்யாக்கியது. கடந்த இரண்டரை மாதங்களாக இந்திய அணி, ஆஸ்திரேலிய மண்ணில் ஆட்டங்களில் விளையாடியதால், அங்குள்ள தட்பவெப்பநிலை, ஆடுகளத்தின் தன்மை குறித்து வீரர்கள் நன்கு அறிந்து கொண்டனர். இது, சாதிக்க உதவியது.

பாகிஸ்தானுக்கு எதிராக கிடைத்த வெற்றி இந்திய வீரர்களுக்கு மனதளவில் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த ஆட்டத்தில் துடுப்பாட்ட வீரர்கள் மட்டுமல்லாமல், பந்து வீச்சாளர்களும் திட்டமிட்டபடி சிறப்பாக செயல்பட்டனர். உமேஷ்; யாதவ், முகமது ஷமி ஆகியோர் சீரான இடைவெளியில் இலக்குகளை வீழ்த்தினர். அஷ்வின், ரவிந்திர ஜடேஜா சுழலில்' பாகிஸ்தானுக்கு நெருக்கடி கொடுத்தனர்.

உலகக் கிண்ணத்தில் இந்திய அணி, தென்னாபிரிக்காவை வென்றதில்லை என்ற சோகம் தொடர்கிறது.

இதனை இந்த முறை இந்திய வீரர்கள் முறியடிப்பார்கள் என்று நம்புகிறேன். தற்போதுள்ள இந்திய அணியில் திறமையான துடுப்பாட்ட வீரர்கள் நிறைய உள்ளனர். இவர்கள், ஸ்ரெயின், மோர்கல், இம்ரான் தாகிர் ஆகியோரின் பந்துவீச்சை எளிதாகச் சமாளித்து ஊட்டங்களைப் பெறுவார்கள்.

தென்னாபிரிக்க அணியின் பலம், பலவீனம் குறித்து இந்திய வீரர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதால், அதற்கேற்ப திட்டமிட்டு விளையாட முயற்சிப்பார்கள்.

இதனால் சுலபமாக வெற்றி பெறலாம்.

இந்தமுறை நியூஸிலாந்து அணி கிண்ணத்தை வெல்லும் அணிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. உலகக் கிண்ணத்தில் அரையிறுதிக்கு சுலபமாக முன்னேறும் நியூஸிலாந்து அணியால் ஒரு முறை கூட கிண்ணம் வென்றதில்லை.

ஆனால் கடந்த சில மாதங்களாக இவர்களின் செயற்பாட்டை வைத்துப் பார்க்கையில், இந்த முறை கிண்ணத்துக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாக தெரிகிறது – என்றார்.

## தினம் ஒரு பரிசுப் போட்டி 9

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் நாளைமறுதினம் (22.02.2015) அன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..............................................................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ......................................

முகவரி : ..............................................

..............................................

தொலைபேசி இல.: ......................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி, நாளை (21.02.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

..............................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

இறுதிப் போட்டிக்கு
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Jaffna
021 221 9910 / 077 710 2131
வழங்கும் 5 லட்சத்தை வெல்லுங்கள்

## அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)...................... 2)......................

3)...................... 4)......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

தொலைபேசி ......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015



தலா 5,000/= 20 பேருக்கு

## மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

......................

பெயர்: ......................

தே.அ.அ.இல. ......................

முகவரி. ......................

......................

தொலைபேசி

......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878 / 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லக்கி ப்பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கன்ன் போட்டோ**
165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சேலை**
இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்தி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வெலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோஸ்**
சித்தங்கேணி வீதி பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ 9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி மீசாலை சந்தி
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24. பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31 ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுபாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயண்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜாதேனீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தொழில் வியாபாரம் நல்லநிலைக்கு உயரும். போட்டிகள் நீங்கும். தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். நிலுவையில் உள்ள பணம் வந்து சேரும்.

**இடபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். மனோதைரியம் கூடும். சாமர்த்தியமான பேச்சால் எடுத்த காரியம் வெற்றிபெறும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மன குழப்பம் தீரும். வெளியூர் பயணவாய்ப்புகள் உண்டாகலாம். மனதில்தேவையற்றஎண்ணங்கள்ஏற்படும். திடீர்செலவு உண்டாகலாம். காரியங்களில் தடைதாமதம் ஏற்படும்.

**கடகம்:** தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்காமல் சற்று மந்தமாக காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்பு அதிகமாகும். முயற்சிகள் பயன் தராமல் போகலாம்.

**சிங்கம்:** குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். உறவினர்களிடம் வீண் மனஸ்தாபம் உண்டாகலாம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

**கன்னி:** வீண் மனக்கவலை உண்டாகலாம். காரியங்களில் தடை தாமதம், வீண் செலவு ஏற்படலாம். எதிர்பாராத துன்பமும், தொல்லையும் உண்டாகும். அதிகமான சுகபோகத்தால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

**துலாம்:** பணியாளர்கள் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். அனுபவபூர்வமான அறிவு கைகொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பார்கள். செயற்திறன் அதிகரிக்கும்.


**விருச்சிகம்:** குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நன்மையைத் தரும்.


**தனுசு:** பயணங்களின்போது கவனம் தேவை. மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். எதிர் பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும்.

**மகரம்:** வாழ்க்கை துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. வியாபாரம் தொடர்பாக செய்து முடிக்க நினைக்கும் காரியங்கள் தள்ளிபோகலாம்.

**கும்பம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். பிள்ளைகள் மூலம் மனம் மகிழும் காரியங்கள் நடக்கும். உறவினர்கள் வருகை இருக்கும்.

**மீனம்:** பேச்சுத்திறமையால் காரியங்களை சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். தேவையற்ற எண்ணங்களை விட்டுவிட்டு மனதை ஒருமுகப்படுத்துதல் வெற்றிக்கு உதவும். எதிலும் கூடுதல் கவனம் தேவை.




# செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று குழந்தை பிரசவிக்கும் ஆசை


செவ்வாய்க்கிரகத்துக்கு 2024 ஆம் ஆண்டில் பயணத்தை மேற்கொள்ள விண்ணப்பித்த இறுதி 100 பேரில், ஒருவரான பிரித்தானிய பெண்ணொருவர் செவ்வாய்க் கிரகத்தில் குழந்தையொன்றை பிரசவித்து அங்கேயே உயிரிழக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

செவ்வாய்க் கிரகத்தில் குழந்தையை பிரசவிப்பதிலுள்ள அபாயங்கள் குறித்து அறியப்படாத போதிலும், செவ்வாய்க் கிரகத்தில் முதலாவதாக குழந்தையை பிரசவிக்க எதிர்பார்த்துள்ளதாக மகிலியு (வயது-24) என்ற மேற்படி பெண் தெரிவித்தார்.

செவ்வாய்க் கிரகத்துக்கான ஒரு வழிப் பயணத்துக்கு விண்ணப்பித்த சுமார் 2 லட்சம் விண்ணப்பதாரிகளில் இறுதியாக தெரிவு செய்யப்பட்ட 100 பேரில் மகிலியு உள்ளடங்குகிறார். தனது தாயார் உட்பட தங்களது குடும்பத்தினர் அனைவரும் இந்தப் பயணத்துக்கு ஆதரவளித்துள்ளதாக மகிலியு தெரிவித்துள்ளதுடன், மகிலியு அவரது பெற்றோருக்கு ஒரே மகளாவார் என்பது குறிப்பிடத்தக்கது.



## மர்ம மூடுபனி



செவ்வாய்க்கிரகத்தில் மர்மமான மூடுபனி நிலை அவதானிக்கப் பட்டிருப்பது வானிலையாளர்களுக்கு மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பிரமாண்டமான மூடுபனி நிலை 2012 ஆம் ஆண்டு தன்னார்வ விண்ணியல் ஆராய்ச்சியாளர்களால் அவதானிக்கப் பட்டுள்ளது. அந்த ஆண்டில் இந்த மூடுபனி நிலை இருமுறை தோன்றி மறைந்துள்ளது.

இந்தப் பனிமூட்டம் சுமார் ஆயிரம் கிலோமீற்றர் வரை தோன்றி இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். இது பெரிய மேகமாக அல்லது துருவ ஒளியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

இந்த இரு கோட்பாடுகளில் எது சரியாக இருந்தாலும், செவ்வாயின் மேல் வளிமண்டலம் குறித்து இதுவரை நம்பி வந்த புரிதல்கள் தவறாகிவிடும் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறாயினும் செவ்வாய்க் கிரகத்தின் மெல்லிய மேற்பகுதி வளிமண்டலத்தில் இந்த மூட்டம் எவ்வாறு தோன்றியது என்பதை விஞ்ஞானிகளால் விளக்க முடியாதுள்ளது.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



'நேற்று உங்கள் காருக்கு எப்படி விபத்து நடந்திச்சு ?
'அதோ, அங்கே ஒரு மரம் தெரியுதா..?'
'தெரியுது'
'அந்த மரம் எனக்கு நேற்றுத் தெரியலை'

(கட்சி அலுவலகத்தில்)
**தொண்டர் 1 :** நம்ம தலைவர் தன்னோட எல்லா சொத்தையும் கட்சிக்கே எழுதி வைச்சிட்டாரு..!
**தொண்டர் 2 :** சந்தோஷமான விடயம் தானே..!
**தொண்டர் 1 :** அட போய்யா... கட்சியை அவரோட மகனுக்கு எழுதி வைச்சிட்டாரு..!!

## மீண்டும் பூனம் பாண்டே



2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியா அணி வெற்றி பெற்றால் மைதானத்தில் நிர்வாணமாக ஓடுவதாக அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தியவர் பூனம் பாண்டே.

கடந்த 15 ஆம் திகதி இந்தியா – பாகிஸ்தான் ஆட்டம் நடந்தது. அன்று ஹைதராபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு மும்பை விமான நிலையத்துக்கு வந்தார் பூனம். அங்கு தொலைக்காட்சியில் கிரிக்கெட் போட்டியை பயணிகள் ஆர்வமுடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்திய அணியின் ஆட்டம் ரசிகர்களை உற்சாக வெள்ளத்தில் ஆழ்த்தியது. அந்த நேரம் அங்குவந்த பூனம் பாண்டே ரசிகர்களோடு ரசிகராக நின்று கொண்டார். ஒவ்வொருமுறை நான்கு ஓட்டங்களை இந்திய வீரர்கள் விளாசியதும் நடனம் ஆடி அமர்க்களப்படுத்தினார். இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது.

நின்றிருந்த பயணிகளும் பூனம் பாண்டேயின் நடனத்தைக் கண்டு கும்மாளம் போட்டபடி நடனம் ஆடத் தொடங்கினர்.

இதையறிந்த விமான நிலைய பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த பூனம் பாண்டேயை அங்கிருந்து வெளியேற்றினர்.

இந்தச் சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

## சாவகச்சேரி கூ.சங்கத்தின் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

தென்மராட்சி, பெப்.20
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சங்க தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் சி.சிவதரன், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் செ.செல்வ குமாரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.
நிகழ்வில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள், கிளைக் குழு உறுப்பினர்களில் முதியோராக உள்ளோர், சங்க சேவையிலிருந்து இளைப்பாறிய மற்றும் சங்கத்தில் பணியாற்றி அரச பணி காரணமாக பதவிகளிலிருந்து விலகியோர் ஆகியோரைக் கௌரவித்து பரிசில் வழங்கல் போன்றவை இடம்பெறும். (வ-9)




## உடைத்த தேங்காயை மலர்த்தி வைக்கலாமா?

உடைத்த தேங்காயை மலர்த்தி வைப்பதைப் பார்த்தால் முதியோர்கள் கடுமையாகத்திட்டுவார்கள். மனிதச்சடலம் படுக்கவைத்திருக்கும் இடத்தில் அதற்குச் சமீபமாக எண்ணெய் ஊற்றி திரி கொளுத்தி வைத்திருப்பது உடைத்த தேங்காயிலாகும். இப்படி அமங்கலக் காரியத்தை நினைவூட்டுவதால் உடைத்த தேங்காயை மலர்த்தி வைப்பதைத் தடை செய்கின்றனர். மேலும் உணவுப் பொருளை மலர்த்தித் திறந்து வைப்பதால் அசுத்தமாகும் என்றும் உணர்ந்திருந்தனர். அன்னம் பிரம்மம் என்றும் அதை நிந்திக்கலாகாது என்று நம்முன்னோர்கள் நம்பியிருந்தனர். உணவுப் பொருள்களில் அடங்கியுள்ள சத்துக்களால் நாம் அடையும் பயன்களை நன்கறிந்திருந்த முன்னோர்கள் அவை அசுத்தப்படாமல் பாதுகாப்பதிலும் குறியாய் இருந்தனர். இது போன்ற விடயங்களில் கவனக்குறைவாக இருப்பதைத் தவிர்க்க, இவற்றை நம்பிக்கைகளும் ஆசாரங்களுமாகப் போதித்து வந்தனர்.
உணவுப் பொருள்களுடன் மரியாதையும் ஆதரவும் காட்டியிருந்த தலைமுறையிலிருந்து கிடைத்த படிப்பினைகள் நமது உணவுக் கலாசாரத்தின் பாகமாகிவிட்டன. உடைத்த தேங்காயை மலர்த்தி வைத்தால் கரப்பான் பூச்சி, பல்லி, எலி முதலிய தீய பிராணிகள் அதைத் தீண்டும். இதிலிருந்து விஷ அம்சங்கள் படிந்து நோய்கள் பரவும் நிலை உருவாகும். மலர்த்தி வைக்கப்பட்டிக்கும் பொருள்கள் தீய பிராணிகளை ஈர்க்கின்றன என்பதும் நிஜமே.

# இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமிழரின் நிலங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்

## இலங்கை அரசைத் தூண்டுமாறு தொல்.திருமாவளவன் இந்திய அரசிடம் வலியுறுத்து



சென்னை, பெப்.20
ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்துக்கு முன்னர் தமிழர்களின் நிலங்களை திரும்ப ஒப்படைக்க வேண்டுமென இந்தியா இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இலங்கையில் புதிய ஜனாதிபதி பொறுப்பேற்று பல வாரங்கள் கடந்த பின்னரும்கூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டிருக்கும் இராணுவம் திரும்பப் பெறப்படவில்லை.
இராணுவத்தை உடனடியாக திரும்பப் பெறுவோம் என்று வாக்குறுதி அளித்துத்தான் தமிழர்களின் வாக்குகளை மைத்திரிபால சிறிசேன பெற்றார். ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப் பதிலாக இனப் படுகொலைக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.
மார்ச் மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பான அறிக்கையை அடுத்த கூட்டத்துக்குத் தள்ளிப்போட இலங்கை செய்த முயற்சி வெற்றி பெற்றுவிட்டது.
செப்ரெம்பர் கூட்டத்தில் அது சமர்ப்பிக்கப்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கூறியிருக்கிறார். இலங்கைப் பிரச்சினையில் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையைப் போல தற்போதிருக்கும் ஆணையாளர் செயற்படுவாரா என்ற நியாயமான சந்தேகம் எமக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.
அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலவைத் தமது பிடிக்குள் வைத்துக் கொள்வதன்மூலம் இந்துமாக் கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தத் திட்டமிடுகின்றன.
எனவே நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரிபாலவின் தரப்பு வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகின்றன. ஆனால் தமிழ் மக்களின் நலனைப் புறக்கணித்து மைத்திரிபாலவை இந்தியா ஆதரிப்பது புதிராக இருக்கிறது. அப்படிச் செய்வது இந்துமாக்கடல் பகுதியில் அமெரிக்க ஆதிக்கம் பெருகவே வழிவகுக்கும். அது சுடுகிற சட்டிக்குப் பயந்து அடுப்புக்குள் குதித்த கதையாகவே இருக்கும்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் திரும்பப் பெறப்பட வேண்டும்,
இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் உடனடியாக தமிழ் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று இலங்கையை இந்தியா வலியுறுத்தவேண்டும்.
மைத்திரிபாலவுடன் போடப்பட்டிருக்கும் வர்த்தக ஒப்பந்தங்களுக்காக தமிழர் உரிமைகளைப் பலியிட்டு விடக்கூடாது என்று இந்திய அரசை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது-என குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்
சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களினால் வடிவமைக்கப்பட்ட முழுமைநல வாழ்விற்கு மனவளக்கலை யோகாப்பயிற்சிகள் மீண்டும் யாழ் மண்ணில் ஆரம்பமாகின்றது.

- காலம் : 21.02.2015 - 27.02.2015
  நேரம் : தினமும் பி.ப.4.30 மணி தொடக்கம்
  இடம் : நாச்சிமார் கோயில் திருமண மண்டபம், கே.கே.எஸ்.வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
- காலம் : 28.02.2015 - 06.03.2015
  நேரம் : தினமும் பி.ப.4.30 மணி தொடக்கம்
  இடம் : இணுவில் அறிவாலயம் (பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் முன்பாக)
- காலம் : 07.03.2015 - 13.03.2015
  நேரம் : தினமும் பி.ப.4.30 மணி தொடக்கம்
  இடம் : சிறுவர் மகிழ்வகம், கோப்பாய்.

பயிற்சி வழங்குபவர்
மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி எஸ். இந்திரா அம்மா அவர்கள்
அகத்தாய்வுப் பயிற்சிகள்
21.02.2015, 22.02.2015 - 28.02.2015, 01.03.2015 - 07.03.2015, 08.03.2015 ஆகிய சனி, ஞாயிறு தினங்களில் காலை 08.00 மணிதொடக்கம் பிற்பகல் ஒருமணி வரை பயிற்சிகள் நடைபெறும் தவமையங்களில் மனவளக்கலை யோகாப்பயிற்சிகளை பயின்று பயன்பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க்காணும் தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
கோவில் பிள்ளையார் வீதி, முதலாம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொடர்பு இலக்கம்
077 772 6732, 077 123 5646,
071 440 3268, 077 736 8745
021 320 2320, 077 937 1846

(56951)(45.3.7)



மணிவிழா அழைப்பு




யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்
பத்து ஆண்டுகளுக்கு மேலாக அதிபராக
சேவையாற்றி கடந்த 03.02.2015 அன்று
ஓய்வுபெற்றுள்ள
உயர்திரு
அருணாசலம் கயிலாயபிள்ளை
(B.A.Hons,PGDE,M.Ed, SLPS 1, SLEAS III, J.P.)
அவர்களது
மணிவிழா

காலம் : 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
இடம் : யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - அருணாசலம் மண்டபம்.
தலைவர்: ந.பாலச்சந்திரன் அவர்கள்
(பிரதி அதிபர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

இந்த மணிவிழா நிகழ்வில் தாங்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணிவிழாக் குழுவினர்.

(c 19784)(45.6.3)


## மாதர் சங்க அங்கத்தவருக்கான விளையாட்டுப் போட்டிகள் ஞாயிறன்று

தென்மராட்சி, பெப்.20
சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சங்க அங்கத்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய முன்றிலில் நடத்தவுள்ளனர்.
சங்க அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது பெண் பிள்ளைகளென இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பாரம்பரிய விளையாட்டுக்களான பந்துப் பரிமாற்றம், சங்கீதக் கதிரை, கயிறிழுத்தல், கிடுகு பின்னுதல், விநோத உடை, பூமாலை கட்டுதல், தேங்காய் துருவுதல், கலாசார உடை அணிதல், வேக நடை, முட்டி உடைத்தல் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும் என்று சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார்.
போட்டிகளில் வெற்றி பெறுவோருக்காக பரிசில்கள் எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி சங்கத்தால் நடத்தப்படும் மகளிர் தின விழாவில் வைத்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (வ- 9)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், பெப்.20
திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலையின் கால்கோள் விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் சன சமூக நிலையத் தலைவர் க.திருவரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மாகாணக் கல்வித்திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செல்வன், சிறப்பு விருந்தினராக வவுனியா தேசிய [illegible] யாளர் வே.ஞானசம்பந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.(வ)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சபாபதி கணபதி**

(ஊர்காவற்றுறை கால்நடை வைத்தியர்)

அன்னையின் மடியில் 11.05.1925 — ஆண்டவன் அடியில் 07.03.2000

திதி: துதியை

வாழ்வியல் சொல்லித்தந்து அறமும் சொல்லித்தந்து
தடம் புரளாமல் தாங்கி நின்று
விடைபெற்று பதினைந்து வருடங்கள்.....
புதிதாய் வந்தோர்க்கு பெரிய - அரவணைப்பாய் வாழ்ந்திருப்பீர்
வாழ்ந்ததை நினைத்து இன்னும் வாழ்ந்திருந்தால்

எனத் தவிக்கும்
குடும்பத்தினர்.
முகாம் வீதி,
ஊர்காவற்றுறை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சங்கரப்பிள்ளை நாகமுத்து**

(ஓய்வுபெற்ற PHFO)

தோற்றம் 04.12.1943.

மறைவு 02.03.2014

குடும்பத்தின் ஜீவனாகி குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும் ஆறாத உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு மீளாதோ உம் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண்மீது உமை எண்ணும் மனதோடு வாழ்கின்றோம்.

கைதடி மத்தி,
குமரநகர்.

**குடும்பத்தினர்.**

(56986)(4.3)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்**

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, சமாதான நீதிவான்)

மலர்வு 18.02.1942

உதிர்வு 06.03.2011

அகல் விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழி காட்டிய எம் தெய்வத்துக்கு
நான்காண்டு நிறைவதனில் அஞ்சலிகள் பல

என்றும் உங்கள் நினைவுகளில் ......
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரி, பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 19 . 09 . 1956



மறைவு 21 . 01 . 2015

56904(5.7)

**அமரர் பொன்னையா சுந்தரலிங்கம்**

(கிராம சேவையாளர்- உடையார்கட்டு வடக்கு, புதுக்குடியிருப்பு)

கடந்த (21.01.2015) புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (21.02.2015) சனிக்கிழமை 17ஆம் கட்டை, "அ" பகுதி, தேவிபுரம், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்றையதினம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

[எம்மால் அழைக்கத் தவறியவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

இனியவாழ்வு அருகில்,
வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு. **குடும்பத்தினர்.**


# மனிதாபிமான உதவி கோருகிறார் வவுனியா தினக்கூலித் தொழிலாளி

வவுனியா, பெப்.20

தினக்கூலித்தொழிலாளியின் வீடு அண்மையில் தீக்கிரையாகி முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது.

எனவே இதற்காக அவர் கருணை உள்ளம் கொண்டோரிடம் மனிதாபிமான உதவி கோரியுள்ளார்.

வவுனியா காத்தார் சின்னக் குளம் கிராம சேவை யாளர் பிரிவில் வசித்துவரும் துரைராசா அகிலன் என்பவரது வீடு கடந்த 16 ஆம் திகதி தீ விபத்துக்குள்ளாகி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.



இரண்டு பெண் ( வயது 14, வயது 10 ) பிள்ளைகளின் தந்தை யான இவர் தினக் கூலி வேலை செய்து தனது குடும்ப பொருளாதாரத்தைக் கவனித்து வந்தவராவார். அத்துடன் இவர் ஒரு நோயாளியும் கூட. பாடசாலை கல்வி கற்றலில் ஈடுபட்டு வரும் பிள்ளைகளின் கற்றல் உபகரணங்கள், உடு புடைவைகள், தளபாடங்கள் என்பன தீயில் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன.

துரைராசா அகிலனுக்கு உரித்து டைய ஒரு பரப்பு தாழ் நிலக்காணி உண்டு. அதில் கிரவல் நிரவி தற்காலிக வீடு அமைப்பதற்கும், பிள்ளைகளின் கல்விக்காகவும் உதவி கோருகின்றார். கருணை உள்ளம் கொண் டவர்கள் உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தீவிபத்தால் பாதிக்கப்பட்டுள்ள இந்தக்குடும்பத்தினரை வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராசா, வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கேசவன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து நிலைமைகளை அவதானித்து அத்தியாவசிய தேவைக்குரிய சிறு உதவிகளை வழங்கியுள்ளனர். (வ)

# சூழலைப் பேணாத காணிகளின் உரிமையாளர்கள் மீது வழக்கு

தென்மராட்சி,பெப்.20

டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய நிலையில் காணப்பட்ட பற்றைகளைத்துப்புரவுசெய்யாத இருகாணி உரிமையாளர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் படவுள்ளது.

சாவகச்சேரி நுணாவில்– கல்வயல் வீதியில் உள்ள இரு காணிகள் துப்புரவு செய்யப்படாமல் பற்றைகளாகக் காணப்பட்டதால் பல தடவைகள் அவற்றின் உரிமையாளர்களுக்கு டெங்கு நுளம்பின் அபாயம் தொடர்பாக அறிவுறுத்தியும் துப்புரவு செய்யப்படவில்லை.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகளின்போது அறிவுறுத்தியும் உரிமையாளர்கள் அசண்டையீனமாக இருந்ததால் காணிகளை துப்புரவு செய்யுமாறு ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டது. இந்தக் காலப் பகுதியிலும் துப்புரவு செய்யாததால் அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

# புளொட்டின் மறைந்த செயலதிபரின் பிறந்ததினத்தையொட்டிய நிகழ்வு

வவுனியா, பெப்.20

புளொட் அமைப்பின் மறைந்த செயலதிபர் அமரர் தோழர் க.உமாமகேஸ்வரனின் (முகுந்தன்) 70 ஆவது பிறந்த தின நினைவாக தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் ஊடகப் பிரிவால் "புறப்பட்ட புரட்சிப் புயலின் தலைவன் உமாமகேஸ்வரன், ஈழ விடுதலைப் போரை இதயத்தில் சுமந்த விடுதலை சூரியன், எங்கள் உமாமகேஸ்வரன்" எனும் பாடல் வெளியிடப்பட்டுள்ளது.



வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதாவாகிய க.சந்திரகுலசிங்கத்தால் (மோகன்) மறைந்த செயலதிபர் அமரர் தோழர் க.உமாமகேஸ்வரனின் 70 ஆவது பிறந்த தின நினைவாக வவுனியா பெரியமடு அம்பாள் வித்தியாலய மாணவர்களுக்கான ஒருதொகை கற்றல் உபகரணங்கள் வித்தியாலய அதிபர் த.அகிலனிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், செயலாளர் ஸ்ரீ.கேசவன், பொருளாளர் த.நிகேதன், இணைப்பாளர் எஸ்.சஞ்சீவன் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ–402)

# ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.20

உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நடத்தும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு நிலையத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். (வ)

# தமிழ்த்துறை பேராசிரியராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம், பெப்.20



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை இணைப் பேராசிரியராக கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவர் இதுவரை சிரேஷ்ட விரிவுரையாளராக அதே பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்தார்.

தமது தமிழ் மற்றும் சமய பேச்சாற்றலால் "வாகீச கலாநிதி" என்ற சிறப்புப்பட்டத்தையும்பெற்றிருந்தார். கலை, இலக்கிய ஆய்வுகளை மேற்கொண்டு எழுதிய "அறுபத்து நான்கு கலைகளும் கலையாக்கத் திறன்களும்" எனும் நூலை 2004 ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார்.

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எழுதிய ஆறு நூல்களின் வெளியீடு அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றது.(அ)

# சமாதான நீதிவானாக நியமனம்



பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவரும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தருமான திருமதி சசிந்திரன் லாஜினி ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் தீவு முழுவதுக்கு மான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். (வ)

* * *



புளியங்கூடல் வடக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றின் உத்தியோகத்தருமான திருமதி உதயகுமார் தனுஜா ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் வடமாகாணத்துக்கான சமாதான நீதிவானாகப் சத்தியப்பிரமாணம்செய்துள்ளார்.(வ)

# மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



யாழ்ப்பாணம்,பாஷையூரைச் சேர்ந்த விக்ரர் நிஷாந்தன் றனி அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் – ஆங்கில மொழி பெயர்ப்பாளராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில்சத்தியப்பிரமாணம்செய்து கொண்டார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கொழும்புத்துறை சென். யோசப் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுக் கொண்டார். பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிக இளமாணி பட்டத்தைப் பெற்று தற்போது அதே பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவ முதுமாணி கற்கை நெறியை தொடர்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.20
அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியா சாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமைபிற்பகல்1.30மணிக்குஅதிபர் சீ.சிவநேசன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய (ஆங்கிலம்) உதவிக்கல்விப்பணிப்பாளர் கோ.சுப்பிரமணியம் மற்றும் சிறப்பு விருந்தினராக குறித்த பாடசாலையின் ஓய்வு பெற்ற உப அதிபர் திருமதி பி.இராசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஜேர்மனியிலுள்ள நிறுவனம் ஒன்றின் முகாமையாளரான ஆர்.சி.இராமநாதன் கலந்துகொள்வார்.
திருமதி செல்வகுமாரி இராமநாதன் பரிசில்களை வழங்குவார். (வ)

* * *

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் யோ.ஜென ஆனந்தம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய ஆரம்பப் பிரிவு விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

# மாசிமக இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப்.20
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் மாசி மக இலட்சார்ச்சனை நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி வரை 10 தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெற்று மார்ச் 4 ஆம் திகதி புதன்கிழமை 81 கலச அபிஷேகம், ஸ்வர்ண பத்ம புஸ்பார்ச்சனை, உள் வீதியுலா ஆகியன நடைபெறவுள்ளன.
தினமும் காலை 8மணிக்கு பூசைகள் ஆரம்ப மாகவுள்ளன. (வ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.20
உசன் கந்தசாமி ஆலய திரவிய அபிஷேக ஸ்கந்த ஹோம மஹாயக்ஞம் நாளை மறு தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்ப மாக வுள்ளது. (வ)

* * *

தென்மராட்சி, பெப்.20
சாவகச்சேரி சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.
எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி தே[illegible]திருவிழாவும் மறுநாள் மாசி மகத்தன்று தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். பண்டிதர் கலாநிதி கு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழா கிரியைகள் இடம் பெறும்.
ஆலயகொடிக்கம்பத்துக்கான கொடிச் சேலை சங்கத்தானை இத்தியடி விநாயகர் ஆலய மக்களால் கொடியேற்ற தினத்தன்று ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வழங்கப்படவுள்ளது. (வ-9)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20
சுன்னாகம், கந்தரோடை வற்றாக் கைப்பதி விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாத சுவாமி கோயில் மஹாகும்பாபிஷேகத்தை அடுத்த மண்ட லாபிஷேகபூர்த்தி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (வ)

# ஓய்வுபெற்ற அதிபருக்கு பிரிவுபசார நிகழ்வு

தென்மராட்சி, பெப்.20
சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற அதிபர் அ.கயிலாயபிள்ளைக்கு கல்விச் சமூகத்தினரால் பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளது.
இந்த நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.
கல்லூரியின் பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பாராட்டுரைகளும் நூல் வெளியீடும் இடம்பெறும். விழா நாயகன் கல்விச் சமூகத்தினரால் சங்கத்தானை கந்தசுவாமி ஆலயத்திலிருந்து கல்லூரி மண்ட பத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படும்.
ஆசியுரையை சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களும் வரவேற்புரையை கல்லூரி அபிவிருத்திச் சங்க செயலாளர் ஆ.தங்க வேலுவும் நிகழ்த்துவர்.
வாழ்த்துரைகளை நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கிளிநொச்சி ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளரும் வடமாகாண கல்வி அமைச்சருமாகிய த.குருகுலராஜா ஓய்வு நிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வடமாகாண சபை உறுப்பின ருமாகிய ப.அரியரத்தினம், கல்லூரியின் பழைய மாணவனும் வட மாகாண சபை உறுப்பினருமாகிய கேசவன் சயந்தன், யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை உபவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் கந்தசாமி, கா.குகபாலன், ப.புஷ்பரத்தினம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உட்பட பலர் வழங்கவுள்ளனர்.
ஓய்வுநிலை அதிபர் சேவைகளை மையமாகக் கொண்ட மலர் வெளியீடும் இடம்பெறும். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் ச.லலீசன் மலரை வெளியிட்டுவைப்பார். (வ-9)

# 'ஒன்றிணைந்து எழுந்து குரல் கொடுப்போம்' அனுபவப்பகிர்வு

கிளிநொச்சி, பெப்.20
பெண்களின் மாற்றத்துக்கான செயற்பாட்டு வலையமைப்பினரால் 'ஒன்றிணைந்து எழுந்து குரல் கொடுப்போம்' என்னும் தொனிப் பொருளிலான அனுபவப்பகிர்வும், தொலைநோக்கும் நாளை சனிக் கிழமை காலை முதல் மாலை வரை கிளிநொச்சி கரைச்சி பிரதேச மண்டபத்தில் நடைபெற உள்ளது.
குழுக்களின் சுய அனுபவப்பகிர்வு, குழுக்களின் தொலைநோக்கு, நாடகம், நடனம், பெண்கள் தொடர்பான அணுகுமுறைகள் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவி மாவட்ட செயலர் சி.ச. கிருஷ்ணேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் உமாக்காந்தன் சிவகாமி, யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர், சட்டத்தரணி கோசலைமதன், கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் எ.நிறோஜா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (வ-21)

# உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.20
ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை 2015 பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் விசேட தேவையுடைய பரீட்சார்த்திகள் எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். விசேட தேவையுடைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் விசேட தேவையு டையோர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப் பித்தல் வேண்டும். முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் பின்னர் பாடங்களை மாற்றித் தனிப்பட்ட பரீட் சார்த் தியாக விண்ணப்பிக்கும் போது ஒப்படை வேலைகளுக்கு மாகாணத் திணைக்களத்தில் பதிவு செய்வதுடன் கட்டாயமாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கும் பரீட்சைக்கென விண்ணப்பிக்க வேண்டும் என்று யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)

# மலேரியா இரத்தக்கறை பரிசோதனை முகாம்

தென்மராட்சி, பெப்.20
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரும் மலேரியா தடுப்புப் பிரிவினரும் இணைந்து மலேரியா இரத்தக்கறை பரிசோதனை முகாம்களை தென்மராட்சி பிரதேசத்தில் நடத்தவுள்ளனர்.
இதன் முதலாவது பரிசோதனை முகாம் இன்று காலை 8 மணி தொடக்கம் மீசாலை சுடர்ஒளி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.
நாட்டில் மலேரியா இல்லாமல் ஒழிக்கப்பட்ட போதிலும் வெளி நாடுகளில் இருந்து வருவோர் மூலம் பரவக்கூடிய அபாயம் உள்ளதாக சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டதை அடுத்து பரிசோதனைமுகாம்களைநடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனைமுகாம்களில் அனைத்து மக்களையும் கலந்து கொண்டு தமது இரத்த மாதிரி களை வழங்குமாறும் அறிவித்துள்ளனர். (வ-9)


## கே அத்த
## ரந்திை கதர கே பணிப பணிம - ம
## 2015/2016 ஆப் டத்துக்குத் தேை ங்கக/ கே

01. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுகளுக்கு உட்பட்ட பின்வரும் வைத்தியசாலைகளுக்குப் பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கான பெறுகைகள் கோரப்படுகின்றன.
அ. சமைத்த உணவு வழங்கல் ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
இ. வாகன சுத்திகரிப்பு (Vehicle Servicing)
02. 2015 ஏப்ரல் 01 முதல் 2016 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கான இவ்வழங்கல்,சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. பெறுகை ஆவணங்கள் 23.02.2015 அன்று 09.00 மணி தொடக்கம் 13.03.2015ஆம் திகதி 15.00 மணிவரையும் அலுவலக நாள்களில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும்.
03. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ பெறுகைப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
04. விண்ணப்பிக்கத் தகுதியானோர் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றிற்கான பெறுமதி ஆவணத்தினைப் (Worth Certificate) பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கலாம். பெறுகைப்பத்திரங்கள் 18.03.2015 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை இவ் அலுவலகத்தால் ( பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார்) ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன் திறக்கப்படும்.

| இ. | நிங்க/ த்திளைிரிக | ழக்கபடரித த் தரிக | ழக்கபடுப் தரிக | பமதி ஆணப் |
|---|---|---|---|---|
| | அ. ளிமத்த உலை ங்க | | | |
| 1 | ரதேளி த்திளைிரி, ங்க | 500.00 | 33,000.00 | 170,000.00 |
| 2 | ரதேளி த்திளைிரி, அடப்ப | 250.00 | 17,000.00 | 90,000.00 |
| 3 | ரதேளி த்திளைிரி, தமரி | 250.00 | 7,000.00 | 35,000.00 |
| 4 | ரதேளி த்திளைிரி, டத்ததீ | 250.00 | 8,000.00 | 45,000.00 |
| 5 | ரதேளி த்திளைிரி, சிரிபத்து | 250.00 | 22,000.00 | 110,000.00 |
| 6 | ரதேளி த்திளைிரி, பேளிரி | 500.00 | 18,000.00 | 100,000.00 |
| 7 | ரதேளி த்திளைிரி, எக்கப்ட்டி | 250.00 | 5,000.00 | 25,000.00 |
| 8 | ரதேளி த்திளைிரி, நரிரிட்டரி | 250.00 | 6,000.00 | 30,000.00 |
| 9 | ரதேளி த்திளைிரி, ங்கரி - | 250.00 | 7,000.00 | 35,000.00 |
| 10 | ரதேளி த்திளைிரி, பபைண்டிச்ளிரி | 250.00 | 6,000.00 | 30,000.00 |
| | ஆ. அக்குத்துணிக ளி ளிய்த | | | |
| 0.01 | ரதேளி த்திளைிரி, ங்க | 250.00 | 2,500.00 | 12,000.00 |
| 2 | ரதேளி த்திளைிரி, அடப்ப | 250.00 | 1,000.00 | - |
| 3 | ரதேளி த்திளைிரி, தமரி | 250.00 | 1,000.00 | - |
| 4 | ரதேளி த்திளைிரி, டத்ததீ | 250.00 | 1,000.00 | - |
| 5 | ரதேளி த்திளைிரி, சிரிபத்து | 250.00 | 1,000.00 | - |
| 6 | ரதேளி த்திளைிரி, பேளிரி | 250.00 | 2,000.00 | - |
| 7 | ரதேளி த்திளைிரி, எக்கப்ட்டி | 250.00 | 1,000.00 | - |
| 8 | ரதேளி த்திளைிரி, நரிரிட்டரி | 250.00 | 1,000.00 | - |
| 9 | ரதேளி த்திளைிரி, ங்கரி | 250.00 | 1,000.00 | - |
| 10 | ரதேளி த்திளைிரி, பபைண்டிச்ளிரி | 250.00 | 1,000.00 | - |
| | உ.. ரிக றத்திக | | | |
| | ரி - 02, க்க -10, அப் - 18, ச்ளிக்கரண்டி - 02, ரி - 02 நடமரிடுப் பயசிகிச்ளி ரிகப்- 01 | 1,000.00 | 100,000.00 | 500,000.00 |

மேலதிக விவரங்களை நேரடியாக அல்லது தொலைபேசி இல 023-2223114 ஊடாகவும் விலைக்கேள்விப் பத்திரங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்தியகலாநிதி (திருமதி ).S.R.யூட்
தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைக்குழு,
வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,
சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்.

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி,பெப்.20

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுடன் மோதி பெண் உட்பட இருவர் காயமடைந் தனர்.

நேற்றுமுன்தினம் மாலை பளை, முல்லையடிப் பகுதியில் பயணிகளை இறக்கிக் கொண் டிருந்த பஸ் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் உடையார்கட்டைச் சேர்ந்த தம்பு ஜெயசிறி (வயது–52) என்பவரும்–

கச்சாய் பகுதியில் நேற்று வாகனத்துடன் மோதுண்டு கச்சாய் தெற்கைச் சேர்ந்த மகேந்திரன் சோமகலாவதி (வயது–44) என்பவரும் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவ கச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ–9)

# கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.20

மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும், இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்பத்தில் நடைபெறும். (வ)

* * *

வலி.வடக்கு, பெப்.20

கோண்டாவில் மேற்கு உப்புமடம் பிள்ளையார் ஆலய தர்மகார்த்தா சபை அமைப் பதறக்கான பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற் பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடை பெற வுள்ளது.

ஆலய பூசகருக்கும் பொது மக்களுக்கும் இடையே எழுந்த முரண்பாடு களைத் தொடர்ந்து யாழ் மாவட்ட அரச அதிபருக்கு பொது மக்கள்சார்பில்செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நல்லூர் பிரதேச செயலாளர் தலைமையில தர்மகர்த்தா சபை அமைப்பதற்கான பொதுக் கூட்டம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ–86)

* * *

யாழ்ப்பாணம், பெப்.20

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 48 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கண பதி பாலர் பாடசாலை மண்டபத்தில் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)

# இலவச கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம் பெப். 20

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணியளவில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப் படவுள்ளன.

நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடை பெறும் இந்த இலவச கண் வைத்திய முகாமுக்கு குறித்த பகுதிச்சுற்றாடலில் உள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள், வாசிப்பு குறைபாடு உடையவர்கள் கலந்து கொள்ளலாம் என நல்லூர் லயன்ஸ் கழகம் அறிவித்துள்ளது. (வ–ரி)

# கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.20

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் அர்ப்பணத்தின் ஆண்டை அர்த்த முள்ளதாக்க தவக்காலசிந்தனையில் 2015 ஆம் ஆண்டின் கருப்பொருளாக 'என் பின்னே வாருங்கள்' என்ற தலைப்பில் கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஆக்கங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், இல–200, குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (வ)

# கம்பத்துடன் மோதியதில் இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 19

மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதுண்டு ஆபத்தான நிலையில் தனித்தனி அம்புலன்ஸில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இந்த விபத்து தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர்களில் ஒருவர் மருத்துவ விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார். மற்றையவருக்குத் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கே.பிரசாத் (வயது 23), கிளிநொச்சி முழங்காவிலைச் சேர்ந்த எம்.ராம் (வயது 26) ஆகியோரே படுகாயமடைந்தனர். (வ–4–86)

# நடமாடும் சேவை

வலிகாமம் வடக்கு, தெல்லிப் பழை பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

அடையாள அட்டை விண் ணப்பம் அனுப்புவதற்காக பிறப்புச்சான்றிழ், விவாகப்பத்திரம், பொலிஸ் அறிக்கை, சத்தியக்கடதாசி, புகைப் படம், முத்திரை போன்ற ஆவணங் களுடன் பிரதேச செயலகத்துக்குச் சமுகமளிக்குமாறு வலி.வடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ)

# முன்னாள் முதல்வரின் கணவர் மறைவு



யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் கணவரும், முதல்வரின் பிரத்தியேக செயலாளருமான குணரத்தினம் பற்குணராசா செவ்வாய்க்கிழமை காலமானார்.

நல்லூர் முருகன் ஆலய பின் வீதியை சொந்த இடமாகக் கொண்ட குணரத்தினம் பற்குணராசா நோய்வாய்ப் பட்டு உயிரிழந்தார். (வ–14)

# சாதாரணதர பரீட்சைக்கான செயன்முறைப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.20

2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம் பெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதர பரீட்சைக்குரிய செயன்முறைப் பரீட்சை, எதிர் வரும்23ஆம்திகதிதொடக்கம்இடம்பெறும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் தொலைநகல் 0112784422 என்ற இலக்கத்துடனோ அல்லது யாழ். வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)


**தேவை**

- நெல் கொள்வனவு செய்யப்படும்.
- மில் வேலை தெரிந்தவர்களும் தேவை.

**மாரியன் மில்** T.P: 0777722215

**Aquamint**

சுத்தமான குடி தண்ணீர் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள மங்கள நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள்(Hall) விசேடவிலைக்கழிவு வழங்கப்படும்.
யாழ் மாநகரசபை எல்லைக்குள்
FREE HOME DELIVERY
TP : 021 491 3758, 077 982 9617

**துர்க்கா திருமண சேவை**

79 கார்த்திகை 3 செவ்வாய் இல்லை சூரியன் செவ்வாய் 5½பாவம் ஆஸ்திரேலியா சிற்றிசன் எலக்ரிக்கல் இஞ்சினியர் மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் வந்துள்ளார்.
துர்க்கா திருமண சேவை
349/73 பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொடர்பு - 077 818 5978

**Majestic Cineplex Jaffna**
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரோன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை: 021-2227712



**ST&S** — SINCE 1892

**லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பீ.எல்.சீ** LANKA ORIX FINANCE

**மாபெரும் ஏல விற்பனை–2015**

**பெப்ரவரி 25 ஆம் திகதி புதன்கிழமை**

**புகையிரத நிலைய வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா**

**நேரம் : காலை 10.00 மணி முதல்**

| கார் | | | |
|---|---|---|---|
| TATA 207DI | 2956CC | 2010 | NE PP XXXX |
| **நான்கு சக்கர ட்ராக்டர் (உழவு இயந்திரம்)** | | | |
| JOHN DEERE | 2300CC | 2011 | NP RC XXXX |
| JOHN DEERE | 2300CC | 2012 | NP RC XXXX |
| JOHN DEERE | 2300CC | 2012 | NC RC XXXX |
| MAHINDRA | 2523CC | 2011 | NP RC XXXX |
| MAHINDRA | 2523CC | 2011 | NP RC XXXX |
| MASSEY FERGUSON | 2500CC | 2011 | NP RC XXXX |
| TAFE | 2300CC | 2010 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2011 | EP RC XXXX |
| TAFE | 2250CC | 2005 | NP RA XXXX |
| TAFE | 2500CC | 2010 | EP RB XXXX |
| TAFE | 2500CC | 2010 | NC RB XXXX |
| TAFE | 2500CC | 2008 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2009 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE | 2500CC | 2011 | CP RC XXXX |
| TAFE | 2500CC | 2012 | NP RD XXXX |
| TAFE | 2500CC | 2012 | NP RC XXXX |
| **மோட்டார் சைக்கிள்** | | | |
| BAJAJ DISCOVER | 100CC | 2015 | NC BAW XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | NP BAV XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | NP BAX XXXX |
| BAJAJ DISCOVER | 124CC | 2012 | NP BAF XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2012 | NC BAL XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2013 | NC BAU XXXX |
| HERO HF DAWN | 100CC | 2013 | NP BAJ XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NP BAR XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NP BAD XXXX |
| HERO HONDA PLEASURE | 100CC | 2012 | NP BAA XXXX |
| HERO PASSION PRO | 100CC | 2013 | NP BAM XXXX |
| HERO HONDA PLEASURE | 100CC | 2013 | NP BAV XXXX |
| HERO HONDA PLEASURE | 100CC | 2013 | NC BAV XXXX |
| HERO X TREME | 150CC | 2013 | NP BAW XXXX |
| **லொறி (பாரவூர்தி)** | | | |
| TATA LPT 407 | 2956CC | 2010 | NP LI XXXX |

| மோட்டார் சைக்கிள் | | | |
|---|---|---|---|
| HERO X TREME APDS | 150CC | 2013 | NP BAG XXXX |
| HONDA ACTIVA | 110CC | 2013 | NC BAS XXXX |
| HONDA C50 | 49CC | 2010 | NC BAM XXXX |
| HONDA DIO | 110CC | 2013 | NP BAQ XXXX |
| HONDA TWISTER | 109CC | 2013 | NP BAT XXXX |
| TVS APACHE | 180CC | 2013 | NP BAP XXXX |
| TVS APACHE | 150CC | 2013 | NP BAO XXXX |
| TVS APACHE | 150CC | 2013 | NC BAR XXXX |
| TVS SCOOTY STREAK | 90CC | 2012 | NP BAA XXXX |
| TVS WEGO | 110CC | 2013 | NC BAK XXXX |
| TVS XL SUPER | 70CC | 2013 | NP BAO XXXX |
| **ட்ரக்** | | | |
| FOTON AUMARK | 1809CC | 2014 | NC PX XXXX |
| TATA ACE | 700CC | 2006 | NC LD XXXX |
| TATA ACE | 702CC | 2011 | NP PR XXXX |
| TATA ACE | 702CC | 2013 | SP PW XXXX |
| TATA ACE | 702CC | 2014 | NP PX [illegible] |
| TATA SUPER ACE | 1405CC | 2013 | NW PW XXXX |
| TATA SUPER ACE | 1405CC | 2013 | NP PW XXXX |
| **இழுவைக்கலம்** | | | |
| TRAILOR | | 2011 | NP RW XXXX |
| TRAILOR | | 2012 | NP RW XXXX |
| **முச்சக்கரவண்டி** | | | |
| BAJAJ | 145CC | 2001 | NP GI XXXX |
| BAJAJ | 174CC | 2009 | NP QU XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NC YC XXXX |
| BAJAJ | 198CC | 2010 | NC YG XXXX |
| BAJAJ | 198CC | 2013 | NC AAM XXXX |
| BAJAJ | 198CC | 2011 | NP YP XXXX |
| BAJAJ | 200CC | 2011 | NC YU XXXX |
| BAJAJ | 145CC | 2002 | NP GW XXXX |
| **இரு சக்கர உழவு இயந்திரம்** | | | |
| AESL 125-2 | 624CC | 2012 | NW SL XXXX |
| HIKARIE RV 145 | 738CC | 2011 | NC SL XXXX |
| SIFANG GN 12 | 815CC | 2013 | NC SM XXXX |
| SIFANG GN12 | 815CC | 2011 | NC SJ XXXX |
| **வான்** | | | |
| TOYOTA HIACE | 2770CC | 1991 | 58 XXXX |

**பார்வையிடல்:**

காலம்: 22, 23 மற்றும் 24 ஆம் திகதி பெப்ரவரி 2015

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை

விற்பனை நிபந்தனைகள்:

- நுழைவுரிமை: ஏலவிற்பனை நடைபெறும் தினத்தில் ஒவ்வொருவரும் உட்பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 500.00 ஐச் செலுத்துவதுடன் மீளச் செலுத்தப்படும் ரூபா 5,000.00 ஐ வைப்புச் செய்தல் வேண்டும்.
- கொடுப்பனவு: விற்பனை முடிவில் மொத்தத் தொகையில் 25% மீளளிக்கப்படாத காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் மார்ச் 04 2015 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு முன்னர் காசாகச் செலுத்தப்படுவதுடன், வாகனத்தையும் அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும். பணம் செலுத்தப்படுவதானது லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் பீ.எல்.சீ 27, 2 ஆவது குறுக்குத் தெரு, வவுனியா எனும் இடத்தில இடம்பெற வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையோ அல்லது வாகனங்களையோ ஏலவிற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

**ஷொக்மன் என்ட் சமரவிக்கிரம**

ஒரே தேசம் ஒரே ஏலதாரர்-122 ஆண்டுகள் அற்புத சேவையில்

தலைமைக்காரியாலயம் - காட்சியறை
24, ரொறிங்டன் வீதி, கண்டி
தொ.பே: 081 222 7593
தொ.ந:081 222 4371
ஈமெயில்: schokmankandy@sltnet.lk

SGS UKAS

நகர் அலுவலகம் - காட்சியறை
290, ஹவலக் றோட், கொழும்பு-05
தொ.பே: 011 250 2680, 2585 408
தொ.ந:011 258 8176
ஈமெயில்: schokman@samera1982.com

# உடல் நோய்கள் பலவற்றுக்கும் பிரதான காரணமாக அமைவது, முறையற்ற ஆகார ஜீரண செயன்முறையே...

**உணவு ஜீரணச் செயன்முறையை கிரமமாக்குவதன் மூலம் உங்கள் சுகவாழ்வு பாதுகாக்கப்படும்.**

**தினமும் ஸ்வஸ்த திரிபலா பாவிப்பதன் மூலம் ஆகார ஜீரண செயன்முறை சீராகும்.**

தினசரி பாவனை மூலம்

- உணவு ஜீரண செயற்பாடு கிரமமாகவும் முறையாகவும் நடைபெற உதவும்.
- வயிறு ஊதல் மற்றும் மலக்கட்டு நீங்கி மல வெளியேற்றம் கிரமமடையும்.
- ஈரலை பாதுகாத்து அதன் தொழிற்பாட்டை மேம்படுத்தும்.
- கண்பார்வையை மேம்படுத்தும்
- குருதி உற்பத்தியை அபிவிருத்தி செய்யும்
- சருமத்தின் மினுமினுப்பை அதிகரிக்கும்
- வயதுக்கு முன் மூப்படைதலை தடுத்து, இளமையை பேண உதவும்
- அதி உடற்பருமன், கொலஸ்டரோல், பெருவயிறு ஆகிய காரணங்களால் ஏற்படும் உபத்திரவங்களை கட்டுப்படுத்த உதவும்
- விஷ பதார்த்தங்களையும் கழிவுகளையும் உடலிலிருந்து வெளியேற்ற உதவும்

ஸ்வஸ்த திரிபலா பாவனை உபதேசம்

- சுகநலத்தையும் இளமையையும் பேணுதலுக்கு தினமும் 1-2 வில்லைகள் வீதம், நாளொன்றுக்கு இரு தடவைகள்.
- அதிக புளிப்புத்தன்மை, வயிற்று எரிவு, ஜீரணக் குறைவு மேலும் மானசீகத் தாக்கங்கள் காரணமாக ஏற்படும் கோளாறுகளுக்கு இரு (2) வில்லைகள் வீதம் நாளொன்றுக்கு இரு தடவைகள்
- மலக்கட்டு, மலம் வெளியேறுவதில் கிரமமற்ற நிலைகளில் 2-4 வில்லைவரை இரவு உணவுக்கு பின்பு பயன்படுத்தவும்

"வேலைப்பளு நிறைந்த உங்களுடைய ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கு...."

லிங்க் நெச்சுரல்

**ஸ்வஸ்த**

**திரிபலா**




கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் போன்ற பசும் மூலிகைகளாலான ஆயுர்வேத தயாரிப்பு.

Herbs proven in Ayurveda practice — Supported by Scientific Studies

முன்னணி பாமசி, தேசிய ஆயுர்வேத கடைகள் மற்றும் முன்னணி சுப்பர் மார்க்கட்டுகளில் பெற்றுக் கொள்ளலாம்

ஆண் பெண் இருபாலருக்கும் பலன் தரக்கூடியது

LINK NATURAL லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com


## அம்மாடியோவ் இத்தனை பரிசுகளும் எமக்கா?

# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணியகப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 — தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர்

பிரிவு B தரம் 6, 7, 8, 9 — பனை வளமும் நாமும்

பிரிவு C தரம் 3, 4, 5 — பண்டிகை நிகழ்வு

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

30 அகவையில் உதயன்

# இந்தியர் மீதான தாக்குதலுக்கு மன்னிப்புக் கோரியது அமெரிக்கா

வொஷிங்டன்,பெப். 20



அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்தியரொருவரை பொலிஸார் கொடூரமாக தாக்கிய சம்பவத்துக்கு அந்த மாகாணத்தின் ஆளுநர் மன்னிப்பு கோரியுள்ளார்.

இதுதொடர்பாக அமெரிக்காவின் அட்லாண்டாவில் உள்ள இந்திய துணைத் தூதர் அஜித் குமாருக்கு அலபாமா மாகாண் ஆளுநர் றொபர்ட் பென்ட்லி அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்தியர் சுரேஷ் பாய் படேலுக்கு எதிராக மேடிஸன் நகர பொலிஸார் கடுமையாக நடந்து கொண்டமைக்காகவும், அவரைக் காயப்படுத்தியமைக்காகவும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயத்திலிருந்து சுரேஷ் பாய் படேல் மீண்டு வந்து எழுந்து நடப்பார் என நம்புகிறேன். இந்தியர்களுக்கு துயரத்தை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்துக்காக நான் தெரிவிக்கும் ஆழ்ந்த மன்னிப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ–ரி)

# மக்களின் உடல் உறுப்புகளை விற்று நிதி திரட்டும் ஐ.எஸ்.

பாக்தாத்,பெப். 20



ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளைக் கைப்பற்றி ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசம் என்ற நாட்டை உருவாக்கி அங்கு வசிக்கும் வேற்று மதத்தினரையும், ஷியா முஸ்லிம்களையும் கொடூரமாகக் கொன்று குவித்து வருகிறார்கள். அவர்கள் தங்களது இயக்கத்துக்கு நிதி திரட்டுவதற்காக அப்பாவி மக்களைக் கொன்று அவர்களின் சிறுநீரகம் போன்ற உடல்உறுப்புகளை திருடுவதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்தத் தகவலை ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈராக் தூதர் நிக்கோலாய் மல்தனோவ் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட உடல்களைச் சேகரித்து பரிசோதனை செய்தபோது கொல்லப்பட்டோரின் உடலில் இருந்த சிறுநீரகம் மற்றும் உடல் உறுப்புகள் காணாமற்போய் இருந்தன. அவற்றை விற்று ஐ.எஸ். தீவிரவாதிகள் பணம் திரட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் மொசூல் நகரை கைப்பற்றும் போது மருத்துவமனைகளில் பணியாற்றிய ஏராளமான மருத்துவர்களை கடத்திச் சென்றனர். அவர்களை வைத்து மனித உறுப்புகளை அறுவை செய்து எடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)



# பிருத்வி - 2 ஏவுகணை சோதனை வெற்றி

புதுடில்லி,பெப்.20

ஒடிசா மாநிலம், சந்திப்பூருக்கு அருகில், பிருத்வி –2 ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பிருத்வி –2 ஏவுகணை, 500முதல் 1000 கிலோ எடையுள்ள அணுஆயுதங்கள், வெடிபொருள்களைச் சுமந்து, 350 கிலோமீற்றர் தொலைவு வரையுள்ள தரை இலக்குகளைத் தாக்கும் திறன் படைத்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# கனடா விமானத்தில் திடீர் தீ விபத்து

ஒட்டவ, பெப். 20



கனடாவில் நடுவானில் விமானம் பறந்து கொண்டிருந்த போது திடீரென தீ விபத்து ஏற்பட்டதால் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

கனடாவைச் சேர்ந்த விமானம் ஏ.சி 408, என்ற விமானம் 119 பயணிகளுடன் றொறான்டோவில் இருந்து மொன்றியல் நோக்கிப் பயணித்துள்ளது.

பயணம் ஆரம்பித்த சிலமணி நேரத்தில் விமானத்தின் சமையல் கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து விமானம் அவசர அவசரமாக அருகில் இருந்த ஒன்ராறியோ விமானத் தளத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. பயணிகள் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டனர்.



# திரைப்படத் தயாரிப்பாளர் டி.ராமாநாயுடு காலமானார்

புதுடில்லி,பெப்.20

பிரபல இந்திய திரைப்படத் தயாரிப்பாளர் டி.ராமாநாயுடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலமாகிவிட்டார். அவர் வசந்தமாளிகை, திருமாங்கல்யம், தனிக்காட்டுராஜா போன்ற தமிழ்ப்படங்களையும் தயாரித்தவர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் உடல்நலக் குறைவு காரணமாகச் சாவடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரையுலக வாழ்க்கையில் ஐந்து தசாப்தங்களை வெற்றிகரமாகத் தாண்டியுள்ளார். அவர் தயாரித்த திரைப்படங்களில் தான் பல இந்தியத் திரைப் பிரபலங்கள் அறிமுகம் செய்யப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரையுலகினருக்கு வழங்கப்படும் இந்திய அரசின் உயரிய விருதான தாதாசாகேப் பால்கே விருது மற்றும் பத்மபூஷண் விருதுகளையும் அவர் பெற்றுள்ளார். (ஒ–ரி)

# அணுசக்தி நீர்மூழ்கிகளை தயாரிக்க மத்திய அரசு ஒப்புதல்

புதுடில்லி, பெப்.20

இந்தியாவின் கடல்பாதுகாப்பையும், கடற்படையின் பலத்தையும் உறுதி செய்யும் விதமாக நீர்மூழ்கிக்கப்பல்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

இது குறித்து இராணுவ அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கையில் ;

இந்தியக் கடற்படைக்காக 24 நீர்மூழ்கி க்கப்பல்கள் தயாரிக்கப்படும். அதில் 18 நீர் மூழ்கிக் கப்பல்கள் டீசல் சக்தியால் இயங்கும் மரபு சார்ந்தவை என்றும் ஏனைய 6 நீர்மூழ்கிகப்பல்களும் அணுசக்தியால் இயங்கும் விதத்தில் தயாரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ அமைச்சகத்தின், பாதுகாப்புக்கான மத்திய அமைச்சர் குழுக்கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்றபோதே அவர் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார். (ஒ–ரி)





அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் பனிக்காலக் கொண்டாட்டத்தில் பனிப்பந்துப் போர் நடைபெற்று வருகின்ற காட்சி.

# இராணுவத் தளபாட உற்பத்தியை அதிகரிக்க மோடி நடவடிக்கை

சென்னை,பெப்.20



இராணுவத் தளபாடங்களுக்கு வெளிநாடுகளைச் சார்ந்திருக்காமல், அவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

பெங்களூர் விமானப் படை தளத்தில், 10ஆவது இந்திய விமானக் கண்காட்சியை அவர் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இராணுவத் தளபாடங்களை இறக்குமதி செய்வதில் இந்தியா முதலிடம் வகிக்கும் நிலை நீடிப்பதை ஏற்க இயலாது. உள்நாட்டிலேயே இராணுவத் தளபாடங்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதோடு அவற்றின் ஏற்றுமதிக்கும் வழிவகை காணப்படும்.

இராணுவப் படையையும் நவீனமாக்க வேண்டும்.

இந்தியாவில் இராணுவம் சார்ந்த தொழில்களைக் கொண்ட பொதுத்துறை நிறுவனங்களில் 2 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர். இராணுவம் சார்ந்த தொழில்களில் தனியாரின் பங்களிப்புமிகவும் குறைவாகும். இராணுவத் தளபாடங்களில் 60 சதவீதத்தைநாம் இன்னமும் இறக்குமதி செய்து வருகிறோம். இதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுகிறோம்.

இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தில் இராணுவம் சார்ந்த தொழில் முக்கிய பங்காற்றுகிறது. இராணுவக் கொள்முதல் கொள்கைகள், நடைமுறைகளைச் சீர்திருத்தி வருகிறோம். இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இராணுவத் தளபாடங்களுக்கு முக்கியத்துவம் அளிப்போம்.

ஏற்றுமதிக் கொள்கைகள் எளிமைப்படுத்தப்படும். மேலும், உயர்தர ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் நீடிக்கும். எமது பாதுகாப்புக் கருவிகள், தொழில்நுட்பங்கள் தவறானவர்களின் கைகளில் சிக்காமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இராணுவத் தளபாட ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும்.அடுத்த 5 ஆண்டுகளில் இராணுவத் தொழில் வர்த்தகம் இரட்டிப்பாகும். இதனால், நேரடி வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## லிபியாவுக்கு ஆயுத உதவி; ஐ.நாவிடம் எகிப்து கோரிக்கை

திரிபோலி,பெப்.20
லிபியாவில் தங்கள் நாட்டைச் சேர்ந்த 21 கிறிஸ்தவர்களின் தலையைத் துண்டித்துப் படுகொலை செய்த ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக, அந்த அமைப்பை எதிர்த்துப் போரிட்டு வரும் லிபிய இராணுவத்தின் மீதான ஆயுத ஏற்றுமதித் தடையை நீக்குமாறு ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் எகிப்து கோரிக்கை விடுத்துள்ளது.
எகிப்தியர்களின் படுகொலைக்குப் பழி வாங்கும் வகையில், லிபியாவிலுள்ள ஐ.எஸ்.தீவிரவாத நிலைகள் மீது எகிப்து நாட்டுப் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)




பிரான்ஸின் 131ஆவது கலாசார திருவிழாவின் அணிவகுப்பின்போது அரசனைச் சித்திரிக்கும் வகையில் இசைகளின் அரசன் என்னும் நிகழ்வில் வடிவமைக்கப்பட்டிருந்த உருவப்பொம்மை

## ரஷ்ய நகரில் ஒரே நேரத்தில் மூன்று சூரியோதயங்கள்

மொஸ்கோ, பெப்.20
கீழ் வானத்தில் ஏற்பட்ட ஒளியின் மாயை காரணமாக ரஷ்யாவின் நகரொன்றில் இருக்கும் மக்கள் ஒரே நேரத்தில் மூன்று சூரியோதயங்களைப் பார்வையிட்டுள்ளனர்.
ரஷ்யாவின் மேற்கு நகரான செலியாபிஸ்கில் இவ்வாறு அடிவானத்தில் ஒரே நேரத்தில் மூன்று சூரியோதங்கள் ஏற்பட்டதை அங்குள்ள பலரும் படம்பிடித்து சமூகத் தளங்களில் பதிவேற்றியுள்ளனர்.
வானில் ஏற்பட்ட பனிக்கட்டிப் படிகங்கள் உருவாக்கும் ஒளி வட்டத்தில் சூரிய ஒளி பட்டுத் தெறித்ததன் காரணமாக அவ்வாறானதொரு அரிய காட்சி வானில் தோன்றியிருப்பதாக உள்ளூர் வானியல் ஆய்வாளரொருவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ–ரி)





## சீனாவில் மனைவியை காப்பாற்ற 147 முறை குருதி தானம் செய்த கணவர்

பீஜிங், பெப். 20
சீனாவில் குருதிச்சோகை நோயால் பாதிக்கப்பட்ட தமது மனைவியைக் காப்பாற்ற அவரது கணவர் 147 முறை குருதித் தானம் செய்துள்ளார்.
சீனாவின் வடகிழக்கு ஜிலின் மாகாணத்தில் க்சூ வென்வூவும் அவரது மனைவி வாங்க்சியோயிங்கும் வசித்து வருகிறார்கள்.
கடந்த 2003ஆம் ஆண்டு மனைவி வாங்குக்குக் குருதிச்சோகை நோய் இருப்பது தெரியவந்துள்ளது.
அதனால் வாங்கின் கைகள் செயலிழந்ததுடன், இரும்புச்சத்து குறைவால் குருதியில் சிவப்பு அணுக்கள் உருவாக்கும் தகுதியை அவரது உடல் இழந்தது.
எனவே அடிக்கடி குருதியை மாற்றினால் தான் அவரால் தொடர்ந்து உயிருடன் வாழ முடியும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.
மனைவிக்காகத் தனது குருதியைக் கொடுக்க முன்வந்தார் வென்வூ. ஆனால் வென்வூவின் குருதியும் வாங்கின் குருதியும் வெவ்வேறு வகைகளானவை.
தேவைப்படும் வேளை நோயாளர்களுக்கு இலவசமாக குருதிக் கொடை வழங்க வேண்டுமென்ற சட்டம் அந்த நாட்டில் நடைமுறையில் உள்ளது.
அந்த சட்டத்தின்படி கடந்த 10 வருடங்களில் 147 முறை தனது குருதியை தானம்கொடுத்துள்ளார் வென்வூ.
அதாவது ஒரு வருடத்துக்கு சராசரியாக 15 முறை அவர் குருதிக் கொடை வழங்கி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதுகுறித்து வென்வூ தெரிவிக்கையில், எனது வாழ்நாள் முடியும் வரை, எனது மனைவி நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டும் என்பதே எனது ஒரே விருப்பம் என கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## திருவிழாவில் மின்சாரம் தாக்கி 16 பேர் சாவு

### ஹைதி நாட்டில் துயரம்



பிரின்ஸ், பெப்.20
ஹைதி நாட்டில் கலாசாரத் திருவிழா நடைபெற்றுள்ளது. விழாவின் போது கலந்து கொண்ட பாடகர் மின்சாரக் கம்பியை தவறுதலாக தொட்டதில் அருகில் இருந்தவர்கள் மீதும் மின்சாரம் பாய்ந்தது. இதனால் அவர்கள் அனைவரும் தூக்கி வீசப்பட்டனர். அதில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.
இதன் காரணமாக விழாவில் கலந்து கொண்ட மக்களிடையே பீதி ஏற்பட்டது.அதனையடுத்து அனைவரும் சம்பவ இடத்தில் இருந்து தப்பி ஓட முயற்சித்தனர். இதனால் நெரிசல் ஏற்பட்டுள்ளது. அந்த நெரிசலில் சிக்கி 78 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். படுகாயம் அடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.
அந்தத் துயர சம்பவத்தையொட்டி ஹைதி நாட்டில் 3 நாள் துக்கம் அனுசரிக்க அரசு முடிவு செய்திருப்பதாக பிரதமர் இவான்ஸ் பால் தெரிவித்துள்ளார்.மேலும்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை ஜனாதிபதி மிச்சேல் மார்டெலி நேரில் சென்று சந்தித்து ஆறுதல் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## தங்க நாணயப் புதையல்; இஸ்ரேல் கடல் பகுதியில் மீட்பு

### ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாம்

ஜெருசேலம்,பெப்.20
இஸ்ரேலின் மத்தியதரைக் கடல் பகுதியில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தங்க நாணயப் புதையலை சுழியோடிகள் கண்டெடுத்துள்ளனர். அதில் 2,000 தங்க நாணயக் குற்றிகள் இருந்ததாகத் தெரிவிக் கப்படுகிறது.
செசரியாவின் பண்டைய துறைமுகப் பகுதியில் இஸ்ரேலில் இதுவரைக்கண்டுபிடிக்கப்பட்டதில்மிகப் பெரிய தங்க நாணயப் புதையலில் இதுவே மிகப் பெரியது என இஸ்ரேல் அரசு தெரி வித்துள்ளது.
கடலுக்கடியில் புதையல்களை தேடும் சுழியோடிகளின்குழுவொன்றினாலேயே அந்தத் தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை மொத்தமாக ஒன்பது கிலோகிராம் நிறை கொண்டவை என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.




இந்தத் தங்க நாணயங்கள் பாதிமித் கலீபத் காலப்பகுதிக்குரியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
எகிப்தில் இருந்த மத்திய அரசுக்கு வரிப்பணத்தை ஏற்றிச் சென்ற கப்பல் விபத்துக்குள்ளானதில் இந்த நாணயங்கள் கடலில் புதையுண்டிருக்கலாம் என்று இஸ்ரேல் தொல்பொருள் நிபுணர் கொபிஹெர்வித்குறிப்பிட்டுள்ளார்.
இந்தப் புதையல் அரச சொத்தாகப் பிரகடனப்பட்டிருப்பதால் அதனை கண்டுபிடித்தவர்களுக்கு எந்த கொடுப்பனவும் வழங்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

## நைஜீரிய பொதுத் தேர்தல்; நடத்த விடமாட்டோம்

### போகோ ஹராம் தலைவர் மிரட்டல்

அபுஜா,பெப்.20
நைஜீரிய அரசால் எதிர்வரும் மார்ச் மாதம் 28ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள பொதுத் தேர்தலை நடத்த விடமாட்டோம் என போகோ ஹராம் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.
அந்த அமைப்பின் தலைவர் அபுபக்கர்ஷேகாசமூகவலைத்தளத்தில் தெரிவிக்கையில்;
நைஜீரியாவில் தேர்தல் நடத்தினால் அதனைத் தமது அமைப்பினர் தடுப்பார்கள். தாம் உயிரோடு இல்லாமல் போனால் கூட தேர்தலை நடத்த முடியாது என்றும் கடவுள் அதற்கு அனுமதிக்கமாட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே, போகோ ஹராம் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து தேர்தலைத் தேர்தல் ஆணையகம் ஆறு வாரங்களுக்குத் தள்ளிவைத்ததால்தற்போதைய அரசுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ள நிலையில் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
நைஜீரியாவில் மதவாத ஆட்சியை வலியுறுத்தி போகோ ஹராம் தீவிரவாதிகள் கடந்த 6 ஆண்டுகளாக நடத்தி வரும் தாக்குதல்களில், ஏறக்குறைய 13,000 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# இலங்கையில் ஆயுதப் போராட்டம் இனிமேல் சாத்தியமே இல்லை!



கொரில்லாவில் தொடங்கி 'கண்டி வீரன் வரையிலும் தமிழ் இலக்கியப் பரப்பின் தனித்துவக் குரல். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இயங்கி, பின்னர் அதில் இருந்து விலகி, புலிகளை இப்போதுவரை கடுமையாக விமர்சித்து வருபவர். சமகாலத்தின் சிறந்தகதை சொல்லிகளில் ஒருவரான ஷோபா சக்தி, இப்போது கதாநாயகன். தீபன் என்ற பிரெஞ்சு திரைப்படம் ஒன்றில் நடிக்கிறார். பாரீஸில் இருந்து ராமேஸ்வரத்தில் கடைசிக்கட்டப் படப்பிடிப்புக்காக வந்திருந்தவரிடம் பேசினோம்...

"பிரான்ஸில் புகழ்பெற்ற இயக்குநர் ஜாக் ஓடியார் இப்போது இயக்கும் படம் தீபன். ஈழத்தின் போர்ச் சூழலில் இருந்து தப்பித்து புலம்பெயர்ந்து பிரான்ஸுக்கு வரக்கூடிய மூன்று பேரைப் பற்றியது. அகதியாக வந்து புது நாட்டில் புதுச் சூழலில் எப்படி வாழ்கிறார்கள்,அதற்காகஎப்படிப்போராடுகிறார்கள் என்பதுதான் கதை. அதில் தான் நான் நடித்திருக்கிறேன். திடீரெனக் கூப்பிட்டார்கள். திரைக் கதையில் வேலைபார்க்க அழைக்கிறார்கள் என நினைத்துதான் போனேன்.ஆனால்,நடிக்கச் சொல்லிக்கேட்டு, நான் நடித்து, படமே முடிந்துவிட்டது." என்றார்.

### நடிப்பை சமாளித்த விதம்

'நான் குழந்தைப் போராளி மட்டும் இல்லை; குழந்தை நடிகனும்கூட. பத்து வயதில் இருந்தே கூத்துகளில் நடித்திருக்கிறேன். பிரான்ஸுக்குச் சென்ற பிறகு நாடகங்களில் நடிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தப் படத்தில் நடிப்பதற்காக, ஒருவரை நியமித்து நடிக்கப் பயிற்சி கொடுத்தார்கள். முதல் தடவையாக வாழ்க்கையில் பிடித்த வேலையை, சம்பளம் வாங்கிக்கொண்டு செய் கிறேன்."

### சினிமாவுக்குள் எழுத்தாளர்கள்

இலக்கியவாதிகள் சினிமாவுக்குச் செல்லும்போது சினிமாவை ஓர் அங்குலமேனும் முன்னே நகர்த்த வேண்டும். ஆனால், இலக்கியத்தில் அவ்வளவு தரத்தைப் பார்க்கும் நமது எழுத்தாளர்கள், சினிமாவில் அனைத்து சமரசங்களுக்கும் ஆட்பட்டு, மலினமான திரைப்படங்களில் பணிபுரிகிறார்கள். வாயைத் திறந்தால் ரஜினி சார், மிஷ்கின் சார் என வணிக சினிமாக்காரர்களாக மாறி விடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை எந்தவிதமான வணிக சமரசத்துக்கும் ஆட்படாத படங்களில் மட்டும்தான் வேலை பார்ப்பேன். இந்த அடிப்படையில் இதுவே என் கடைசிப்படமாகவும் இருக்கக்கூடும்."

### தமிழீழப் போராட்டத்தின் எதிர்காலம்

"இலங்கையில் இனி ஆயுதப் போராட்டம் சாத்தியமே இல்லை. ஆயுதப் போராட்டங்கள் உருவான

**நமக்கு அறம் சார்ந்து ஆயிரம் எதிர்பார்ப்புகள் இருக்கலாம். ஆனால், எதையும் யதார்த்தத்தில் இருந்து பரிசீலிக்க வேண்டும். என்னளவில் இலங்கை — இந்தியா ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைபடுத் தப்பட வேண்டும் என்கிறேன்.**

காலகட்டம் வேறு. இன்று தலைமுறைகள் மாறிவிட்டன. நாம் 80களில் சிந்தித்ததுபோல இப்போதைய தலைமுறையினர் சிந்திப்பது இல்லை. உலகம் முழுக்க இருந்த புரட்சிகரச் சூழல், தேசிய விடுதலைப் போராட்டங்கள், மார்க்ஸியச் சூழல்கள் இன்றைக்கு இல்லை. இலங்கையில் மட்டும் அல்ல... உலகம் முழுவதுமே இது தான் நிலை.

சமீபத்தில் இலங்கையில் அதிபர் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு,மைத்திரிபாலசிறிசேன வெற்றிபெற்றுள்ளார். இதற்கு முந்தைய தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையின் மீது செல்வாக்கு செலுத்தும் சக்திகளாக விடுதலைப் புலிகள் இருந்தனர். ஆனால், இந்த முறை ராஜபக்ஷவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற சுயமுடிவை எடுத்து தமிழ் மக்கள் வாக்களித்தனர். இப்போது மக்களின் மனநிலை, நாம் நினைத்தது நடந்துவிட்டது என்பதுதான். தங்களின் செல்வாக்கு வரம்புக்கு உட்பட்டு ராஜபக்ஷவைத் தோற்கடித்ததன் மூலம், மனதில் இருந்த கோபத்தின் சிறுபகுதியைத் தணித்துக்கொண்டார்கள். ஆனால், மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதன் மூலம் தமிழர்களுக்கு எந்த நன்மையும் நடந்துவிடப் போவது இல்லை. சில தமிழர்களுக்கு அதிகாரத்தைச் சுவைக்கக் கொடுப்பதாலேயே, தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்துவிடாது.

### மக்கள் போராட்டங்கள்

மக்கள் போராட்ட இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு லாயக்கு இல்லை; அவர்களிடம் அப்படி ஒரு நோக்கமே இல்லை. கூட்டமைப்பினர், இந்த நாடாளுமன்ற அமைப்புமுறைக்குள் பதவிகளைப் பெற்று அதிகாரத்தைச் சுவைப்போரின் அங்கமாகவே மாறிவிட்டனர். ஆனால், இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான் காலம், காலமாக மக்கள் ஆதரித்தும் வந்துள்ளனர். ஒரு வகையில் பார்த்தால் விடுதலைப் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்ற ஆயுதம் தாங்கிய இயக்கங்களை விட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரவாயில்லை. அவர்கள் யாரையும் கொலை செய்யவில்லை. இந்த இயக்கங்கள் இவ்வளவு உயிர்களைக்கொடுத்து. இவ்வளவுமக்களைசாவுகொடுத்து சாதித்தது என்ன? கொழும்பில் இருந்த இராணுவத்தை இழுத்துக்கொண்டு வந்து அல்லைப்பிட்டியில் விட்டதுதான் மிச்சம்.




இலங்கையில் தமிழர் தரப்பிலும்சிங்களவர்தரப்பிலும் சேர்த்து இதுவரை மூன்று மிகப் பெரிய ஆயுதப் போராட்டங்கள் நடந்துள்ளன. மூன்றிலுமே ஆயுதம் தூக்கியவர்கள், மக்களுக்கு எதிராகத் தான் மாறினார்கள். அதனால் மக்களுக்கு ஆயுதப் போராட்டங்கள் மீது என்றென்றைக்கும் மறக்கவியலாத கசப்பான நினைவுகள் தான் மிஞ்சியிருக்கின்றன. நாம் விளைவுகளை வைத்துதான் ஒவ்வொன்றையும் மதிப்பிட வேண்டியுள்ளது. அப்படிப் பார்த்தால் ஆயுதப் போராட்டத்தைவிட தேர்தல் அரசியல் சிறந்தது. நாங்கள்தப்பித்துவிட்டோம்.ஆனால், போரிலும் அதற்குப் பிறகும் அங்கு சிக்கிக்கொண்டிருக்கும் மக்களின் நிலைமை என்ன? பிள்ளைகள் பாடசாலை போகவேண்டும், மக்கள் வேலைக்குப் போகவேண்டும், உணவு வேண்டும், உயிர் பயம் இல்லாமல் நிம்மதியாக வாழ வேண்டும்... இதற்கு, சுமுகமான வாழ்க்கை வேண்டும். இதைத் தான் மக்கள் விரும்புகின்றனர். உலகத்திலேயே மிகக் கடுமையான ஆயுதப் போராட்டத்தை நடத்திப் பார்த்துவிட்டுத் தான், இந்த மன நிலைக்கு மக்கள் வந்துள்ளனர்.

### குரேஷிய அதிபர் சொன்னது

முள்ளிவாய்க்காலில் கடும் சண்டை நடந்துகொண்டிருந்தபோது குரேஷியா அதிபர் சொன்னதை இங்கு நினைவுகூருகிறேன்... 'பத்து நாள்கள் சண்டை நடத்தி தீர்வு காண்பதைவிட, பத்து ஆண்டுகள் பேச்சு வார்த்தை நடத்தலாம். அதை நான் வழிமொழிகிறேன்."

"பிரச்சினை என ஒன்று இருந்தால் அதற்கு தீர்வும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. இலங்கையில் பிரச்சினை மட்டும்தான் இருக்கிறது."



நமக்கு அறம் சார்ந்து ஆயிரம் எதிர்பார்ப்புகள்இருக்கலாம்.ஆனால், எதையும் யதார்த்தத்தில் இருந்து பரிசீலிக்க வேண்டும். என்னளவில் இலங்கை – இந்தியா ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைபடுத்தப்பட வேண்டும் என்கிறேன். இப்போது நடைமுறையில் உள்ள மாகாண சபை என்பது, அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதிதான். கிழக்கில் ஒரு தேர்தல் நடத்தி வடக்குடன் இணைந்திருப்பதா, தனித்திருப்பதா என்பதை முடிவுசெய்யவேண்டும். இதற்கு அப்பால் ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான போராட்ட இயக்கங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதற்கு முன்பு, மக்கள், ஆயுதப் போராட்டக்கலாசாரத்தில் இருந்து முற்றிலுமாக விடுபட வேண்டும். 'பிரச்சினை என்றால் போட்டுத் தள்ளுவோம் என்ற மனநிலையில் இருந்து, பேச்சு வார்த்தைக்கு அழைப்போம் என்ற மனநிலைக்கு வரவேண்டும். தமிழர், சிங்களவர் இரு தரப்பிலும் உள்ள ஜனநாயக சக்திகள் ஐக்கியப் படுவதன் வழியே, ஒரு நீண்ட காலத் தீர்வை நோக்கி நகர முடியும். அதற்கு, சிங்களப் பேரினவாதமும், கடும்போக் குத் தமிழ்த் தேசியவாதமும் கைவிடப்பட வேண்டும்."

### ஜெயலலிதாவுக்கு தண்டனை

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கப்பட்டதும், 'செல்வி ஜெயலலிதா, பதவியை இழந்து சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வு தமிழீழ மக்களுக்கு மிகுந்த மன வேதனையைத் தருகிறது என நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் அறிக்கை வெளியிட்டார். தமிழ் சினிமாக்காரர்கள், 'தெய்வத்துக்கே தண்டனையா? எனக் கூறியதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இல்லை. நடந்து முடிந்த இலங்கை அதிபர் தேர்தலில், தமிழ் மக்கள் என்ன நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்றுகூட அவர் சொல்லவில்லை. அவர்களால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை."

### தமிழக அகதிகள்

"லட்சக்கணக்கான தமிழ் மக்கள், முகாம்களில் வாழ்கிறார்கள். 30 வருடங்களுக்கு முன்பு இங்கு வந்தவர்களின் குடும்பங்களில் இங்கேயே பிறந்து வளர்ந்த ஒரு தலைமுறை உருவாகியிருக்கிறது. அவர்களுக்கு இதுதான் சொந்த நாடு. அவர்களை எப்படிக் கட்டாயப்படுத்தி வெளியேற்ற முடியும்? அப்படி அனுப்பினால் கிட்டத்தட்ட அது ஸ்ரீமாவோ–சாஸ்திரி ஒப்பந்தம்போன்று அமைந்துவிடும். தமிழ்நாட்டில் இருந்து சென்று இலங்கை மலையகப் பகுதிகளைச் செப்பனிட்டு தேயிலை, கோப்பித் தோட்டங்களாக மாற்றியவர்களை மறுபடியும் அள்ளிக் கொண்டு வந்து தமிழகத்தில்தள்ளியதைபோன்று தான் இருக்கும். அப்போது இலங்கையில் இருந்து தமிழகம் வந்த மக்களை மலையகத்தில் இருந்து அழைத்து வந்த ரயிலுக்கு 'அழுகை கோச்' எனப் பெயர். அந்த அளவுக்கு மக்கள் அந்த மண்ணோடு ஒன்றிப் போய் இருந்தார்கள். அதே போன்ற நிலைமைதான் இங்கும் காணப்படுகின்றது. மீண்டும் இலங்கைக்குச் செல்லும் வாய்ப்பைப் பயன்படுத்துவதும் நிராகரிப்பதும் மக்களின் விருப்பம். பல ஐரோப்பிய நாடுகளில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்தாலே, குடியுரிமை கொடுத்து விடுகிறார்கள்!" என்றார்.

நன்றி – விகடன்

# வாசகர் திருமுகம்



## உடுவில் அம்பலவாணர் வீதி முழுமையாகச் செப்பனிடப்படுவது எப்போது?

காங்கேசன்துறைவீதியில் றொட்டியாலடியிலிருந்து கந்தரோடை (கற்பொக்கணை) கந்தையா உபாத்தியாயர் வீதி வரையான மூன்று கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட அம்பலவாணர் வீதி வலி.தெற்குப் பிரதேச சபையின் அதிகாரத்துக்கும் பராமரிப்புக்கும் உரித்தான வீதியாகும்.

இந்த வீதி 1997ஆம் ஆண்டில் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டது. அதன் பின்னர் 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அவ்வருடம் முடிவதற்குள் அவசர அவசரமாக அரைகுறையாக முழு வீதியின் அரைவாசி தூரத்துக்கு மட்டும் அதாவது செபமாலை மாதா ஆலயம் வரை புனரமைப்புச் செய்யப்பட்டு, வேலைகள் யாவும் முடிக்கப்பட்டன.

அப்போது மீதித்தூரம் ஏன் செப்பனிடவில்லை என உயர் அதிகாரிகளிடம் வினவியபோது 'நெல்சிப்' திட்டத்தினூடாக பாதையை அகலமாக்கி விரைவில் புனரமைப்பு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை புனரமைப்பு ஏதும் இடம்பெறவில்லை. தற்போது இந்த வீதி முழுவதும் சிதைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த வீதியின் பல இடங்களில் பெரிய குழிகளும் காணப்பட்ட போதிலும், கடந்த வாரம் ஓரிடத்தில் காணப்பட்ட குழியை மட்டும் கற்கள் போட்டு நிரப்பி தார் ஊற்றப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதாவது எதிர்காலத்தில் இந்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்படாது அவ்வப்போது சிறு சிறு திருத்தங்கள் மட்டும் தான் செய்யப்படுமா என மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

தற்போது பல ஒழுங்கைகளில் முழுமையான புனரமைப்பு இடம்பெறுகின்றது. ஆகவே வலி. தெற்கு பிரதேச சபை வரவு -செலவு திட்டத்தினூடாக சபை நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து முழுமையாகப் புனரமைப்புச் செய்யமுடியாதா? மக்களின் இந்தக் கேள்விக்கு பிரதேச சபைத் தலைவரின் பதிலை அந்தப் பகுதி மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

*பாரூ, அப்பலவாணர் வீதி ,உடுவில்.*

## தாமதமாகப் புறப்படும் பஸ்கள்

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சேவையில் ஈடுபடும் 786 ஆம் இலக்க அரச மற்றும் தனியார் பஸ்கள் காலை நேரத்தில் தமது நேர அட்டவணையின் பிரகாரம் சேவையில் ஈடுபடாமல் தாமதமாகச் செயற்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.


அரை மணி நேர இடைவெளியில் இந்த பஸ் சேவை இடம்பெற வேண்டியுள்ள நிலையில் 10 அல்லது 20 நிமிடங்கள் தாமதித்தே சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இதனால் அரச, தனியார்துறை ஊழியர்களும் பாடசாலை செல்லும் மாணவர்களும் மருத்துவமனைகளுக்குச் செல்பவர்களும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே தனியார் மினிபஸ் சங்கத்தினரும் இ.போ.ச.டிப்போ முகாமையாளரும் இந்த விடயத்தில் தலையிட்டு நேர அட்டவணையின் பிரகாரம் பஸ்சேவைகள் இடம் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

*சு.பரந்தாமன், மூளாய்*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# பார்த்திருக்கிறதா உயர்கல்வி அமைச்சு?

பல்கலைக்கழக பகிடிவதையால் மீண்டும் ஒரு உயிர் பறிக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில், முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் பகிடிவதை காரணமாக தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

ஹோமகமவைச் சேர்ந்த 21 வயதான அமாலி என்ற மாணவியே இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டவராவார். கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்ற அவர், பகிடிவதையைத் தாங்க முடியாமல் கடந்த வருடம் மார்ச் மாதம் வீட்டுக்கு திரும்பி வந்துள்ளார். பின்னர், படிப்பைத் தொடர்வதற்காக பல்கலைக்கழகத்துக்குச் சென்றிருந்த அந்த மாணவி, மனதளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவர், தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

பகிடி வதையால், உயிர் பறிக்கப்படுவது இதுதான் முதல் முறையல்ல. கடந்த காலங்களிலும் இவ்வாறான மோசமான சம்பவங்கள் நாட்டில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றிருக்கின்றன. இதன் பின்னர், பல்கலைக்கழக பகிடிவதைக்கு எதிராக நாடு முழுவதிலும் இருந்து கடும் கண்டனங்கள் எழுந்தன. இதனையடுத்து, பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறு உயர் கல்வி அமைச்சு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கு கடுமையான உத்தரவுகளை வழங்கியிருந்தது.

பகிடிவதை என்ற போர்வையில் உடல் ரீதியான துன்புறுத்தல்கள், பாலியல் துன்புறுத்தல்கள், காயம் விளைவித்தல், சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபட வற்புறுத்துதல் போன்ற முறையற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சிரேஷ்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் புகுமுக மாணவர்களை வற்புறுத்துகின்றனர்.

உயர் கல்வி என்ற கனவுடன் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் மாணவர்களுக்கு பகிடிவதையால் தமக்கு ஏற்படும் தாக்கங்களையும், வேதனைகளையும், மனக் கஷ்டங்களையும், மானபங்கத்தையும் தாங்கிக்கொள்ள முடியாமல் இவ்வாறான விபரீத முடிவுகளுக்குச் சென்று விடுகின்றனர்.

தமது பிள்ளை எதிர்காலத்தில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்பதற்காக பெற்றோர் பிள்ளையின் உயர் கல்வியில் அதிக அக்கறை காட்டுகின்றனர். அவ்வாறு ஒரு பிள்ளை பல்கலைக்கழக அனுமதி பெற்றுவிட்டால், அது போன்றதொரு மகிழ்ச்சி பெற்றோருக்கு வேறில்லை. அந்தளவுக்கு பல்கலைக்கழக அனுமதி முக்கியத்துவம் பெற்று விளங்கும் நிலையில் அதற்குத் தகுதிபெறும் மாண வர்களை, பகிடிவதை என்ற போர்வையில் வதைத்து– துன் புறுத்தி அவர்கள் பின்னர் மோசமான முடிவுகளை எடுக்கும் நிலைக்கு தள்ளுவது என்பது, மிகப்பெரிய குற்றமாகும்.

தமது பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலவரும் சக மாணவரையே இவ்வாறு கீழ்த்தரமாக நடத்துவது என்பது ஒரு போதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமல்ல. உயர் கல்விக்காகவே பல்கலைக் கழகத்துக்கு செல்லும் மாணவர்கள் தமக்குரிய உயர் பண்புகளை விடுத்து, இவ்வாறு சக மாண்வர்களை வருத்தி, துன்புறுத்தி, கேலி செய்து நோகடிக்கும் செயற்பாடுகள் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்படவேண்டும்.

பகிடிவதையால் மாணவர்கள் உயிரிழப்பது இலங்கையில் வருடா வருடம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. உயர் ஒழுக்க விழுமியங்களை–பல்கலைகளை கற்பிக்கும் ஒரு நிறுவனத்தில் இவ்வாறான கிருமினல் நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்கவேகூடாது. உயர் கல்வி அமைச்சு இந்த விடயத்தில் அதிக அக்கறைகாட்டி, பல்கலைக்கழகங்களிலிருந்து இந்த மோசமான பகிடிவதையை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அவ்வாறு பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு எதிரான தண்டனைகளை இறுக்கமாக்கி, எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் சுதந்திரமாக–நிம்மதியாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும். புதிதாக அனுமதிபெறும் மாணவர்களை, மோசமான தண்டனை வழங்கி வதைப்பதை விடுத்து மகிழ்ச்சிகரமான வரவேற்பை வழங்கி அவர்கள் பல்கலைக்கழகக் கல்வியில் மேலும் ஆர்வம் காட்ட தூண்டவேண்டும். இதற்காக உயர்கல்வி அமைச்சு விசேட திட்டத்தை வகுத்துச் செயற்படவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், பகிடி வதையால் ஏற்படும் உயிர் பறிப்புகள் மேலும் அதிகரிப்பதுடன், பல்கலைக்கழகக் கல்வியில் மாணவர்கள் ஆர்வ மற்றுப் போகும் நிலையும் எதிர்காலத்தில் ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை - இந்திய அரசுகளின் கண்ணாமூச்சி விளையாட்டில் அகதிகள்

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மறுவாழ்வு வழங்கப்பட்டு, அவர்களது வாழ்வுரிமை உறுதி செய்யப்பட்ட பின்னரே --

இந்தியாவில் (தமிழகத்தில்) தங்கி உள்ள ஈழத்தமிழ் அகதிகளை, அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்புவது குறித்துச் சிந்திக்க இயலும் --

இந்தக் காத்திரமான, கனதியான கருத்தை முன் வைத்திருக்கிறார் தமிழகத்தின் ஆளுநர் கே.ரோசையா.

அவர் தமது கருத்தைப் பொது நிகழ்வு எதிலும் தெரிவிக்கவில்லை. தமிழ்நாடு சட்ட மன்றத்தில் (உத்தியோகபூர்வமாக) ஆற்றிய உரையிலேயே வெளிப்படுத்தி இருக்கிறார்.

இலங்கையில், அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், இன நல்லிணக்கம் குறித்த எதிர்பார்ப்புக்களை உண்டாக்கி இருப்பது உண்மையே. எனினும் அங்கு நிலவும் பயம் மற்றும் மிரட்டல் நிறைந்த சூழல், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொள்ள வைக்கப்பட்டிருப்பது, உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களே அவர்களது சொந்த இடங்களில் இன்னமும் மீள் குடியேற்றப்படாமல் இருப்பது --

அவை குறித்து இலங்கையின் புதிய அரசு எந்த வகை முடிவையும் மேற்கொள்ளாதிருப்பது போன்றவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் --

இலங்கைத் தமிழ் அகதிகள் தமது தாயகத்துக்குத் திரும்பிச் செல்வதற்கு உகந்த தருணம் இன்னமும் உதவாகவில்லை. ஆகையால் அது குறித்து விவாதிப்பதற்கான தருணம் வரவில்லை -- என்றே கொள்ள வேண்டியுள்ளது என்று ஆளுநர் அறுத்து உறுத்து எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் நியாயமான, அமைதியான முறையில், உரிய மரியாதையுடன் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட வேண்டும். இது விடயத்தில் தமிழக அரசு உறுதியாக உள்ளது - என்றும் தமிழக ஆளுநர் விலாவாரியாக எடுத்து இயம்பி உள்ளார்.

அத்தோடு நிற்காமல் --

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள், தாயகம் திரும்புவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதனை நாடிய பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டு, உள்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு (சுயாட்சி மற்றும்) ஜனநாயக உரிமைகளை முழுமையாக வழங்க வேண்டும் --

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு -- அங்கு இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு - மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் --

அவற்றின் பின்னரே, தமிழகத்தில் தஞ்சம் பெற்றுள்ள. இங்கு வாழும் இலங்கைத் தமிழ் அகதிகள் தமது தாயகம் திரும்புவது குறித்துச் சிந்திக்க இயலும். அதுவே தமிழக அரசின் நிலைப்பாடாகும். கருத்தாகும் என்று மிகவிஸ்தாரமாக இயம்பி உள்ளார்.

இதே வேளை -

தமிழகத்தின் சட்டப்பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரை, மத்தியில் ஆட்சி நடத்தும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு வயிற்றில் புளிகரைத்தது போன்று அமைந்திருப்பதை, அந்தப் பக்கத்தில் இருந்து வந்த கருத்துக்கள் மூலம் அனுமானிக்க முடிகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளின் பிரச்சினையை தமிழக அரசு திசை திருப்புவதாக, மத்திய அரசின் ஆளும் கட்சியின் தமிழகத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சுட்டிஉள்ளதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இத்தனைக்கும், கடந்த ஜனவரி மாதம் முற்பகுதியில் நடைபெற்ற இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பின் போது --

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாகவே தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு ஊக்குவிக்கப்படுவர் என்று இணக்கம் காணப்பட்டது.

இந்த இழுபறிகளின் மத்தியில், தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் ஒரு லட்சம் இலங்கை அகதிகளில், 68,000 பேர் அரச நலன்புரி நிலையங்களில் தங்கி இருப்பதாக அந்த மாநிலத்தின் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் குறித்து, புதிய கொழும்பு அரசே தந்திரமாக ஓடிப்பிடித்து விளையாடும் போக்கை கடைப்பிடிக்கும்போது --

இந்திய அரசும் தனக்கு உள்ள கெட்டித்தனத்தை உயர்த்திக் காட்டுவதற்கு, முன்னேறுவதற்கு முயல்வதில் ஆச்சரியம் எதுவுமில்லை! இத்தகைய பின்னணியில், இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில், அவர்களை எவ்வாறேனும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்பதே புதுடில்லி அரசின் உள்ளார்ந்த எதிர்பார்ப்பு. இது துலாம்பரமாகப் புலப்படுகிறது.

மொட்டு மொத்தத்தில், தமிழ் மக்களின் வாக்கு பலத்தால் மலர்ந்த அரசு சுவையில் விழுந்தாலும், நம்ப ... தொடர்ந்தும் ஆழக் குழிக்குள்ளேயே ... சிறு எடுகோள் ...



# ஐ.எஸ். தீவிரவாதத்தை ஒழிப்பதில் தாமதம் ஏன்?

ராஜராஜன்

ஐ.எஸ்.தீவிரவாதிகளின் கொடிய செயல்கள் உச்சக் கட்டத்தை எட்டிவிட்டன. ஈராக் தேசத்தின் இரண்டாவது பெரிய நகரமான மொசூல் பகுதியைக் கைப்பற்றி அங்கு தனிநாடு ஒன்றை நடத்திவரும் இந்தத் தீவிர்வாதிகள் எவருக்கும் அஞ்சாத நிலையில் தமது மூர்க்கம் நிறைந்த கொடிய செயல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

தமக்கு வேண்டாதவர்களின் தலைகளைக் கொய்து விடுவது இவர்களுக்கு மிகவும் உவப்பானதொரு தண்டனை முறையாகும். குற்றம் ஏதும் புரியாத பிற நாடுகளைச் சேர்ந்த அப்பாவிகள் பலர் இவ்வாறு தலை கொய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த விமானி ஒருவர் இவர்களால் பெற்றோல் ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தப்பட்டார். தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டதாகக் கூறி ஒருவரை உயர்ந்த கட்டடம் ஒன்றி லிருந்து கீழே தள்ளிக் கொலை செய்துள்ளனர். தகாத செயல்களில் ஈடுபட்டதாகக்கூறிப் பெண்கள்சிலர் மக்கள் முன்னிலையில் கல்லால் அடித்துக் கொலை செய் யப்பட்டனர். வேறு சிலரின் கைகளைத் துண்டு துண்டாக வெட்டியுள்ளனர். ஐ.எஸ். தீவிரவாதிகளால் எகிப்து நாட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட குற்றம் எதுவும் அறியாத 12 கிறிஸ்தவர்களின் தலைகள் துப்பாக்கிகளால் சல்லடை யாக்கப்பட்டன. மேலும், தமது தடையை மீறி கைபேசிகளைப் பயன்படுத்தியவர்களுக்கு கசையடித் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இறுதியாக

ஈராக்கில் வைத்து 45 பேர் ஐ.எஸ். தீவிரவாதிகளால் எரியூட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு தினமும் இந்தத் தீவிரவாதக் குழுவினரின் அட்டகாசம் தொடர்கின்றது. ஐ.எஸ்.தீவிரவாதிகள் தலையெடுப்பதற்கு அரபு நாடுகள் சிலவற்றில் அமெரிக்கா மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளே காரணமாக அமைந்து விட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவின் அதிரடி நடவடிக்கை காரணமாக லிபிய நாட்டின் அரசுத் தலைவராக இருந்த முகம்மர் கடாபியும், ஈராக் ஜனாதிபதியாகவிருந்த சதாம் ஹுசைனும் பதவிகளை இழந்தது டன், இந்த உலகத்தை விட்டே சென்று விட்டனர். எகிப்திய அரசுத் தலைவராக இருந்த ஹொஸ்னி முபாரக்கூட தமது பதவியிலிருந்து தூக்கப்பட்டார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள், அந்த நாடுகளின் கட்டமைப்பைச் சீர்குலைத்ததுடன் பாதுகாப்பும் கேள்விக் குறியாக மாறிவிட்டது. சிரிய நாட்டில் கூட நிலையற்றதொரு நிலைமை காணப்படுகின்றது. அந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன. ஏராளமான பொது மக்கள் அரசு ஆதரவு பெற்ற குழுக்களால் அங்கு படுகொலை செய்யப்பட்டு விட்டனர். இவையாவும் முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களுக்குச் சாதகமாக

அமைந்துவிட்டன. இந்த நிலையில் இஸ்லாமிய நாடு என்பதைக் குறிக்கும் வகையில் ஐ.எஸ்.எனத் தமக்குப் பெயரைச் சூட்டிக் கொண்ட இந்தத் தீவிரவாதக் குழு சிரியா மற்றும் ஈராக்கின் சில நிலப் பகுதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு, இஸ்லாமிய தேசம் என்ற பெயரில் தனிநாடு ஒன்றை அமைத்துக் கொண்டு, மனித குலத்துக்கு எதிரான அட்டூழியங்களைப் புரிந்து வருகின்றது. லிபியாவிலும் அந்தக் குழுவினர் கால் பதித்து விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா உட்பட வேறு சில நாடுகள் இவர்களை அழிப்பதற்கு விமானத் தாக்குதல்களை மேற்கொண்ட போதிலும், ஐ.எஸ்.தீவிரவாதிகளின் பயங்கரவாதச் செயல்கள் குறைந்ததாகத் தெரியவில்லை. இதனை உணர்ந்து கொண்ட அமெரிக்கா தரை வழியிலான படை நடவடிக்கையை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது. ஆனால் ஐ.எஸ். குழு வினரின் செயல்களைப் பார்க்கும் போது ஆலோசனை செய்வதற்கான தருணம் இதுவல்ல என்பது புலனாகின்றது.

சில மேற்குலக நாடுகளில் தாக்குதல்களை மேற்கொண்டுவரும் இந்தத் தீவிரவாதக் குழுவினர் மத்திய கிழக்குக்கு அப்பாலும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்திவிடுவார்களென்ற எண்ணப்பாடு தோன்றியுள்ளது.

ஆகவே உலகையே அச்சுறுத்தி வரும் இந்த தீவிரவாதக் குழுவை முற்றாக ஒழித்து விடுவதற்கு அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தருணம் இதுதான் என்பதை பல தரப்பினரும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

இது தவறவிடப்படுமாயின் இந்த முழு உலகமுமே ஐ.எஸ்.தீவிரவாதிகளால் அச்சுறுத்தப்பட்டுச் சீரழிக்கப்படும் நிலைஉருவாவதை எந்தச்சக்தியாலும் தடுக்க முடியாது என்றும் அந்தத் தரப்பினர் எச்சரிக்கின்றனர்.



சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் - வீ.எஸ்.ரீ

# நல்லாட்சியும் பேய் ஆட்சியும்

## ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரியவின் கருத்து



“ முன்னைய அரசின் நிர்வாகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்த இரகசிய ஆவணங்களைக் கண்டுபிடித்தாலும் கூட அவை இரசாயனப் பகுப்பாய்வு மூலம் உண்மையானவை என உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதன்பின்னரே சட்டமா அதிபரது ஆலோசனைக் கமைய மேல் நடவடிக்கைகளைத் தொடரமுடியும். இவற்றை மேற் கொள்ள சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் அவசியமான ஆளணி வசதிகள் உள்ளதாகக் கூற இயலாது. இதுவோர் பெரிய விசாரணை நடவடிக்கை என்பதால் அதற்காக குறித்ததொரு கால அவகாசம் தேவைப்படும். இத்தகைய வழக்கொன்று முறைப்படி விசாரிக்கப்படு மானால் அதனை நூறு நாள்கள் அவகாசத்தில் விசாரிக்க இயலாது. அத்தோடு குற்றவாளிகளாக இனங் காணப்படுவோருக்குத் தண்டனை வழங்க மேலும் கால அவகாசம் தேவைப்படும் என்பதே நல்லாட்சியின் யதார்த்தம்.

நாட்டு மக்களது சொத்துக்களையும் நிதியையும் பெரிய அளவில் கொள்ளையடித்த சகல அரசியல்வாதிகளையும் தராதரம் பாராது கைது செய்து அவர்கள் மீது வழக் குப் பதிவுசெய்து, உரிய தண்டனை பெற்றுக் கொடுக்கப்படுவது அவசியமென ஹெலஉறுமயகட்சியின்தலைவர் ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தி வருகிறார். இதனை மைத்திரிபால சிறிசேனவின் அரசு தனது நூறு நாள்கள் வேலைத்திட்டத்துள் உள்ளடக்கி உரிய நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறுமானால் ஹெல உறுமய, அரசுக்கானதனது ஆதரவை விலக்கிக் கொள்ள நேரிடுமென அவர் எச்சரித்துள்ளார். அதேசமயம் எதிர்க்கட்சித் தலைவரும் மனச்சாட்சியுள்ள அரசியல்வாதியுமான நிமல் சிறிபால டி சில்வா, நாட்டில் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படும் முன்னைய அரசின் அரசியல்வாதிகள் மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு, குற்றவாளிகளென நீதிமன்றத்தால் இனம் காணப்படும் எந்தவொரு நபருக்கும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட வேட்பாளர் நியமனம் வழங்கப்படமாட்டாது எனத்தெரிவித்துள்ளார். நிமல்சிறிபால டிசில்வா மனச்சாட்சியுள்ள அரசியல்வாதி மட்டுமன்றி, திறமை வாய்ந்ததொரு முன்னாள் சட்டத்தரணியும் ஆவார். முன்பொருசமயம் சுதந்திரக்கட்சி பொதுத்தேர்தலில் படுதோல்வியைச் சந்திருந்தவேளையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர், சுதந்திரக்கட்சியின் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக வழக்குகள் தொடுத்த வேளையிலும், சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொண்ட வேளையிலும், அவர்களுக்கு எதிரான சகல வழக்குகளிலும் அவர்களுக்காக முன்னிலையாகி வழக்காடியவர் நிமல் சிறிபால டிசில்வாவே. எனவே அவர் சட்டத்தின் ஆதிக்கத்தை நிலை நிறுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஏற்படத்தக்க தாமதம் குறித்து நன்கு உணர்ந்துள்ள ஒரு பிரமுகரே. அந்த வகையில் உரிய வேளையில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஊழல் மோசடிக்காரர்களைக் கைது செய்தாலும், அவர்களுக்கெதிராக வழக்குகளைத் தாக்கல் செய்தாலும், குறிப்பிட்ட இந்த நூறு நாள்கள் அவகாசத்துக்குள் அந்த வழக்குகளுக்கான தீர்ப்பை பெற்றுக் கொள்ள இயலாதென்பதை அவர் நன்கறிவார்.





இந்த விடயத்துக்கான முக்கிய காரணம், ஜனாதிபதித் தேர்தலின்போது எதிரணியினர் தமது வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொண்ட முக்கிய ஆயுதம், ராஜபக்ஷ அரசின் ஊழல் மோசடிகளே என்பதாகும். ராஜபக்ஷ அரசின் கீழ் செயற்பட்டு எத்தகைய ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகாத அமைச்சரொருவரான சம்பிக்க ரணவக்க, அதிவேக நெடுஞ்சாலைகள் அமைத்ததில் பெரும் நிதி மோசடிகள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தியிருந்தார். அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக அரசு பதிலெதுவும் அளிக்காததால், நாட்டு மக்கள் அதனை உண்மையென நம்பி அரசுக்கு எதிராக வாக்களித்து மஹிந்தவைத் தோற்கடித்தனர். தற்போது நாட்டு மக்களது நிதியை, சொத்துக்களைக் கொள்ளையிட்டதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் தண்டிக்கப்பட வேண்டுமென நாட்டின் பொது மக்கள் கோரி வருகின்றனர்.

சட்டத்தின் ஆதிக்கத்துக்கு அமைய, குற்ற வழக்கொன்றில், குற்றமிழைத்ததாக் குற்றம் சாட்டப்படும் ஒருவர், நீதிமன்றத்தால் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்படும் வரை குற்றமிழைக்காத ஒருவராகவே கருதப்படுவார். சட்டத்தின் ஆதிக்கம் மதிக்கப்படும் சகல நாடுகளிலும் வழக்குகள் தீர்ப் பளிக்கப்படாது பிற்போடப்படுவது பின்னடைவொன்றாகவே அமைந்து வருகிறது.

ராஜபக்ஷ அரசு, நாட்டில் வேகமாகப் பரவிய குற்றங்களின் அலையைத்தடுக்க சட்டப்படி தண்டனை வழங்க நீண்டகாலம் எடுப்பதைக் கருத்தில் எடுத்து அத்தகைய தண்டனைகளைச் சட்ட விரோதமான விதத்தில் வழங்கும் போக்கைக் கடைக்கொண்டது. வெள்ளை வான் கலாசாரம் இவற்றில் ஓர் அங்கமாக அமைந்தது. கஹவத்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற மனிதப் படுகொலைகளை சட்டரீதியான நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்த இயலாத நிலையில், அத்தகைய குற்ற அலையைத் தடுத்து நிறுத்த உதவிப் பொலிஸ்மா அதிபரொருவரின் தலைமையில் விசேட பொலிஸ் அணியொன்று நிறுவப்பட்டது. அவ்வேளை முதல், நாளாந்தம் வெவ்வேறு இடங்களில் அடையாளம் காணப்படாத மனித உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. கிறிஸ் பூதம் உட்பட்ட கொலையாளிகள் காணாமற்போயினர். கஹவத்த பிரதேசத்தில் அமைதி திரும்பியது. கடந்த காலத்தில் தொலைக்காட்சிச் செய்தி அறிக்கைகளில் இலங்கையில் அதிகரித்து வரும் மனிதப்படுகொலைகள் குறித்த செய்திகள் வெளியானதையடுத்து பொது மக்கள் கடும்கோபத்துடன் விமர்சனங்களை முன்வைக்க ஆரம்பித்தனர். சில காலத்தின் பின்னர் இத்தகைய படுகொலைகளின் சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்களில் பலர் தம்மிடமிருந்த ஆயுதங்களைக் காட்டுவதற்காக அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் பொலிஸாரைத் தாக்க முயன்றதால் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னரான இடைப்பட்ட காலத்தில் கைகளில் விலங்கிடப்பட்ட நிலையில் அழைத்துச் செல்லப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸாரின் பாதுகாப்பிலிருந்து தப்பி நதிகளில் பாய்ந்து தம்முயிரை மாய்த்துக் கொண்டதாக அடிக்கடி செய்திகள் வெளியாகின. இவற்றைக் கேள்வியுற்ற பொதுமக்கள் இவர்களுக்கு இதுவே சரியான தண்ட்னை எனக் கூறினார்களேயொழிய, எவரும் அந்தப் புதுமையான அலை குறித்தோ, வெள்ளை வான் கலாசாரம் குறித்தோ அரசுக்கு எதிராகக் கருத்தெதனையும் வெளியிட்டதில்லை. குற்றங்களை எவ்விதத்திலாவது தடுத்தாக வேண்டுமென்பதே பொது மக்களது எதிர்பார்ப்பாக இருந்தது.

சகல குற்றங்களுக்கும் நேரடியான தீர்வுகாண பேயாட்சியாளர்களால் முடிந்தது. இன்றும் அத்தகைய நிர்வாகமுறை நடைமுறையில் இருக்குமானால், சாட்சிகளு டனோ அல்லது சாட்சிகள் எதுவு மின்றியோ எதிரணி அரசியல்வாதிகள் நீதிமன்றத்தின் முன் சென்று அவர்களை விளக்கமறியலில் தடுத்து வைக்க முடியும். அதனை பொது மக்களும் கைதட்டி வரவேற்பர். ஆனால் நல்லாட்சி என்ற வட்டத்தினுள் இத்தகைய சந்தேக நபர்கள், வலுவான சாட்சியம் இல்லாமையால் விடுதலை செய்யப்படநேரும். ஆதலால் 'பொதுமக்களது கோடிக்கணக்கான பெறுமதி கொண்ட சொத்துக்களையும் பணத்தையும் கொள்ளையடித்த அரசியல்வாதிகளை வெறும் குற்றச்சாட்டுக்களின் மூலம் கைது செய்வதால் பயனில்லை. இத்தகைய அரச சொத்துக்களை தவறான வழியில் கையாண்டதை நிரூபிக்க வாய்மூல சாட்சியம் மட்டுமன்றி எழுத்துமூல ஆவணங்களும் தேவைப்படும். அது அவ்வ ளவு இலேசானதொரு காரியமல்ல. அத்தகைய ஆவணங்கள் பல ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. அத்தகைய இரகசிய ஆவணங்களைக் கண்டுபிடித்தாலும் கூட அவை இரசாயனப் பகுப்பாய்வு மூலம் உண்மையானவை என உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதன்பின்னரே சட்டமா அதிபரது ஆலோசனைக்கமைய மேல் நடவடிக்கைகளைத் தொடரமுடியும். இவற்றை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் அவசியமான ஆளணி வசதிகள் உள்ளதாக கூற இயலாது. இதுவோர் பெரிய விசாரணை நடவடிக்கை என்பதால் அதற்காக குறித்ததொரு கால அவகாசம் தேவைப்படும். இத்தகைய வழக்கொன்று முறைப்படி விசாரிக்கப்படுமானால் அதனை நூறு நாள்கள் அவகாசத்தில் விசாரிக்க இயலாது. அத்தோடு குற்றவாளிகளாக இனங் காணப்படுவோருக்குத் தண்டனை வழங்க மேலும் கால அவகாசம் தேவைப்படும் என்பதே நல்லாட்சியின் யதார்த்தம்.

அரசியல்வாதிகளும் நாட்டு மக்களும் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டே இன்றைய அரசு இத்தகைய விசாரணைகளை மேற்கொள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்க ஆலோசிப்பதாகக் கூறப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரால் நியமிக்கப்பட்ட குற்றவியல் ஆணைக்குழு காரணமாகவே நீதித்துறையின் வீழ்ச்சி ஆரம் பித்தது. அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவால் இத்தகைய பல விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு கோடிக்கணக்கில் பணத்தை விரயம் செய்தும் கண்ட பயன் எதுவுமில்லை.

எனவே, ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து எவ்விதம் விமர்சிக்கப்பட்டாலும், இந்த ஊழல் மோசடிக்காரர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்தது தப்பித்துக் கொள்ள இடமளிக்காதிருப்பதற்கும் மைத்திரி ஆறு ஆண்டு காலத்துக்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியைத் தொடர வேண்டியது அவசியமாகும். அவ்வாறானால் மட்டுமே ஊழல் மோசடிக் காரர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நாட்டின் பொது மக்களது அபிலாஷை வெற்றியடைய வாய்ப்பாக அமையும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### புண்ணியச் செயல்கள் விடுதலையின் தோற்றமே

துன்பம் மிகும் போது நல்ல காலம் வரும் என்று நாம் நம்புகிறோம். எல்லோருக்கும் நிலையான விடு தலை உண்டு என்பதே அடிப்படைத் தத்துவம். எல் லோருக்கும் நிலையான விடுதலை உண்டு என்பதே அடிப்படைத்தத்துவம். எல்லோருக்கும் அது கிடைத்தே தீர வேண்டும். விடுதலை பெறவேண்டும் என்ற விருப்பத்தால் தூண்டப்பட்டு நாம் போராடியே தீர வேண்டும். விடுதலை பெறவேண்டும் என்ற ஆசையைத் தவிர ஏனைய எல்லா ஆசைகளும் கானல் நீரே. புண்ணியச் செயல்கள் ஒவ்வொன்றும் இந்த விடுதலையின் தோற்றமே.

## நாளை

**மாசி-09**
**சனிக்கிழமை**
**21.02.2015**

திதி: திருதியை: மு.இ. 11.40 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.02.59
சுபநேரம்: 03.31-05.01 வரை
இராகுகாலம்: 09.31-11.01 வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | 9 | | 3 | | 8 |
| | | | 8 | | | 6 | | 1 |
| | | 8 | | 4 | 1 | | | |
| | 2 | 6 | 7 | 5 | | | 1 | |
| 1 | | 7 | | | | 5 | | 6 |
| | 9 | | | 6 | 3 | 7 | 2 | |
| | | | 9 | 8 | | 1 | | |
| 7 | | 3 | | | 5 | | | |
| 6 | | 9 | | 7 | 4 | | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 3 | 5 | 1 | 6 | 2 | 7 | 9 |
| 9 | 7 | 2 | 3 | 8 | 4 | 1 | 5 | 6 |
| 6 | 1 | 5 | 7 | 9 | 2 | 3 | 8 | 4 |
| 4 | 3 | 9 | 1 | 2 | 5 | 8 | 6 | 7 |
| 1 | 8 | 7 | 4 | 6 | 9 | 5 | 3 | 2 |
| 2 | 5 | 6 | 8 | 3 | 7 | 9 | 4 | 1 |
| 7 | 9 | 8 | 6 | 5 | 1 | 4 | 2 | 3 |
| 5 | 6 | 1 | 2 | 4 | 3 | 7 | 9 | 8 |
| 3 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தவக்காலச் சிந்தனை



### பகிர்தலில் முன்மாதிரியாக...

ஒருபுறம் உணவில்லையே என்று ஏங்குகிறார்கள் ஒருசாரார். இன்னொருபுறம் உணவு சீரணிக்கவில்லையே எனக் கலங்குகிறார்கள் இன்னொரு வகையானோர். விருப்பமிருந்தும் உண்ண நோய் தடையெனக் கலங்குகிறார்கள். ஒருவருக்கு கிடைப்பது அதிகமானால் பிறருக்குப் பகிர்வதில் மனம் இடம் தரவேண்டும். மனப்பக்குவம் என்பது சமூக நேசிப்புடன் இணைந் தால், இல்லாதவன் இருப்பவருடன் நல்லுறவில் வளர பகிர்தல் எமது வாழ்வைப் புதுப்பிக்கும். இதனை இந்தத் தவக்காலத்தில் முயலும்போது எமது வழிபாடுகள் அர்த்தம் பெறும் அல்லவா?

இன்று பல சந்தர்ப்பம் எம்மை நாடிவந்தும் அவற்றைச் செயற்படுத்த முடியாமல் அலட்சியப்படுத்துவோர் தமது தேவைக்காக அலையும்போது கூட உணர்வதில்லை. கல்வித் தேடலால் பெற்ற அறிவு அயலில் உள்ள வசதி அற்றோருக்குப் பகிரும் அரிய பொழுதுகளும் இறைவேண்டுதலில் ஒரு செயலாகலாம். இன்று ஊதியம் பெற்று ஆசிரியத்துவராக இருப் போரும் தமது கடமையைத் தவறுவதாலும் பாவம் செய்வோரே. இதனைத் தமது பிள்ளைகளுக்காகத் தேடி அலையும் போது கூட உணர மறுக்கிறார்கள் என்பதனை தாம் பணி செய்யும் மாணவர்களின் பின்னடைவு சாட்சி சொல்லும்.

கொடுப்பதற்கு ஏதும் இல்லை என்பதை விட எமது மனம் அதற்குத் தயாராக எமது வழிபாடுகளை வாழ்வாக்க தவறுகளை திருத்திக் கொள்ள இந்த தவக்காலம் மனமாற்றத்தின் காலமாகட்டும்.

எமது சிறுவர்கள் எதனையோ எதிர்பார்க்கும் பெரியோர்களிடம் கருணை, அன்பு, இரக்கம், பகிர்வு ஆன்மிக வழிகாட்டலின் முன்மாதிரி யாக முழு மனத்துடன் காலமறிந்த தேவை, அந்த பகிர்தல் மூலம் சமூக மாற்றத்தின் முதற்படிகளை சிலுவைப் பாதையில் முன்நகர்த்தும் சிந்தனைகளைச் செயலாக்கி தவக்காலப் பயணத்தைத் தூய்மையாக்குவோம்.


செ.யோசப்பாலா.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 500 | 600 | 700 | 700 | 450 |
| நண்டு | 400 | 300 | 450 | 250 | 200 | 300 |
| கணவாய் | 400 | 400 | 550 | 500 | 500 | - |
| பாரை | 550 | 400 | 400 | 500 | 400 | 360 |
| சுறா | 600 | 400 | 550 | 600 | 600 | - |
| சீலா | 450 | 350 | 450 | 400 | 400 | 300 |
| விளை | 450 | 300 | 400 | 500 | 400 | 300 |
| மூரல் | 350 | 300 | 350 | 350 | 300 | 320 |
| கும்பிளா | 400 | 200 | 300 | 400 | 400 | 270 |
| கிழாக்கன் | 400 | 500 | 450 | 300 | 500 | - |
| ஓரா | 350 | 200 | 350 | 300 | - | - |
| திரளி | 350 | 200 | 300 | 200 | 200 | - |
| நகரை | 300 | 200 | 350 | 300 | - | 300 |
| சூடை | 100 | 100 | 120 | 100 | 80 | 60 |
| ஒட்டி | 200 | 100 | 200 | 200 | 250 | 200 |
| திருக்கை | 250 | 250 | 150 | 250 | 200 | 130 |
| பாலை | 300 | 200 | 300 | 400 | - | - |
| வாழை | 350 | 100 | 150 | 300 | 200 | 200 |
| கொய் | 100 | 100 | 90 | 100 | 200 | - |
| மதனம் | 250 | 200 | 300 | 250 | 200 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 60 | 20 | 40 | 40 | 25 |
| கத்தரி | 150 | 80 | 60 | 120 | 80 | 80 | 50 | 40 |
| கரட் | 230 | 140 | 200 | 160 | 140 | - | 200 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 60 | 45 | 30 |
| பயிற்றை | 140 | 140 | 110 | 200 | 160 | 180 | 210 | 150 |
| பாகல் | 100 | 120 | 100 | 120 | 120 | 160 | 220 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 50 | 80 | 60 | 35 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 80 | 100 | 90 | 70 |
| சி.வெங்காயம் | 50 | 80 | 80 | 80 | 100 | 100 | 120 | 55 |
| பூசணி | 100 | 80 | 120 | 90 | 90 | 140 | 120 | 90 |
| தக்காளி | 240 | 200 | 240 | 200 | 220 | 240 | 240 | 230 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 | 80 | 80 | 100 | 80 | 60 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 30 | 10 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 30 | 30 | 10 | 15 | 15 |
| பச்சை மிளகாய் | 160 | 120 | 130 | 220 | 160 | 200 | 150 | 110 |
| புடோல் | 70 | 70 | 80 | 60 | 80 | 100 | 120 | 80 |
| கோவா | 100 | 80 | 80 | 80 | 80 | 120 | 80 | 70 |
| வெண்டி | 120 | 80 | 60 | 80 | 80 | 80 | 110 | 100 |
| போஞ்சி | 200 | 140 | 140 | 180 | 200 | 200 | 270 | 150 |
| லீக்ஸ் | 160 | 150 | 150 | 160 | 160 | 250 | 260 | 150 |
| தேங்காய் | 35 | 50 | 60 | 50 | 50 | 50 | 35 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 | 80 | 60 | 90 | 80 | 70 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 | 40 | 30 | 60 | 50 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 200 | 140 | 120 | 100 | 180 | 200 | 250 | 200 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 140 | 70 |
| பனங்கிழங்கு | 3 | 2 | 5 | 2 | 2 | 5 | [illegible] | 3 |



# பீட்ரூட்

## மருத்துவப் பயன்கள்

அழகிய நிறமும் நிறைய சத்துக்களும் கொண்ட காய் பீட்ரூட் இதனுடைய நிறத்திற்காகவே இதனை அனைவரும் விரும்பி உண்ணுகின்றனர் பீட்ரூட்டில் உள்ள காபோவைதரேட் சர்க்கரை துகள்களாக இருப்பதால் இது விரைவில் ஜீரண மாகி நம் இரத்தத்துடன் கலந்து விடுகிறது.

பீட்ரூட்டில் உள்ள இரும்புச்சத்து நம் உடலில் புதியதாக இரத்த அணுக்கள் உருவாக துணை புரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங் கள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், இரத்தத்தின் அளவ அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்திற்கு நான்கு நாள்கள் உண்டால் நல்ல பயன் கிடைக்கும்.

சமையல் செய்து சாப்பிடுவதுடன் பச்சையாகவும் சாப்பிடலாம். கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் மிகவும் உகந்தது.

பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர் களுக்கு பீட்ரூட் அருமையானது. பீட்ரூட் கீரையையும் மற்றக் கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் குணமாகும்.

தோலில் ஏற்படும் அரிப்பு, எரிச்சல் போன்றவர் றிற்கு இரண்டு பங்கு பீட்ரூட் ஜூசுடன் ஒரு பங்கு தண்ணீரைக் கலந்து தடவினால் பிரச்சினையிலி ருந்து விடுபடலாம்.





# பெண்கள் திலகம் இடுவதன் தத்துவம் என்ன..?

பெண்கள், நெற்றியில் பொட்டு அல்லது குங்குமம் வைப்பது மங்கல சின்னங்களாக கருதப்படுகிறது. இரு புருவங்களுக்கு மத்தியில் உள்ள இடம் நெற்றி பொட்டு என்று அழைக்கப்படுகிறது. மருத்துவ ஆராய்ச்சிகளின்படி நினைவாற்றலுக்கும், சிந்திக்கும் திறனுக்கும் உரிய இடம் அதுவே. யோகக்கலை இதனை ஆக்ஞா சக்கரம் என்று குறிப்பிடுகிறது. இந்த இடம் எலக்ட்ரோ மேக்னடிக் என்ற மின்காந்த அலைகளாக மனித உடல் சக்தியை வெளிபடுத்துகிறது. அதிலும், முன் நெற்றி மற்றும் நெற்றிப் பொட்டு இரண்டும் மின்காந்த அலைகளை வெளியிடுவதில் முக்கியமானவை. அதனால் தான், நம் மனம் கவலையால் வாடும்போது, தலைவலி அதிகமாவதை உணரலாம்.

நெற்றியில் இடும் திலகம், அந்தப் பகுதியைக் குளிர்விக்கிறது. மேலும் உடலின் சக்தி வெளியேறி விரயமாவதைத் தடுக்கிறது. எனவே, நெற்றித் திலகம் எம்மை இறை அனுக்கிரகத்துடன் வாழ வைப்பதுடன் தீய சக்திகள் எம்மை அணுகாமல், தீய எண்ணங்கள் எம்மில் எழாமல் காக்கிறது. நெற்றியில் திலகத்தை வைத்துக் கொள்ளும்போது, நான் கடவுளை எப்போதும் மனத்தில் நிலை நிறுத்துகிறேன். இறை தன்மையுள்ள இந்த உணர்வு எனது எல்லாச் செயல்களிலும் ஊடுருவி பரவட்டும். என் செயற்பாடுகளில் எப்போதும் நேர்மையும் உண்மையும் நிறையட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். நெற்றி திலகம் லட்சுமி கரமானது என்பர்.

எனவே குங்குமம் வைக்கும் போது, ஸ்ரீ நமஹ என்றோ, மகாலட்சுமியே போற்றி என்றோ சொல்லியபடி வைத்துக் கொள்வது பெண்களுக்கு நலம் பயக்கும். குங்குமத்தை மோதிர விரலால்தான் நெற்றியில் இட வேண்டும். மற்ற விரல்களை பயன்படுத்தக் கூடாது. பெண்கள், தலைவகிடிலும், மாங்கல்யத்திலும், நெற்றியிலும் பொட்டு வைக்கிறார்கள். இந்த மூன்று இடங்களிலுமே லட்சுமி குடியிருப்பதாக ஐதீகம். கோயில்களிலோ, வீட்டிலோ குங்குமத்தை எடுத்து இடது கையில் போட்டுக் கொண்டு, வலது கைவிரலால் தொட்டு வைப்பதும் கூடாது. வீட்டில் யாராவது ஒருவரை வலது உள்ளங்கையில் சிறிதளவே போடச் சொல்லி, வலதுகை மோதிர விரலை வளைத்து குங்குமத்தைத் தொட்டு நெற்றியில் இட வேண்டும்.

## குங்குமத்தின் சிறப்பு

சுமங்கலிப்பெண்களின் தலை வகிட்டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர்களுக்கு சேமத்தைக் கொடுக்கும். சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீமகாலட்சுமியின் இருப்பிடம் சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது.

வீட்டுக்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறுபவர் இருவருக்கும் மாங்கல்யத்தின் பலத்தைப் பெருக்கும்.

குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம்.

பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அரக்கு நிற குங்குமம் சிவ சக்தியை ஒரு சேரக் குறிப்பதாகும்.திரு மணப் புடைவை அரக்கு நிறத்தில் இருப்பது நல்லது.

தெய்வீகத்தன்மை, சுப தன்மை, மருத்துவத்தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல் மற்றும் மனம் ஆகியவைகளுக்கு அதிக நன்மைகள் உண்டாகும்.



திருமணமானபெண்கள் நெற்றி நடுவிலும் வகிட்டின் தொடக்கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பு, ஆண்கள் இருபுருவங்களையும் இணைத்தாற்போல் குங்குமம் அணிவது தன்னம்பிக்கையை அதிகரிக்கும். கட்டை விரலால் குங்குமம் இட்டுக் கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும். குருவிரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னணித் தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்றவற்றை ஊக்குவிக்கும் , சனிவிரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக் கொள்வது தீர்காயுளைக் கொடுக்கும். குங்குமம் அணிவது தெய்வீக தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டிற்கு நல்லது.

# பெண்ணுரிமைக்கு ஆணின் பங்கும் அவசியம்

பெண்ணியம் என்பது ஆண்களை வெறுப்ப தல்ல, ஆண்களும் பெண்களும் இணைந்து ஒடுக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்காகவும், பெண்களுக்காகவும் போராடுவதேயாகும். குறிப்பாக ஆணும் பெண்ணும் ஒரே விதமான வேலை பார்க்கும்போதும் பல இடங்களில் பெண்களுக்கு மட்டும் குறைந்த ஊதியம் அளிக்கப்படுகிறது.

பெண் என்பதால் கல்வி மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பாகுபாடுகளைத் தகர்க்கப் பாலின வேற்றுமை கடந்த ஒருங்கிணைந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

'பெண்கள் எந்த விதத்திலும் தாழ்ந்த வர்கள் அல்ல என்னும் சிந்தனை ஜோதியை ஒவ் வொரு ஆணும் தன் மனதில் ஏற்ற வேண்டும். அப்போது தான் அந்த ஆணின் மகள்கள், தங் கைகள், தாய்மார்கள் ஆண் பெண் ஏற்றத் தாழ்வில் இருந்து விடுதலை பெற முடியும். ஆண்களும் தங்கள் பலவீனங்களை உணர வேண்டும். அந்தத் தருணத்தில் ஆண், பெண் இருவரும் முழுமை பெறுவார்கள். மாற்றத்தை ஆண்களிடமும் ஏற்படுத்த வேண்டும். பெண் ணுரி மைக்கு தனியாக பெண்கள் மட்டும் பேசுவதால் எதுவும் கிடைத்து விடப் போவ தில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.






## கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள்

ஆண்கள் அழக் கூடாது என்று சொல்லும் இந்தச் சமூகம், அவர்கள் பெண்களை அழ வைக்கக் கூடாது என்று சொல்வ தில்லை. சிறு வயதிலிருந்து ஆண்கள் அழக் கூடாது என்ற கருத்து பல திசைகளிலிருந்து அவர்களுக்கு வலியுறுத்தப் படுகிறது.

வீடு, பள்ளி, சமூகம் என எல்லா இடங்களிலும் இதே நடைமுறைதான். அவர்களுக்கு நெருக்கமான முதல் பெண்ணான அம்மாவில் ஆரம்பித்து அவர்கள் சந்திக்கும் பிற பெண்களும் 'அழுவது ஆண்களுக்கு அழகில்லை' என்றே சொல்கிறார்கள்.



அழுவது ஆண்களுக்கு அவமானம் என்ற எண்ணம் மனதில் ஆணித்தரமாகப் பதிந்த பிறகு, அவர்கள் தங்களது வலிமையைப் பெண்களிடம் நிரூபித்துக் காண்பித்தாக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். எனவே, குடும்பத்தில் தனது வலிமையை, முக்கியத்துவத்தைக் காண்பிக்க பெண்கள் மீது வன்முறையை ஆண்கள் பயன் படுத்துகின்றனர்.

ஆனால், பெண்கள் மீதான வன்முறைகளில் குடும்ப வன்முறைகளே அதிகம் நிகழ்வதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஆண்களை வலிமையானவர்களாக, தைரிய மானவர்களாக வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தும் சமூகம், அவர்கள் கண்ணிய மானவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த ஆரம்பித்தால்தான், இது போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.



# நாய்குட்டி



சின்ன சின்ன நாய்க் குட்டி
செல்லமான நாய்க் குட்டி
நன்றி உள்ள நாய்க் குட்டி
நன்மை செய்யும் நாய்க் குட்டி!
சொன்ன சொல்லைக் கேட்டிடும்
வாஞ்சையாய் வாலை ஆட்டிடும்
முன்பின் தெரியா மனிதரை
முறைத்துப் பார்த்து குரைத்திடும்!
துள்ளிக் குதித்து ஆடிடும்
துடிப்பாய் எங்கும் ஓடிடும்
கள்ளம் இல்லா நாய்க் குட்டி
கருத்து மிக்க நாய்க் குட்டி!
பாலை வைத்தால் குடித்திடும்
பாசம் மிக்க நாய்க் குட்டி
காலை மாலை இரவெல்லாம்
காவல் காக்கும் நாய்க் குட்டி!
காவல் துறைக்குத் திருடரைக்
காட்டிக் கொடுக்கும் நாய்க் குட்டி
ஆவலோடு வளர்க்கவும்
அன்பாய் நாமும் பழகலாம்!

# வர்ணம் தீட்டலாம் வாங்க...




உதயன்

துணிச்சலும், பெருமையும் கொண்ட ஆசிரியர்பீட அணியுடன்

## இணையுங்கள்

புதிய பொலிவு பெற்றுள்ள உதயன் பத்திரிகையில் உதவி ஆசிரியர்களாக, செய்தியாளர்களாகப் பணியாற்றுவதற்கு ஆர்வமும் தேடலும் உள்ளவர்களையும் தேடி வருகின்றோம். புதினங்களைத் தேடும் ஆர்வம், தமிழ் மொழியில் சிறந்த ஆளுமை, ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தேர்ச்சி அனைத்தும் இருந்தால், பெருமையும் துணிச்சலும் கொண்ட ஆசிரியர்பீட அணியில் ஒருவராக உடனடியாக இணைந்து கொள்ளலாம். இவை அனைத்தும் இல்லாவிட்டால் பரவாயில்லை, தமிழ் மொழி ஆளுமையும் தேடல் ஆர்வமும் மட்டும் இருந்தாலே போதும் எங்கள் பயிற்சி அணியில் இணைந்து கொள்ளவும் அரிய வாய்ப்பு உண்டு. 5 வருடாங் களின் பின்னர் மீண்டும் ஒரு சந்தர்ப்பம்.

### 1 உதவி ஆசிரியர்கள்

- தமிழ் மொழியில் முழுமையான ஆளுமையைக் கொண்டிருப்பதுடன் ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலையும் கொண்டிருக்க வேண்டும்.
- பத்திரிகைத்துறை அல்லது எழுத்துத் துறையில் கட்டாயம் அதீத ஆர்வத்தைக் கொண்டிருக்கவேண்டும்.
- செய்திகளை, கட்டுரைகளை, ஆக்கங்களை செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தும் திறமை மற்றும் பொறுமையைக் கொண்டிருக்கவேண்டும்.
- தமிழ் மொழியில் பட்டம் அல்லது ஊடகக் கற்கைத்துறை ஒன்றில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றிருப்பது மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

### 2 செய்தியாளர்கள்/ பத்தியாளர்கள்

- செய்திகளை நுகர்ந்து அறிந்துகொள்ளும் ஆர்வமும் ஆற்றலும் எத்தரப்பினருடனும் நெருங்கிப் பேசி வசியப்படுத்தும் இயல்பும் எழுதுவதற்கான துடிப்பும் இருக்கவேண்டும்.
- மொழியை வசப்படுத்தி வசியப்படுத்தும் திறனைப் பெறுவதற்கான முயற்சி உடையவராக இருத்தல் வேண்டும்
- ஊடகத்துறையில் பட்டயக் கற்கை அல்லது சான்றிதழ் கற்கையை முடித்திருப்பது மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
- சுய உந்தல், தம்மைச் சுற்றி நடப்பவை பற்றிய விழிப்புணர்வு, பரபரப்பான நடப்பு விவகாரங்கள் பற்றிய நுகர்வு என்பன முக்கியம்.
- பல்துறை அறிவும் வெவ்வேறு தலைப்புகளில் எழுதும் திறனும் அவசியம்.

**வேண்டுகைகளையும் சுயவிவரத்தையும் அனுப்ப,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
editor@uthayan.com

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு சிறப்பு வாய்ப்பு


# நன்றியுள்ள காகம்



மேகலா–சரவணன் தம்பதியினருக்கு அர்ச்சனா என்ற 2 வயது மகள் இருந்தாள், அர்ச்சனாவுக்கு வீட்டின் முற்றத்தில் வைத்து சோறு ஊட்டினார் அவளின் அம்மா. முற்றத்தில் சோறு ஊட்டுவதை மரத்தில் நின்று பார்த்த ஏராளமான காகங்கள் கூடிவிட்டன. காக்காவைக் காட்டிக் கொண்டே மகளுக்கு சோறு ஊட்டுவாள் மேகலா. ஆனால் காக்காவுக்கு சோறு போடுவதில்லை. அப்போது அடுப்பில் விசில்... சத்தம் கேட்கவே, அர்ச்சனாவை கீழே இறக்கிவிட்டு, வீட்டுக்குள் ஓடினாள் மேகலா. அம்மா உள்ளே போனதும், அர்ச்சனா கண்ணால் சிரித்தபடி தளிர்நடை நடந்தபடி, சோற்றை அள்ளி காக்காவை நோக்கி நீட்டினாள். காகங்கள் அவளை நெருங்கி வர, 'காக்கா இந்த... காக்கா இந்தா...' என்று சோறு போட்டாள். உள்ளே சென்ற மேகலா திரும்பி வர, அர்ச்சனாவை திட்டி விட்டு, 'அரிசி விக்கிற விலைக்கு இதுகளுக்கு வேற சோறு போடணுமாக்கும். உன் சாப்பாட்டை காக்காவுக்கு தியாகம் செய்கிறாயா? என்று கேட்டுவிட்டு காக்கைகளை விரட்டினாள் அர்ச்சனாவின் அம்மா, பூனை, காக்கா, எறும்பு எல்லோருமே நண்பர்கள்தான். கையில் என்ன பண்டம் வைத்திருந்தாலும் போட்டு விடுவாள். அவளுக்கு என்ன தெரியும்...!? அதட்டிக் கொண்டே சோறூட்டிய மேகலா, விளையாட்டுச் சாமான்களை அர்ச்சனாவிடம் கொடுத்துவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனிக்க வீட்டுக்குள் சென்றுவிட்டாள். அர்ச்சனா முற்றத்தில் விளையாட்டு சாமான்களைப் பரப்பி விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென அர்ச்சனாவின் கூச்சலும், காக்காக்கள் கத்தும் சத்தமும் கேட்டு வெளியே ஓடி வந்தாள் மேகலா. அங்கே குரங்கு ஒன்றை காக்கை கூட்டம் விரட்டி விரட்டி கொத்திக் கொண்டு இருந்தது. 'அம்மா என் டப்பா...' என்று அழுத அர்ச்சனா, அம்மாவை கட்டிக் கொண்டாள். ஒரு நொடியில் நடந்ததை புரிந்து கொண்டாள் மேகலா. தன் மகள் விளையாடிய பாத்திரத்தில் 'சாப்பிட ஏதேனும் இருக்குமோ?' என எண்ணி குரங்கு பாத்திரத்தை தூக்கிக் கொண்டு ஓடியிருக்கிறது. இதைப் பார்த்த காகங்கள் குரங்கை விரட்டி விரட்டி கொத்துகின்றன என்பதைப் புரிந்து கொண்டாள். மகள் மற்ற ஜீவன்களுடன் நட்பாக இருந்தது, அவளுக்கு ஒரு இடையூறு நேர்ந்தபோது உதவியாக அமைந்ததை எண்ணி ஆச்சரியப்பட்டாள் மேகலா. அன்று முதல் மகளுக்கு சோறூட்ட வரும் மேகலா! முதலில் காகங்களை 'காகா... காகா...' எனக் கூப்பிட்டு சோறு வைத்த பின்னரே மகளுக்கு உணவூட்டினாள்! நாய் மட்டுமல்ல நாம் பாசம் காட்டும் எல்லா உயிரினங்களும் நன்றியுள்ளவையே.

# நுகேகொடையில் நடந்தது இனவாத கூட்டமொன்றே

## ஐ.தே.க. மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.20
நுகேகொடை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஓர் இனவாத அடிப்படையிலான கூட்டமாகும் என்று மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

"அரசியல் கூட்டமொன்றுக்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை திரட்டுமாறு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு சவால் விடுத்திருந்தேன். ஆனால் நுகோகொடையில்நடைபெற்றகூட்டமானது ஓர் இனவாத அடிப்படையிலான கூட்டமேயாகும். பொது பலசேனா உள்ளிட்ட அமைப்புக்கள் சமூக வலைத் தளங்களின் ஊடாக இந்தக் கூட்டத்துக்கு இனவாத அடிப்படையில் அழைப்பு விடுத்திருந்தன."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இனவாத அடிப்படையில் அன்றி அரசியல் ரீதியாக மக்களை திரட்டியிருந்தால் நான் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வதாக விடுத்த சவாலை ஏற்றுக்கொண்டிருப்பேன். இந்தக் கூட்டம் அரசியல் ரீதியான கூட்டமன்று, இது முழுக்க முழுக்க ஓர் இனவாத அடிப்படையிலான கூட்டமாகும். இனவாதத்தை தூண்டும் வகையிலான அறிக்கைகளை விட்டு மக்கள் திரட்டப்பட்டுள்ளனர்.

"விமல் வீரவன்ஸ தனது காரியாலயத்திலிருந்து அரசியல் ரீதியான கூட்டமொன்றுக்கு ஐயாயிரம் பேரை அழைத்திருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியும். தனியார் பஸ்களில் இனவாத அடிப்படையில் மக்களை அழைத்து நடத்தப்படும் கூட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நடைபெறும் கூட்டத்துக்கு ஐயாயிரம் பேரை அழைத்து வந்தால் அரசியலிலிருந்து விலகுவதாக ஓரிரு தினங்களுக்கு முன் அசாத் சாலி சவால் விடுத்திருந்தார். (ற)

# சம்பள உயர்வு கோரி போராட்டம் நடத்தப்படும்

## கே.டி.லால்காந்த எச்சரிக்கை

கொழும்பு, பெப்.20
சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது என்று ஜே.வி.பியின் மாகாணசபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துவது தொடர்பில் இந்த அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது. அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியமைக்காக நாடு முழுவதிலும் போராட்டம் நடத்தப்படும்– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் உயர்த்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. எனினும் இடைக்கால வரவு– செலவுத் திட்டத்தில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒன்று அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த சமர்ப்பித்த வரவு–செலவுத் திட்டத்தில் உயர்த்தப்பட்ட 3 ஆயிரம் ரூபாவையும் உள்ளடக்கி மேலும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை ஜூன் மாதம் முதல் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார்.அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் அடிப்படைச் சம்பளமாக உள்வாங்கப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவினால் அதிகரித்த கொடுப்பனவு தவிர்ந்த 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த அரசு தொழிலாளர்களுக்காக ஓர் அமைச்சரைக் கூட நியமிக்கவில்லை. நீதி அமைச்சர் மற்றும் பிரதி நீதி அமைச்சர்களின் கீழ் நாட்டின் தொழிலாளர்கள் தொடர்பான விடயங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன"– என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி ரோகினியம்மா குமாரு


(ரோகினி ரீச்சர், வவா அக்கா)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி ரோகினியம்மா குமாரு நேற்று (19.02.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
19/2, ரயில் றோட், கந்தர்மடம்.
021 222 5204
(56991)(5.3)

### சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை 16.02.2015 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியதிரேசாவின் அன்புக் கணவரும், மேரி றெமிலியா, ஜெறாட் ஜேன்சன், றுவினா றேனி, யூபேட் யோண்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற எட்வேட் மற்றும் தர்மராஜா, கலா, சுரேஸ்வரன், திருமகள் ஆகியோரின் மாமனும், ஜோயல், லினற், ஜொய்லா, டமியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி (21.02.2015) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 3.00 மணியளவில் சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சில்லாலை கதிரை அன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(57003) (10) தகவல்: குடும்பத்தினர்.

### பசுபதி நவரத்தினம்



மணற்புலம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பூநகரி மற்றும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி நவரத்தினம் நேற்று முன்தினம் (18.02.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், பூநகரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், தவமணி, சண்முகராஜா (வவா), மோகனதாஸ் (வவி), வத்சலா (சுதா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராஜா, நிர்மலா, சுசி, தர்மலிங்கம், மகாலட்சுமி, கந்தசாமி, செல்வராணி, பவானி, யோகராணி, சுசிலாதேவி காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், நவரஞ்சினி (சுவிஸ்), நவம் (பிரான்ஸ்), காந்தன் (இத்தாலி), இளங்கோ, நவரஜனி, நவரோகினி, அனுராதா, ஜனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சந்திரன் (சுவிஸ்), ஜெயந்தனி (பிரான்ஸ்), ஜென்சி (வவுனியா), அனுஷா, கிரி, பிரபா ஆகியோரின் அன்பு மாமனும், அகர்ஷன், சுருதி (சுவிஸ்), அவினாஸ், அர்ஜெயன் (பிரான்ஸ்), விவேகா, மார்வின், ஜெதுர்சன், டக்சிகா, ஜருஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2015) வெள்ளிக்கிழமை பி.ப.ஒரு மணியளவில் சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி -மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைகுவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணற்புலம்,
அளவெட்டிகிழக்கு.
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூங்கிளி தெய்வேந்திரம்



காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூங்கிளி தெய்வேந்திரம் நேற்று (19.02.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் தவமணி தம்பதியரின் மருமகளும், தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், சகுந்தலா, உருத்திரன்.(டுபாய்), பகீரதன், அஜந்தா, இனிதா ஆகியோரின் பாசமிகு தாயும், பிரகாஸ்கரன்(புத்தளம், சவுதி), பத்மாவதி ஆகியோரின் மாமியும், தனுசிகா, தக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகயகள் இன்று (20.02.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(56994) (10)
தகவல்: குடும்பத்தினர்.
0779182995, 0771166105

### சின்னத்தம்பி இராசையா (பேரன்)



யாழ்ப்பாணம் சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவில் வாழ்ந்தவருமான சின்னத்தம்பி இராசையா 18.02.2015 புதன்கிழமை மொன்றியல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், குலமணி தேவியின் அன்புக் கணவரும், நடராசா, காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் பத்மினி தேவி, பத்மநாதன் (கனடா) செல்வராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாமதேவி, மகேஸ்வரி, இந்திரகுமார், அனுஷாம்பிகை (கனடா), தியாகலிங்கம் (யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபை தலைவர்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கிருஷாந், தனுஷன், சிவஷாந், சுரேகா, சுதர்சன், நவநீதன், லக்ஷனா, லக்ஷன், திவாகர், அஸ்வின் (கனடா), திஷாந் (கனடா), தாரணன், தாருஜன், சோபிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் லதுஷனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.02.2015) ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலில் இடம்பெறும். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தில் உள்ள மகள் வீட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(56994) (10)
தகவல்: க. தியாகலிங்கம் (மருமகன்)

### திருமதி இராசநாயகி சிவகுருநாதன்



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசநாயகி சிவகுருநாதன் கடந்த 17.02. 2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-குருஅம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான வேதநாயகி, ஜெகநாயகி மற்றும் பாலசுப்பிரமணியம் (லண்டன்), காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் தங்கநாயகி (லண்டன்), யோகநாயகி (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசநாதன் மற்றும் ஸ்ரீராணி (ஜேர்மனி), சத்தியநாதன் (வட்டக்கச்சி), ஜமுனாராணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான நித்தியநாதன், கணேசநாதன் மற்றும் ஜெயசிறிராணி (இருபாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், நகுலேஸ் வரன் (ஜேர்மனி), சுமதி (வட்டக்கச்சி), கனகரட்ணராஜா (ரவி-லண்டன்), மகாராசா (மது-Hallotrust) ஆகியோரின் பாசமிகு மாமியும், அசோக் இந்திரஜித் (கனடா), நிசாந்தன் (ஜேர்மனி), கிரிதரன் (ஜேர்மனி), சுகேசன் (ஜேர்மனி), சுதர்மன் (லண்டன்), ஜனகன் (லண்டன்), நிலாணி (தொழில்நுட்பக்கல்லூரி-யாழ்ப்பாணம்), கேமாயினி (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), மோகனவர்மன் (யா/புனித பத்திரிசியர் கல்லூரி), பிரியவர்மன் (யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், நித்திக், நிக்கிஷா, அஜன், அஞ்சலி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கந்தன் அருள்",
இருபாலை கிழக்கு, கோப்பாய்.
(57001) (10)
தகவல்: குடும்பத்தினர்.

# மீனவர் தாக்கப்படுவதற்கு முன்னைய அரசே காரணம்

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப்.20
மீனவர் பிரச்சினைக்கு கடந்த அரசே பொறுப்புக் கூறவேண்டும் – இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"தெற்கில் மீன்கள் இல்லாத காலத் தில் கிழக்குக்கு சென்று மீன்பிடி யில் ஈடுபடும் சிங்கள மீனவர்கள் தாக்கப்படுகின்றனர். இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படவேண்டும், இந்த நிலைமை நாடு முழுவ திலும் வியாபிக்க இடமளிக்கப்பட முடியாது. நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் போது மீன்பிடித்துறைக்கு முக்கிய பங்கு வழங்க வேண் டும்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"மீனவர் பிரச்சினைகள் குறித்து கடந்த அரசுகள் உரிய கவனம் செலுத்தியதா என்பது சந்தேகமே. மீன்பிடி நடவடிக்கைகளின் போது இலங்கை பின்பற்ற வேண்டிய சில நிபந்தனை களை ஐரோப்பிய ஒன்றியம் விதித்து, அதற்கான கால அவகாசத்தையும் வழங்கியிருந்தது. கடந்த அரசு அதைக் கண்டு கொள்ளத் தவறியுள்ளது. இதனால் அப்பாவி மீனவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக் கப்பட்ட மீன்பிடித் தடைக்கான முழுப் பொறுப்பையும் கடந்த மஹிந்த அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும்"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# அடக்குமுறையைக் கையாள ஒருபோதும் விரும்பவில்லை

## பொதுபல சேனா் அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, பெப்.20
இனவாதிகளாகச் செயற்பட்டு, சமூக பிரிவினையை ஏற்படுத்தவோ அல்லது முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு அடக்கு முறைகளைக் கையாளவோ நாம் ஒரு போதும் விரும்பவில்லை. அப்பாவி முஸ்லிம்களை எமது உறவுகளாகவே நேசிக்கின்றோம். ஆனால் சவூதி அரேபியா என்ற நினைப்பில் இலங்கைக்குள் செயற்பட்டால் வேடிக்கை பார்க்கமாட்டோம். – இவ்வாறு பொதுபலசேனா என்ற பௌத்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பொதுபல சேனா அமைப்பு கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான பல செயற்பாடுகளை செய்ததாக ஊடகங்கள் தவறாக எம்மை சித்திரித்துவிட்டது. நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக செயற்படவில்லை. அப்பாவி முஸ்லிம் மக்களை நாம் ஒரு போதும் தண்டிக்கவில்லை. தர்கா நகர் சம்பவம் சிங்கள சமூகத்தை தவறாகச் சித்திரித்து விட்டது. அரசால் நடந்த குழப்பங்கள் அனைத்துக்கும் பின்னணியில் பிரிவினைவாத முஸ்லிம் குழுக்களே காரணம். ஆனால் முஸ்லிம் அமைப்புக்களும் அரசியல் வாதிகளும் பக்கச்சார்பாக கருத்துக்களை பரப்பிவிட்டனர்."– என்று அவர் தெரிவித்தார்.

"நாம் முன்வைத்த கருத்துக்கள் அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு எதிரானதல்ல. நாம் தெரிவித்த கருத்துக்கள் அனைத்துமே பிரிவினையைத் தூண்டும் தீவிரவாத முஸ்லிம் குழுக்களுக்கு மட்டுமே சாரும். ஆனால் எமது கருத்துக்களை அப்பாவி முஸ்லிம் சமூகத்திடம் தவறாகக் கொண்டு சென்று விட்டனர். நாம் ஹலால் முறைமையை எதிர்க்கின்றோம். அதற்கு காரணம் உள்ளது. இலங்கை பன்முக சமூக நாடு. இது சவூதி அரேபியா போன்ற இஸ்லாமிய தீவிரவாத சட்டதிட்டம் உள்ள நாடெனின் இங்கு மத சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். ஆயினும் பல இன மக்கள் வாழ்கின்ற நிலையில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஏற்றுக் கொள்ள முடியாது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஆடைகளிலும் இஸ்லாமிய சட்டங்கள் மோசமாகவே நடந்து கொள்கின்றது. முக மூடி உடைகள் அணிவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. அதேபோல் ஓர் நபரை அடையாளம் கண்டு கொள்ள முடியாதபோது எப்படி சமூக ஒற்றுமை நோக்கி பயணிப்பது. முகமூடி போன்ற ஆடைகள் அணிவது அச்சத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இது தொடர்பில் எம்மால் இணங்கி செயற்பட முடியாது."– என்றும் அவர் தெரிவித்தார்.

"சிங்கள நபர் தமிழ் நபரை திருமணம் செய்து கொள்வதால் மத சிக்கல்கள் எதுவும் வரப் போவதில்லை. ஆனால் சிங்கள, தமிழ் நபர் ஒருவர் முஸ்லிம் நபரை விரும்பி திருமணம் செய்தால் மட்டுமே மத மாற்ற செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அதே போல் சிங்கள– தமிழ் பெண்களை மதம் மாற்றி இஸ்லாமிய மதத்தின் பால் மாற்றும் நடவ டிக்கை இன்றும் தொடர்கின்றது. இது அனைத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை முஸ்லிம் நாடு அல்ல. அதனை ஒவ்வொரு முஸ்லிமும் நினைவில் வைத்தே வாழ வேண்டும்."– என்று அவர் தெரிவித்தார். (ற)


## தவறிவிட்டது

தனங்கிளப்பு சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி தயாகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் (NP BAS 7909) வாகனவரி ஆகியவை அடங்கிய பர்ஸ் சாவகச் சேரிக்கும் தனங் கிளப்புக்குமிடையில் 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 826 8309, 077 963 9617 ஆகிய தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

## யாழ். இந்துக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி ஒத்திவைப்பு

எமது கல்லூரியின் மாணவன் வ. குகப்பிரியன் என்பவர் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் படுகாயம் அடைந்ததை அடுத்து இன்று வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த பாடசாலையின் இல்லமெய் வன்மைப் போட்டி காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.

## கேள்வி கோரல்

**கரவெட்டி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க கட்டட நிர்மாணத்துக்கான மூலப்பொருள்கள் சேவைகளுக்கான கேள்வி கோரல்**

மேற்படி எமது சங்கத்தினால் 08.02.2015 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட கேள்வி கோரலுக்கு மேலதிகமாக எமது சங்கம் UNDP நிறுவன நிதி உதவித் திட்டத்தில் உற்பத்தி நியமங்களுக்கு அமைய உற்பத்தி பகுதி கட்டடத்தினை மேம்படுத்தவுள்ளோம். இதற்குத் தேவையான கீழ்வரும் பொருள்கள் சேவைகள் தகைமையுள்ள வழங்குநர்கள் சேவையாளர்களிடமிருந்து கேள்விகள் கோரல் மூலம் பெறப்படவுள்ளன. கேள்விகள் வழங்க விரும்புபவர்கள் 27.02.2015 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் சங்க நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தேவைப்படும் பொருள் சேவைகள்:

1. கட்டட நிர்மாணத்துக்கான மூலப் பொருள்கள் (கல், மண், சீமெந்து, கம்பி வகை, மின் உபகரணங்கள், நீர் வழங்கல் உபகரணங்கள், கூரை கதவுகளுக்கான மூலப் பொருள்கள், அலுமினிய பொருத்துக்கான மூலப் பொருள்கள்.)
2. சேவைகள்- மேசன், கூலி, தச்சு வேலை, கூரை வேலை, மின்னிணைப்பு வேலை, நீர் பைப் பொருத்துநர் வேலை.

இந்த வேலைகள் தொடர்பாக தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து மூடிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு கீழ்வரும் முகவரியில் உள்ள எமது சங்கத்துடன் தொலைபேசியில் அல்லது நேரில் வந்து தொடர்பு கொள்ளலாம். கூறு விலைகளுக்கான மாதிரி படிவம் எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**கரவெட்டி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம்**
**பருத்தித்துறை வீதி, நாவலர்மடம், கரவெட்டி.**
**தொலைபேசி: 021 226 1368**

**தலைவர்,**
**கரவெட்டி பிரதேச கால்நடை வளர்ப்போர் கூ.சங்கம்.**


# சீனாவின் காலனியாக நாட்டை மாற்ற முயற்சி


## முன்னைய அரசை சாடுகின்றார் சஜித்



கொழும்பு, பெப்.20
முன்னைய அரசு இலங்கையை சீனாவின் காலனியாக மாற்றிவிட முயற்சித்தது. சீன அரசின் எந்தவொரு ட்ரோலர் படகும் மீன்பிடியில் ஈடுபட மஹிந்த ராஜபக்ஷ அரசு அனுமதியளித்திருந்தது. – என்று வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மீனவர்களின் நலனை கடந்த அரசு கடுகு அளவேனும் மதிக்கவில்லை. அந்த அரசின் மீன்பிடித் துறை அமைச்சராக கடமையாற்றிய ராஜித சேனாரத்னவுக்கு தனது கடமைகளை உரிய முறையில் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீன படகுகள் மீன்பிடியில் ஈடுபட்ட காரணத்தால் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்துள்ளது. அதை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு எட்டு சீன கப்பல்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது"– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



மட்டக்களப்பு பாலமீன்மடுவில் மீனவர் ஒருவரின் ஆழ்கடல் வலையில் ஆயிரம் கிலோ எடையுடைய திருக்கை மீன் நேற்று பிடிபட்டது. ஒரு கிலோ நூறு ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபாவுக்கு இந்த மீன் விற்கப்பட்டுள்ளது.(ற–10)

# ஒருவாரமாக மறைக்கப்பட்ட த.தே.கூ. – மு.கா. ஒப்பந்தம்

கொழும்பு, பெப்.20
கிழக்கு மாகாண சபையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற் படுவது தொடர்பில் கடந்த ஒன்பதாம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆயினும் ஒருவார காலத்தின் பின்னரே அது குறித்த தகவல்கள் கசிந்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்ப்பில் அதன் செய லாளர்– சட்டத்தரணி கே.துரைராஜ சிங்கமும் சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் சார்பில் அதன் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஹசன் அலியும் ஒப்பமிட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டும் அதுகுறித்த தகவல்கள் இரகசியமாகப் பேணப்பட்டமை குறித்து, ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தமிழரசுக் கட்சி உறுப்பினர்களிடம் கேட்டபோது,

"நாம் எதையும் திட்டமிட்டு மறைக்கவில்லை. இது ஒரு பூரணமான ஒப்பந்தம் இல்லை. கிழக்கு மாகாண சபை யின் முதலமைச்சர் பதவியை கைப்பற்றுவதற்கு முயற்சித்தோம். ஆனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதவியை கைப்பற்றி ஆட்சியமைத்துள்ளது. பின்னர் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்பட முடிவு செய்தே, மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். அதன்படி கிழக்கு மாகாண சபையில் இரண்டு அமைச்சர்கள் மற்றும் பிரதித் தவிசாளர் பதவிகளைப் பெறவுள்ளோம்."– என்று தெரிவித்தனர்.

"இது தொடர்பிலான தகவல்களை வெளிவிடாததற்கு குறிப்பிடும்படியான காரணங்கள் எதுவும் இல்லை. எந்த அமைச்சுக்கு யார் அமைச்சர்கள் என்ற தீர்மானத்தின் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாக எண்ணியிருந்தோம். ஆனால் இந்த ஒப்பந்தத் தகவல்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினரால் வெளிவந்துள்ளது. இது தவறானது. திருப்திகர மான அமைச்சுப் பதவிகள் எங்க ளுக்கு ஒதுக்கப்படாவிடில் இந்த ஒப்பந்தம் முறிவடையக் கூடும்"– என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ற–10)

# குமாரை நாடுகடத்தும் நடவடிக்கை ஆரம்பம்

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.20

முன்னிலை சோஷலிஸக் கட்சியின் செயற்பாட்டாளர், ஆஸ்திரேலிய பிரஜையான குமார்குணரத்தினத்தை விரைந்து நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன் கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க இதனைக் கூறியுள்ளார்.

தம்மைக் கைது செய்யவோ, நாடு கடத்தவோதடைவிதிக்குமாறு கோரி, குமார் குணரத்தினம் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த மனுவை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்திருந்தது. அதையடுத்து குமார் குணரத்தினத்தை விமான சீட்டுடன் குடிவரவு– குடியகல்வுத் திணைக்களத்துக்கு வருகை தருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று குடிவரவு – குடியல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் கூறியுள்ளார். அவர் வரமறுக்கும் பட்சத்தில் அவருக்கு எதிராக பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தனது நுழைவிசைவின் காலத்தை நீடிக்குமாறு கோரி குமார் குணரத்தினத்தால் குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்துக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று முன்னிலை சோஷலிஸ கட்சி தெரிவித்துள்ளது. (ந)

# 50 வீதமான கைதிகள் உளவியல் நோய்களில்

கொழும்பு, பெப்.20

கைதிகளில் 50 வீதமானவர்கள் உளவியல் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அங்கொட தேசிய உளநோயாளர் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜேன் மென்டிஸ் இதுகுறித்துக் கூறும்போது;

"இலங்கையின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு உளவியல் பாதிப்புக்களினால் அவதியுறுகின்றனர்.

ஆண் கைதிகளில் 20 வீதமானவர்களும், பெண் கைதிகளில் 30 வீதமானவர்களும் உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர். 18 வயது முதல் 40 வயது வரையிலானவர்கள் அதிகளவில் உளவியல் பாதிப்புக்களுக்கு இலக்காகியுள்ளனர்."– என்று தெரிவித்துள்ளார்.

"கடுமையான உளவியல் பாதிப்புக்கு உள்ளான 150 சிறைக் கைதிகள் அங்கொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உளவியல் நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள கைதி களுக்கு சிகிச்சை அளிக்க சிறைச்சாலைகளில் உளவியல் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)


## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் திருமதி சித்ரா தயானந்தன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி றோகினிஅம்மா குமாரு

அவர்கள் 19.02.2015 ஆம் திகதி வியாழக்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சக உத்தியோகத்தர்கள்
தேசிய சேமிப்பு வங்கி,
திருநெல்வேலி கிளை, யாழ்ப்பாணம்.

(56995) (15.5)


# பாதுகாப்புச் செயலரின் அதிகாரத்தை நீக்குக!

## சபையில் வாசுதேவ நாணயக்கார

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் மக்களைக் கைதுசெய்து தொடர்ச்சியாகத் தடுத்துவைத்திருக்கும் பாதுகாப்புச் செயலாளரின் அதிகாரம் நீக்கப்படவேண்டும் என நேற்று சபையில் வலியுறுத்திய வாசுதேவ நாணயக்கார அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரம் நீதிமன்றத்தின் அதிகாரமாக மாற்றப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அத்துடன், ஒருவர் தமக்கு விரும்பிய காலம் வரை ஒருவரை தடுப்புக்காவலில் வைத்திருக்க முடியாது என்றுசுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச்சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடந்த காலத்தில் இருந்த காட்டுச்சட்டம் சட்டமாக்கப்படும் என்று கூறினார். நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை நீக்கவா அவ்வாறான சட்டம் பிரயோசிக்கப்பட்டது?

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அதிகாரம் இல்லாத ஒருவர் பிரதமராகி அமைச்சரவையை நிர்வகிக்கிறார். இது காட்டுச்சட்டமாக மாறுவதையும்விட பாரிய நிலையாகும். சட்டம்புறந்தள்ளப்பட்டுள்ளதென்றே நான் இதைக் கருதுகின்றேன்.

குற்றச்செயல்களுக்கு பலியாகக்கப்பட்டோர் மற்றும் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல், தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுதல் என்பன வறிய மக்களையே அதிகம் பாதிக்கின்றன. செல்வந்தர்களுக்கு இதுபோன்ற எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. எனவே, நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதிலும் சரி, பாது காப்பை உறுதிப்படுத்துவதிலும் சரி வறியவர்கள் தொடர்பில் நீதிமன்றமும், பொலிஸாரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். சாட்சியாளர்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல் குறித்தும், அதன் அபாயத்தன்மை குறித்தும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மக்களைக் கைதுசெய்து தடுத்துவைத்திருக்கும் அதிகாரம், பாதுகாப்புச் செயலாளரிடமிருந்து நீக்கப்பட்டு நீதிமன்றத்தின் அதிகாரமாக மாற்றப்பட வேண்டும். குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான சட்டமூலத்தால் அவர்களின் உரிமை நிலைநாட்டப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். அத்துடன், அவர்களுக்கான நட்டஈடு கிடைக்கும். இதுபோன்ற நன்மைகள் ஏற்படுகின்றன. இதேவேளை, குற்றச்செயல்களைத் தடுப்பது பற்றியும் கவனமெடுத்து ஆராய வேண்டும்" – என்றார். (ந–சி)


## மரண அறிவித்தல்



திருமதி கமலாம்பாள் சரவணபவன்

கோப்பாய் நாவலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பாள் சரவணபவன் நேற்று (19.02.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நகுலேஸ்வரர்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், சரவணபவனின் அன்பு மனைவியும், பிரணவன் (Aus), பிரதீபன் (Aus), பிரமிளா, சர்மிளா (Aus) ஆகியோரின் அன்பு தாயும், Dr. திவாகரன், இன்பசீலன், நிருஜா ஆகியோரின் அன்பு மாமியும், சந்தோஸ், சுலக்ஷனா, அபிஷா, அனுஷ்கா, அயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வேதநாயகாம்பாள், காலஞ்சென்ற மீனாம்பாள், சதானந்தயோகேஸ்வரன், காலஞ்சென்ற ஞானசம்பந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமாரசாமி, கௌரியம்பாள், லலிதாம்பாள், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன், கமலாம்பாள், புவனாம்பாள், கெங்காதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு No.8A, Dr. Ponseka Road, Colombo-5இல் நடைபெற்று, மு.ப 10 மணியளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரவணபவன் (கணவர்)
மக்கள், மருமக்கள்.

Tel: 0112501427 (C/19790) (10)



## மரண அறிவித்தல்கள்

### ஜோசப் ஜெகநாதன்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உடையார் கட்டு தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் ஜெகநாதன் நேற்று முன்தினம் (18.02.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேசப் – மாசிலாமணி தம்பதியரின் அன்பு மகனும், சுபிரிஜேற் பிள்ளை – மரியே தம்பதியரின் அன்பு மருமகனும், சகாயமலரின் அன்புக் கணவரும், ஜஜின் ஜெயந்தினி (ஆசிரியை, விசுவமடு மகாவித்தியாலயம்), மேரி அன்கில்டா (ஆசிரியை, உடையார் கட்டு மகா வித்தியாலயம்), யூடிஸ் கொட்சன் (பேராதனைப் பல்கலைக் கழகம்), எச்சித் கோல்டன் (சனச அபிவிருத்தி வங்கி), சேர் சியூஸ் டிஜோனி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரமோகன் (பொதுச் சுகாதார பரிசோதகர்), ஜெனாட் நியூமன் (இலங்கை வங்கி, புதுக்குடியிருப்பு) ஆகியோரின் மாமனும், றெஜிஸ்ஜான், கொன்சியூஸ்ஜான், ரஜிஸ்ஜான், யூட்செலின்ஸ் ஆகியோரின் பேரனும், சதானந்தம், கிறிஸ்துகமலா, மேரிஸ்ரலா, மேரிகொலஸ்ரிகா, ஜக்குலின் லிண்டா மற்றும் காலஞ்சென்றவர்களான இன்பநாதன், கமலநாதன், யூலியட் றெஜினா, பாக்கியநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (20.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப.10.00மணியளவில் புனித யூதாததேயு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சுதந்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார்கட்டுதெற்கு,
உடையார்கட்டு.

தகவல்: குடும்பத்தினர்.
077 3151514

### கந்தையா பாலசுந்தரம்



யாழ்ப்பாணம், நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுந்தரம் கடந்த (17.02.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான லோகநாதன், தில்லைநாதன், சண்முகநாதன் மற்றும் திருமதி வே.புஷ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (சிவபாதம்), வைரவநாதன், யோகேஸ்வரன் மற்றும் தெய்வேந்திரம்(தேவு) ஆகியோரின் மைத்துனரும் அநுராதா (சுவிஸ்), திருச்செந்தூரன்(கனடா), ஜீவராசா (உதவிப் பொறியியலாளர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபானந்தன் (சுவிஸ்), விஜிதாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் அபிராத், அபிநயா (சுவிஸ்), ஸ்ரயன் யாதுரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிருஷ்ணன் கோயில் வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(56983)(3.5)

தகவல்: குடும்பத்தினர்,
தொடர்புகளுக்கு:
பா. ஜீவராசா (0771520086)

## உள்ளூராட்சி

தெரிவத்தாட்சி அலுவலர் ஆர். சசீலன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைகளுக்கான இந்தத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 6 அரசியல் கட்சிகளும், ஒரு சுயேட்சைக் குழுவும் போட்டியிடுகின்றன.

தேர்தலுக்குரிய ஏற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக ஏனைய மாவட்டங்களின் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில், தேர்தல் கடமைகளில் பங்குபெறவுள்ளனர்.

இந்த நிலையில், தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளை இறுதி செய்வதற்காக, இரு பிரதேச சபைகளிலும் போட்டியிடும் வேட்பாளர்களையும், பாதுகாப்புத் தரப்பினரையும் தேர்தல்கள் ஆணையாளர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். நாளை சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## இருநாட்டு

இந்திய மீனவர்களின் ரோலர் படகு மீன்பிடி தொடர்பில் 3 கட்டப் பேச்சு இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் நடத்தப்பட்டது. அவற்றில் தீர்வு எதுவும் பெறப்படவில்லை. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை கடந்தவாரம் சந்தித்த போது இந்தப் பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதால் கடல் வளம் அழிக்கப்படுகின்றது. கடலில் பவளப்பாறைகள் அழிக்கப்படு மீனவளமும் குறைவடைந்து வருகிறது – என அப்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் இந்திய மீனவர்களது மீன்பிடி முறைகளால் இலங்கை மீனவர்கள் தொழில் பாதிப்பை எதிர்கொண்டிருப்பதுடன், மீன்பிடி உபகரணங்களும் நாசமாக்கப்படுகின்றன. இதனால் மீனவர்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவற்றை ஏற்றுக் கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி இரு நாட்டு மீனவர்களையும் சந்தித்து கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி விட்டு இலங்கை வருகையின் போது முடிவுகளை மீனவர்களுக்கு சார்பாக வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

அதையடுத்த இரு நாட்டிலும் மீனவர் சங்கங்களில் இருந்து முக்கிய பிரதிநிதிகள் கொழும்பில் சந்தித்து பேச்சு மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பில் மீனவர்கள் சங்கங்கள் சந்திக்கவுள்ளனர். இந்த சந்திப்பின் போது ஒரு வாரத்தில் குறிப்பிட்ட நாள்களில் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களிடம் கோரவுள்ளனர்.

இதேவேளை இருநாட்டினதும் கடல் எல்லைகளை அடையாளப்படுத்தும் வகையில் மிதவைகளை கடலில் போடுவதற்கும், மீனவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளவுள்ளது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. (ற-14)

## கரைதுறைப்பற்று

– செயலாளருக்கு நேற்று இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்கான தேர்தலுக்கு 2011 ஆம் ஆண்டு வேட்பு மனுக் கோரப்பட்டது. அப்போதைய ஆளும் கட்சியாக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கரைதுறைப்பற்றுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. தற்போது கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளராக இருக்கின்ற ரவீந்திரனும் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

பின்னர் குறித்த சபைக்கான தேர்தல் இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில், ரவீந்திரன் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் கடந்த மாத இறுதியில், ஒத்திவைக்கப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் சபையின் செயலாளராக ரவீந்திரன் தொடர்ந்தும் பணியாற்றினார். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அவர் தனது கடமையிலிருந்து விடுப்பில் நின்றிருக்க வேண்டும். ஆனால் அவர் கடந்த 11 ஆம் திகதி திகதியே விடுமுறையூற்ற விடுப்பைப் பெற்று நின்றுள்ளார்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரால், அவருக்கு இடமாற்றம் வழங்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய வேட்பாளராகப் போட்டியிடும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் கடந்த மாத இறுதியில் அறிவிக்கப்பட்டபோது, தேர்தலில் போட்டியிடவில்லை என்று தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த வேட்பாளர்கள் 10 பேர் கையெழுத்திட்டு தேர்தல்கள் திணைக்களத்துக்கு கடிதம் சமர்ப்பித்திருந்தனர். அதில் மேற்படி ரவீந்திரனும், கையெழுத்திட்டிருந்தார். (ற-5)

## மாவீரர்

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்ட அமர்வின் போது, வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் கொள்கைத் திட்டம் வெளியிடப்பட்டது. அதில் மாவீரர்களின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களைமையப்படுத்தி செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த குடும்பங்கள் தற்போது வறுமைநிலையில் வாழ்ந்து வருகின்றன. அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் தேவை என்று தெரிவித்த அமைச்சர், அவர்களுக்கு முதல் கட்டமாக உதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைய வடக்கு மாகாணத்திலுள்ள சகல கிராம அபிவிருத்தித் திணைக்களங்கள் ஊடாகவும் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக இவை முன்னெடுக்கப்படவுள்ளன. மாவீரர்களின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் இன்று முதல், மேற்படி சங்கங்களிடம் சென்று விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அவற்றை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என்று அமைச்சர் டெனீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ற-5)

## ஓய்வுபெற்ற

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அதற்கு எதிராக மேன்முறையீடுசெய்திருந்தனர். இடமாற்ற சபை எதிர்வரும் திங்கட்கிழமை கூடுவதற்கு முன்னரே அந்த இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றியவர்களுக்கே இடமாற்றம் வழங்க வேண்டும். ஆனால் ஒரே பாடசாலையில் 3 வருடங்கள் பணியாற்றியவருக்கும் 7 வருடங்கள் பணியாற்றி விட்டீர்கள் என்று கூறிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்.வலயத்திலிருந்து வன்னிக்கு இடமாற்றம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் யாழ். வலயத்தில் இல்லாத ஆசிரியர் ஒருவரின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமாரிடம் கேட்டபோது

"இடமாற்ற சபை இன்றி யாருடைய மேற்முறையீட்டையும் தாம் நிராகரிக்கவில்லை. 7 வருடம் ஒரே பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியருக்கே இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டது. ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை இடமாற்ற சபை மூலமாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை. பாடசாலைகளில் ஆசிரியர்கள் வேலையின்றி இருப்பதை ஏற்க முடியாது. வெற்றிடம் உள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும்.''– என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் இலங்கை ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினிடம் கேட்டபோது, "2007/20 சுற்றறிக்கையின்படி எந்தவொரு இடமாற்றமும் இடமாற்ற சபை இன்றிச் செய்ய முடியாது. அதனை மீறி நடந்தால் அது கொள்கை மீறியதாகவே இருக்கும். நீதியானதாக இருக்காது.''– என்று தெரிவித்தார். (ற-4)

## சரணடைந்து

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

"தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில், நீதியமைச்சால் நியமிக்கப்பட்ட மூவர் குழு இன்னமும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று பிரதமர் தெரிவித்தார். இதன் பின்னர் காணாமற் போனோர் தொடர்பிலான விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது நாம் பல விடயங்களைச் சுட்டிக்காட்டினோம். இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டவர்கள் எங்கே? என்பது கண்டறியப்பட வேண்டும். அவர்களை இரகசிய தடுப்பு முகாம்களில் வைத்திருப்பதாக அறிகின்றோம். திருகோணமலை, அம்பாந்தோட்டை, வெலிகந்தை ஆகிய பிரதேசங்களில் இருப்பதாக எமக்கு ஆதாரங்களுடனான தகவல்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினோம்.''– என்று தெரிவித்தார்.

அதற்குப் பிரதமர் அவ்வாறு முகாம்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டார். அதற்கு, "இப்போது அவ்வாறு இல்லாமல் இருக்கலாம். கடந்த அரசின் ஆட்சியில் அவ்வாறு முகாம்கள் இருந்தன. அதில் சரணடைந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டோம். அதற்குப் பிரதமர், இது தொடர்பில் முப்படையினரிடமிருந்தும் அறிக்கையைப் பெற்றுச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.''– என்றும் சுரேஷ் தெரிவித்தார். (ற-5)

## பேசியவற்றை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், அரசுக்கும் இடையே நேற்று இரவு இரண்டாம் கட்டச் சந்திப்பு இடம்பெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா, க.சுரேஷ்பிரேமச்சந்திரன், பொன்.செல்வராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கெடுத்தனர். அரசு தரப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்,

"முதலாவது கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களே நேற்றைய கூட்டத்தில் மீண்டும் ஆராயப்பட்டன. வலி. வடக்கு – சம்பூர் மீள்குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனோர் விவகாரம் பற்றிப் பேசப்பட்டது.''– என்று குறிப்பிட்டார்.

"வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் ஆயிரம் ஏக்கரை விடுவிப்பதாகக் கூறப்பட்டது. கடந்த அரசு சொன்ன அதே திட்டத்தையே நீங்களும் குறிப்பிடுகின்றீர்கள். அது மக்களால் நிராகரிக்கப்பட்ட விடயம். நீங்கள் ஆயிரம் ஏக்கரை விடுவிப்பதை வரவேற்கின்றோம். அதில் அந்தக் காணியின் உரிமையாளர்கள்தான் குடியமர்த்தப்பட வேண்டும். இராணுவத்தினர் சொல்லும் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்று அவர்களிடம் சுட்டிக்காட்டினோம்.''– என்றும் அவர் தெரிவித்தார்.

"வலி.வடக்கு – சம்பூர் என்பன மீள்குடியமர்வின் ஆரம்பக் கட்டம் தான். ஏனைய இடங்களிலும் மீள்குடியமர்வு செய்யப்பட வேண்டி இருக்கின்றது. இந்த இரு இடங்களிலும் எந்த இடைஞ்சலும் இன்றி உடனடியாக மீள்குடியமர்த்துவதற்கு ஏற்ற வரைபடங்கள் எம்மால் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்குப் பின்னரும் தாமதித்துக் கொண்டிருக்க தேவையில்லை. தொடர் கூட்டங்கள் நடத்துவதற்குப் பதிலாக, ஏற்கனவே பேசப்பட்ட – கூறப்பட்ட விடயங்களை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவாருங்கள் அழுத்தமாகப் பிரதமரிடம் தெரிவித்தோம்''– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## பாதுகாப்பற்ற

இடத்தில் இந்த விபத்து இரவு 7.10 அளவில் நடந்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் கற்கும் கோப்பாயைச் சேர்ந்த குகப்பிரியன் (வயது -18) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

அந்த இடத்தில் பாதுகாப்புக் கடவை அமைப்படாததைக் கண்டித்து அங்கு ஒன்றுகூடிய சுமார் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் ரயில் தண்டவாளத்துக்குக் குறுக்காக மின்கம்பங்களைப் போட்டு பாதையைத் தடை செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு சில மணிநேரம் பதற்றம் நிலவியது.

குகப்பிரியன் ரயிலால் மோதப்பட்டு தூக்கி வீசப்பட்டிருந்த நிலையில் அங்கிருந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முற்படவில்லை என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்தைப் பார்த்த பலர் அங்கிருந்து ஓடியுள்ளனர். சிலர் பார்த்துக் கொண்டிருந்துள்ளனர். சுமார் 10 நிமிடங்களின் பின்னர் வயோதிபர் ஒருவரும், சில இளைஞர்களும் குகப்பிரியனை ஓட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பினர்.

"விபத்தையடுத்து சிறுகூட்டம் நின்றிருந்தது. ஆனால் எவருமே மாணவனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபடவில்லை. அருகில் காளி கோயில் உள்ளது. அங்கு நின்ற ஒரு ஓட்டோவுக்கு அறிவித்து அந்த ஓட்டோ மூலமாக மாணவனை வைத்தியசாலைக்குக் கொண்டோடினோம்''– என்று குகப்பிரியனை மருத்துவமனையில் சேர்ப்பித்த முதியவர் கூறினார்.

குகப்பிரியன் தாமதமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று வைத்தியர் ஒருவர் தெரிவித்தார். அதிகளவு இரத்தம் வெளியேறியுள்ளது என்றும் அவர் கூறினார்.

"விபத்தில் சிக்கியவர்களை வைத்தியசாலையில் சேர்த்தால் தேவையற்ற பிரச்சினை வரும் என்று நினைக்கின்றார்கள். அவ்வாறு எதுவும் இல்லை. எவர் காயப்பட்டாலும் முதலில் வைத்தியசாலையில் சேர்ப்பித்து விடுங்கள்.''– என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறவிருந்த நிலையில், அதற்கான சோடனைகளை மேற்கொண்டுவிட்டு குகப்பிரியன் வீடு திரும்பும்போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று சக மாணவர்கள் கூறினார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

தண்டவாளத்தை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அந்தப் பகுதியில் குழப்பமான சூழல் நிலவியது. அங்கு சென்ற யாழ்பொலிஸார் மக்களுடன் கலந்துரையாடினர். உரிய தீர்வு இன்றி விலகமாட்டோம் என்று மக்கள் விடாப்பிடியாக நின்றனர். பின்னர் நாளை காலையிலிருந்து (இன்றிலிருந்து) பொலிஸாரை அந்த இடத்தில் பாதுகாப்புக்கு நிறுத்துவது என்றும் ஒரு வாரகாலத்துக்குள் அங்கு பாதுகாப்புக் கடவை அமைத்துத் தருவதாகவும் பொலிஸார் உறுதிமொழி வழங்கியதனையடுத்தே மக்கள் கலைந்து சென்றனர்.

குறித்த ரயில் கடவையில் பாதுகாப்புக் கடவை அமைக்குமாறு கோரி முன்னர் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்றும், அங்கு சென்ற முன்னாள் அமைச்சர் டக்ளஸ் அமைத்துத் தருவதாகக் கூறி ஆர்ப்பாட்டத்தைத் தடுத்திருந்தார் என்றும் மக்கள் கூறினர். ஆனால் இன்றுவரை அங்கு பாதுகாப்புக் கடவை அமைக்கப்படவில்லை என்றும், அவர்கள் விசனத்துடன் தெரிவித்தனர். (ற-4)

# சிவராத்திரியை முன்னிட்டு அரிசிப் பொதியை வழங்கிய சர்வதேச இந்து இளைஞர் பேரவை

வவுனியா, பெப்.20
மகா சிவராத்திரியை முன்னிட்டு சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் வவுனியா மருக்காரம்பளை, மணிபுரம், சமயபுரம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இலங்கைக்கான தலைவர் சி.கஜேந்திரகுமார், வவுனியா மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.உதயகுமார் மற்றும் சமூக ஆர்வலர்களான எஸ்.தவபாலன், க.கேசவன், ஊடகவியலாளர் கோ.ரூபகாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் கூறியதாவது:-

எமது சர்வதேச இந்து இளைஞர் பேரவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து வசதிகள் அற்ற பல்கலைக்கழக மற்றும் உயர்தர மாணவர்களுக்கு நிதிஉதவி, கற்றலுக்கான உபகரணங்கள், உலர் உணவுப்பொதிகள், வாழ்வாதார உதவிகள் முதலான உதவிகளை செயற்படுத்தி வருகின்றோம். சைவத்தமிழர்களின் விழாக்களில் பிரதான விழாவான சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்த அரிசிப்பொதிகளை இக்கிராம மக்களுக்கு முதற்கட்டமாக வழங்குகின்றோம்.

அரிசிப் பொதியை வழங்குவதற்கு உதவிய லண்டன் வாழ் மோகனதாஸுக்கு எமது பேரவை சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.



எமது இளைஞர் பேரவையின் உறுப்பினர் தவபாலன், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மாலை நேர கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வவுனியா வடக்குப்பிரதேசத்தில் நடைமுறைப்படுத்திவருகின்றார். அதே போன்று இந்தக் கிராமத்தில் உள்ள சிறுவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் செயற்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டிருந்தேன். அவர் அதற்கு முழுமையான ஒத்துழைப்புத் தெரிவித்தார். எனவே இலவசமாக நடைபெறவுள்ள மாலைநேர கல்வி வகுப்புக்களில் உங்கள் மாணவர்களையும் இணைத்து பயன்பெறவேண்டும். இதேபோன்று சமூக மட்ட மக்களின் தேவைகளை இனம்கண்டு அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு என்னாலானமுயற்சிகளைமேற்கொள்வேன் என்று தெரிவித்தார். (வ-402)



# மட்டக்களப்பு இளைஞர் விவசாய பண்ணையாளருக்கு டிராக்டர்கள்

மட்டக்களப்பு, பெப்.20
இளைஞர் விவசாயப் பண்ணைத் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சால் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் விவசாயப் பண்ணையாளர்களுக்கு இரண்டு சக்கர டிராக்டர்கள் மற்றும் கிருமிநாசினி தெளி கருவிகளும் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். .சார்ள்ஸ் இவற்றை வழங்கினார்.

இது தொடர்பில் மாவட்ட விவசாயப்பணிப்பாளர் வை.பி.இக்பால் கூறுகையில்,

"இளைஞர்களது பண்ணைகளை மேம்படுத்துவதும் அவர்களது வருமானத்தை அதிகரிப்பதன் ஊடாக ஏனைய இளைஞர்களுக்கு முன்மாதிரியானவர்களாக மாற்றி இளைஞர்களை பிரதேசத்தின் பிரதான உற்பத்தித் துறையான விவசாயத்துறையில் ஈடுபடச் செய்வதும், ஊக்கப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மாவட்டத்தின் விவசாயத் துறையை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தியையும் அதி கரித்து விவசாயப்பண்ணைகளை அதிகரிப்பது என்ற நோக்கத்தில் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் விவசாயப்பண்ணைத் திட்டம் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது. இந்த இரண்டு சக்கர டிராக்டர்கள் வழங்கப்படுகின்றமை, நவீன தொழில் நுட்பங்களில் இளைஞர்களைப்பயிற்றுவிப்பதைநோக்கமாகக் கொண்டது" என்றார்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.கிரிதரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-10)

# மட்டக்களப்பில் நேற்று கையெழுத்துப் போர்

## காணாமற்போனோரை கண்டுபிடித்துத் தருமாறு கோரி

மட்டக்களப்பு, பெப்.20
காணாமற் போனோர் மற்றும் கடத்தப்பட்டோரை கண்டுபிடித்துத் தருமாறு கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.



மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற கையெழுத்து போராட்டத்தின்போது பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கையெழுத்திட்டனர். முன்னிலை சோஷலிசக் கட்சியினால் இப்போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமையை பறிக்காதே, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமற் போனவர்களையும்கடத்தப்பட்டவர்களையும் மீட்டுத்தரவேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.



இதன்போது, குமார் குண ரத்தினம் உட்பட நாடு கடத்தப்பட்ட அனைவரினதும் அரசியலில் ஈடுபடும் உரிமையை பறிக்காதே எனும் தலைப்பில் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

முன்னிலை சோஷலிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஆர்.கே.இந்திரநாத், சம உரிமை இயக்கத்தின் தலைவர் ரி.கிருபாகரன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.(வ)



கடந்த 2013ஆம் ஆண்டு புத்தூரில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்த யாழ்.பல்கலைக் கழக மாணவன் சோகேஸ்வரன் கயந்தனின் நினைவாக சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக அமைக்கப்பட்ட பயணிகள் வாகனத் தரிப்பிடம் நேற்று அவரது பெற்றோரால் திறந்து வைக்கப்பட்டது. (வ-9)

# வர்த்தகர்களுக்கு அபராதம்

அம்பாறை, பெப்.20
அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்களில் அளவை, நிறுவை கருவிகளை முத் திரை இடப்படாமல் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான 15 வர்த்தகர்களில் 11 வர்த்தகர்களுக்குதலா ஆயிரம் ரூபா அபராதமும் 4 வர்த்தகர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடி வேம்பு ஆகிய பிரதேசங்களில் கடந்த 9ஆம் திகதி நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே குறித்த வர்த்தகர்கள் கைது செய் யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட் டவர்களை அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் மேலதிக நீதிவானுமாகிய எச்.எம்.எம்.பஸீல் முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முன்னிலைப் படுத்தியபோதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 06 . 1924

மறைவு 03 . 03 . 2014



திருமதி அருளம்மா சண்முகநாதன்

திதி: துதியை

அன்பான உறவுகள் அருகிலிருந்தும்
அம்மா என்று மகள்கள் அழுதிட
மாமி என்று மரியாதையாக
மனதிற்குள் மருமக்கள் புலம்பிட
பேராசை இல்லாத பேர்த்தி
உங்களை பேரர்கள் தேடிட
இவ்வுலகம் விட்டு எவ்வுலகம் சென்றீர்கள்?
ஆண்டு ஒன்றென்ன எம் ஆயுள்வரை
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சோடு தொடரும்.....

39, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில் குடும்பத்தினர்.

(56680)(8.3.7)

# கல்லுண்டாயில் மலக்கழிவை இராணுவமும் கொட்டக்கூடாது

## ஒரு வாரத்துக்கே கால அவகாசம்

யாழ்ப்பாணம், பெப்.20

கல்லுண்டாயில் இராணுவத்தினரும் மனிதக் கழிவுகளைக் கொட்டுகிறார்கள். அங்கு கொட்டப் படும் அதிகமான கழிவு இராணுவத்தினரின் கழிவுகளே.

இனிமேல் அங்கு இராணுவத்தினரும் தமது கழிவுகளைக் கொட்ட முடியாது. அவர்கள் பலாலியில் அல்லது தாம் கையகப்படுத்தியிருக்கும் பரந்த பரப்பில் எதேனும் நிலத்தில் கொட்டவேண்டும். யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து படை முகாம்களினதும் மனிதக் கழிவுகளையும் எரித்து அகற்றக்கூடிய பொறிமுறையை அவர்கள் உருவாக்கவேண்டும் என்று உள்ளூராட்சி அமைச்சு இராணுவத்தினருக்கு அறிவிக்கும் என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.



அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கல்லுண்டாய் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மக்கள் இயக்கத்தினர் ஆகியோருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டது.

அதன் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் ஐங்கரநேசன் மேலும் தெரிவித்ததாவது:–

கல்லுண்டாயில் குப்பை கொட்டுவதனால் சுற்றுச் சூழலுக்கு, பொது மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கழிவுகளைக் கொட்டுவதற்கான பொருத்தமான இடம் இல்லாததால் கொட்டவே கூடாத– பொருத்தமற்ற கல்லுண்டாயில் இதுவரை கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இது தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சரின் தலைமையில் நிரந்தரமாகக் கழிவகற்றும் முகாமைத்துவத் திட்டத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதனை நடைமுறைப்படுத்த சில வருடங்கள் தேவை என்பதனால் சில தற்காலிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அதன்படி கல்லுண்டாயில் மருத்துவமனைகளிலிருந்து அகற்றப்படுகின்ற ஊசிக் குழாய்கள், பஞ்சு, துணி, சத்திர சிகிச்சையின்போது உடலுறுப்புக்களிலிருந்து அகற்றப்படுகின்ற உறுப்புக்கள், கழிவுகள் கொட்டப்படுவதனால் அங்கு பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனால் அவற்றை இனிமேல் அங்கு கொட்டுவதில்லை.

தினமும் 25 வரையான பௌசர்கள் மூலமாக மனிதக் கழிவுகள் எந்த சுத்திகரிப்பும் இன்றி நேரடியாகக் கல்லுண்டாயில் கொட்டப்படுகின்றன. அது ஈரநிலம் என்பதால் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எனவே அங்கு ஒரு வாரத்துக்கு மாத்திரம் மனிதக் கழிவுகள் கொட்டப்படலாம். பிறகு கொட்ட அனுமதிக்கப்படாது. ஒரு வாரத்தின் பின்னர் கொட்டுவதற்கான இடத்தை மாநகர, பிரதேச சபைகள் தெரிவு செய்ய வேண்டும்.

எமது நிலங்களில் பெருமளவு பகுதி இன்னும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. வலி.தென்.மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு காட்டுப்புலப் பகுதியில் 49 பரப்பு நிலப்பகுதியில் கழிவு முகாமைத்துவத்தைச் செய்து கொண்டிருந்த நிலையில் அந்தப் பகுதிகூட இராணுவத்தினரால் இன்று கையகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. பெருமளவு நிலப்பரப்பைப் பலாலியில் ஆக்கிரமித்து வைத்திருக்கும் இராணுவம் அங்கு பயிர் செய்கின்றது. உல்லாச விடுதிகளைக் கட்டிக்கொண்டிருக்கிறது.

ஆகவே அவர்களும் இனிமேல் அங்கு மனிதக் கழிவுகளைக் கொட்ட முடியாது.

மனிதக் கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்கனவே நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலமாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனாக நிதி பெறப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாநகர எல்லை, யாழ்.பல்கலைப்பகுதி ஆகியவற்றில் உள்ள கழிவுகளை அகற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். கல்லுண்டாயில் 6 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் மனித கழிவு அல்லாத மருத்துவக் கழிவு அல்லாத ஏனைய கழிவுகள் மாத்திரம் கொட்டப்படலாம்– என்றார். (த–4)

# புலம்பெயர் உறவுகளின் உதவிக்குப் பொறிமுறை

## உருவாக்குவது அவசியம் என்கிறார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

வவுனியா, பெப் 20

தாயக மக்களுக்கு புலம்பெயர் உறவுகளால் வழங்கப்படும் உதவிகள் தொடர்பில் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படுத்துவதற்கான பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கோரியுள்ளார்.



போரின் கோரத்தாண்டவத்தால் பாதிக்கப்பட்ட தாயக மக்களுக்குப் புலம்பெயர் உறவுகளின் உதவி அவசியமானது. எனினும் அவர்களது உதவி சரியான முறையில் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தவேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் வவுனியா உப பணிமனையில் புலம்பெயர் மருத்துவக் குழுவுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின்போது அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த காலப் போரின் பாதிப்பினால் எமது தாயகமக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துள்ளனர். போரினால் கொல்லப்பட்டவர்களைவிட அதன் வடுக்களைச் சுமந்துகொண்டு அல்லற்படும் மக்களே மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாகவும், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டுத் தாமாக இயங்கமுடியாது மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களின் நிலை பரிதாபத்திற்குரியது.

இதைவிட போரில் குடும்பத் தலைவரைத் தொலைத்துக் குழந்தைகளுடன் அன்றாட வருமானத்திற்கு அல்லற்படும் குடும்பங்களும் உள்ளன. இவர்களுக்கான துரித மறுவாழ்வுச் செயற்திட்டங்கள் செயற்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனினும் முன்னைய மத்திய அரசு இவர்களுக்கான செயற்திட்டங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தவில்லை. இவற்றுக்கான நிதிமூலங்களை நாம் புலம்பெயர்ந்த உறவுகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு சாத்தியங்கள் இருந்தும் ஆளுநரூடாக மத்திய அரசு முட்டுக்கட்டை போட்டது.

தற்போது அரசியல் சூழ்நிலை ஓரளவு மாறுவதாக உணருகின்றோம். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான உதவிகளைப் பெற்றுக் கொள்ள முதலமைச்சர் நிதியத்தை நிறுவத் தீர்மானித்துள்ளோம். இது தொடர்பாக ஏற்கனவே பிரேரணையொன்று மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் புலம்பெயர் மக்களால் வழங்கப்படும் நிதியுதவிகள் இந்நிதியத்தினூடாகப் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுகளினூடாக நடைமுறைப் படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதனூடாகப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு சதத்திற்கும் வெளிப்படையான கணக்கியல் முறைமை பேணப்படும். எனவே எதிர்வரும் காலங்களில் புலம்பெயர் உறவுகளின் தார்மீக உதவியை நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தப் போரினால் பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்கள், பெண்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள் முக்கியமானவர்கள். தற்போது எனது அமைச்சின் கீழ் இவ்வாறாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித மறுவாழ்வு செயற்திட்டங்களுடன் தொடர்பான புனர்வாழ்வு, சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தை, பெண்கள் விவகார அமைச்சுக்கள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

எனவே எதிர்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் எமது மக்களுக்கான உதவிகள் சரியான முறையில் பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. குறிப்பாக வழங்கப்படும் உதவிகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புகூறல் என்பன அவசியம். எனவே இவற்றை ஒருங்கிணைத்து செயற்படக்கூடிய பொறிமுறையொன்றை எனது அமைச்சு செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதனூடாக இவ்வாறான நிதி மோசடிகளை தடுப்பதுடன் தேவையானவர்களுக்கு உதவி கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறான பொறிமுறை உதவிகளை ஒருங்கிணைப்பதற்காகவே அன்றி கட்டுப்படுத்தும் நோக்கமல்ல– என்றார்.

இதனைதொடர்ந்து புலம்பெயர் மருத்துவக் குழுவினர் வவுனியா பம்பைமடுவில் மாகாண சுகாதார அமைச்சன் கீழ் இயங்கும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வைகறை புனர்வாழ்வு நிலையத்துக்கும் பயனம் செய்து அங்கு சிகிச்சை பெறுபவர்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளை கேட்டறிந்துகொண்டனர். இதன்போது மாகாண அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சீலன் பத்மநாதன் மற்றும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் யோகாநந்தன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். (த)

# வவுனியா வாள்வெட்டு; நான்கு பேர் கைதாகினர்

வவுனியா, பெப் 20

வவுனியாவில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாள் வெட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நால்வர் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



வவுனியா தெற்கிலுப்பைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள் மீது ஆச்சிபுரத்தைச் சேர்ந்த சிலர் வாளால் வெட்டிக் காயப்படுத்திய நிலையில் அவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கு அமைய பதில் தலைமைப் பொலிஸ் அதிகாரி பொலிஸ் பரிசோதகர் அனுரவின் மேற்பார்வையில் பொலிஸ் சார்ஜன்ட்கள் விஜயரத்தின, ஜெயப்பிரகாஸ், அத்துல, திசாநாயக்க, திலீப் உள்ளடங்கிய பொலிஸ் குழு கற்குளம் பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்திருந்தது.

இவர்களை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த–402)

# மரங்கள், மாடுகள் கடத்தலை தடுக்கவேண்டும் பொலிஸார்

## ஓமந்தை மக்கள் கோரிக்கை

வவுனியா, பெப். 20

ஓமந்தைப் பகுதியில் உள்ள காடுகளில் இரவு வேளைகளில் முதிரை மரங்கள் தறிக்கப்பட்டு வெளி மாவட்டங்களுக்குக் கடத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கட்டாக்காலிகளாகத் திரியும் பெருமளவான மாடுகள் கடத்தப்படுவதுடன் திட்டமிட்டுச் சாகடிக்கப்பட்டு இறைச்சிக் கடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதனைப் பொலிஸார் உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என ஓமந்தை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஓமந்தையில் ரயில் வரும்போது ஏ–9 வீதியில், நிற்கும் மாடுகள் குறிப்பிட்ட குழுவொன்றினால் தண்டவாளத்தை நோக்கித் துரத்தப்படுகின்றன. இதனால் ரயில் மோதி மாடுகள் உயிரிழக்கின்றன. அதன் பின்னர் அவை இறைச்சியாக்கி விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோன்று கனரக வாகனங்கள் வரும்போதும் மாடுகள் இவ்வாறு திட்டமிட்டு மோத விடப்பட்டுப் பின்னர் இறைச்சியாக்கப்படுகின்றன.

ஓமந்தை பெருங்காட்டுக் பகுதிகளில் பெறுமதியான முதிரை மரங்கள் தறிக்கப்பட்டு இரவு வேளைகளில் வெளிமாவட்டங்களுக்குக் கடத்தப்படுகின்றன.

காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதால் காட்டு விலங்குகள் குடிமனைக்குள் புகுந்து மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றன.

எனவே மாடுகள், மரங்கள் இவ்வாறு கடத்தப்படுவதை நிறுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த–402)

# கைவிடப்பட்டுள்ள பூந்தோட்ட மக்கள்

## அன்றாட சீவியத்துக்கே பெரும் சிரமம்





வவுனியா, பெப் 20

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆயினும் இது குறித்து யாரும் கவனம் செலுத்தவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்கள் 1998 ஆம் ஆண்டில் இருந்து அ[illegible] வசித்து வருகின்றனர். கிளிநொச்சி மலையாளபுரத்தில் முன்னர் வாடகை வீடுகளில் வசித்து வந்த இவர்கள், போரினால் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்கின்றனர்.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வவுனியாவில் அன்றாடம் கூலித் தொழில் செய்து வருபவர்கள். வேறு காணிகளில் வீடு கட்ட வசதியற்ற இவர்கள் அதிகாரிகளாலும் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

மலசலகூட வசதி, மின்சார வசதி, தண்ணீர் வசதி எதுவும் இன்றி வசித்து வரும் இந்தக் குடும்பங்கள், தமக்கு இந்த இடத்தில நிரந்தர வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் அமைத்துத் தருமாறு 1998 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா மாவட்ட செயலகத்திடம் கேட்டு வருகின்றனர். ஆனால் இவர்களைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றும் முயற்சியில் பல தரப்பினரும் ஈடுபட்டனர். இந்நிலையில் 2012 ஆண்டு இந்த முகாம் மூடப்பட்டுவிட்டதாக அதிகரிகளால் கூறப்பட்டது.

இந்த மக்கள் தண்ணீர்த் தேவையை 100 மீற்றர் தூரத்தில் உள்ள அரச விடுதி ஒன்றில் பெற்று வந்தனர். அண்மையில் இந்த நீரைப் பெற முடியாதவாறு முட்கம்பி அடைக்கப்பட்டுள்ளதால் தண்ணீரைப் பெறுவதற்கும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளதாகவும், இதனால் சிறார்கள் உட்பட பலரும் பெரும் சிரமப்படுவதாகவும் கூறப்பட்டது. (த-402)

# வடக்கு ஆளுநரிடம் 46 கோரிக்கைகள்

## முன்வைத்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். மணியம்தோட்டம் பகுதியில் புதிதாக பாடசாலை ஒன்றை ஆரம்பித்தல், போரில் கொல்லப்பட்ட ஆசிரியர்கள், மாணவர்களின் எண்ணிக்கைக் கணக்கெடுப்பு உட்பட 46 கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி வடமாகாண ஆளுநர் பளிகக்காரவிடம் இலங்கை ஆசிரியர் சங்கம் மனு கையளித்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மற்றும் வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களின், வலயங்களின் செயலாளர்கள் உட்படப் பலர் இந்தச் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்டனர்.

அவர்களது கோரிக்கைகள் தொடர்பில் தாம் கவனம் செலுத்துவதாக ஆளுநர் கூறியுள்ளார் என்று சங்கம் மேலும் தெரிவித்தள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்ததாவது:

வடக்கில் 89 பாடசாலைகள் இன்னும் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளன. அவற்றைத் திறக்கவேண்டும். ய்யாழ்.மணியம்தோட்டத்தில் சுமார் 400 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். எனவே அங்கு புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவேண்டும். வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் தம் வசம் வைத்துள்ளனர். அவற்றை விடுவிக்கவேண்டும்.

காரைநகரில் பாடசாலை சென்ற சிறுமி கடற்படையினரால் வன்புணரப்பட்ட வழக்கு தேக்கத்தில் உள்ளது. அது தொடர்பில் உரிய விசாரணை முன்னெடுக்க வேண்டும். வவுனியாவில் கற்பித்த யாழ். ஆசிரியர் நிரூபனின் கொலை தொடர்பில் உரிய விசாரணை வேண்டும். இறுதிப் போரில் கொல்லப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களின் தரவுகள் என்ன? அவர்களுக்கு அக்ரகார கொடுப்பனவு வழங்கல்வேண்டும். ஆசிரிய உதவியாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க வேண்டும். அதிபர், ஆசிரியர் இடமாற்றங்கள், நியமனங்கள் சுற்றறிக்கைப் படி இடம்பெற வேண்டும். இடமாற்றத்துக்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். வன்னியில் பணிக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்கள் 420 பேரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

மடு, துணுக்காய் வலயங்கள் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படவில்லை. அது தொடர்பில் விசாரணை .மேற்கொள்ளப்பட வேண்டும். வவுனியா உள்ளிட்ட வலயங்களில் இடம்பெற்ற உலக உணவுத் திட்ட மோசடி தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

கல்வி நிர்வாக சேவைப் பிரிவினருக்கு உரிய இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். முல்லைத்தீவு வலயத்தில் சிங்கள மொழியிலான 7 பாடசாலைகள் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணை வேண்டும். சுன்னாகம் பகுதி உள்ளிட்ட பிரதேசங்களில் குடிதண்ணீரில் ஒயில் கலந்த விவகாரத்தில் மாணவர்களுக்கும் அங்குள்ளவர்களுக்கும் போதிய தண்ணீர் வசதி வழங்கப்பட வேண்டும் ஆகியன உட்பட 46 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் கூறியதாக ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (த-4)

## சைக்கிள் திருடன் மாட்டினான்

வடமராட்சி.பெப்.20

மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடியவர் கையும் மெய்யுமாக அங்கு கூடியிருந்தவர்களால் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டுப் பின்னர் பருத்தித்து[illegible] பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று மதியம் 12.00 மணியளவில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டவர் துன்னாலையைச் சேர்ந்தவர் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, சுமார் ஒரு மாத காலப் பகுதியில் குறித்த இடத்தில் இரண்டு சைக்கிள்கள் திருடப்பட்டதாகவும், மூன்றாவதாக சைக்கிள் திருடப்பட்டபோது திருடன் கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டார் எனவும் கூறப்பட்டது. (த-173)

## ஆறு பேருக்கு அபராதம்

நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவான நிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த சாவகச்சேரி பெரிய அரசடி வீதியைச் சேர்ந்த ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் 3 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருவதையடுத்து கடந்த வாரம் சாவகச்சேரி பொதுச் சுகாதார[illegible]பரிசோதகரும் பொலிஸாரும் [illegible]ணைந்து வீடு வீடாகப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அவ்வேளையில் குடியிருப்புப் பகுதிகளை டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் வைத்திருந்த ஆறு பேருக்கெதிராகப் பொலிஸார் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்தனர். இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் ஆறு பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

# சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது



யாழ்ப்பாணம், பெப். 20

நிரந்தர நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி யாழ்.மாவட்ட சமூக சுகாதாரத் தொண்டர்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாக இரண்டாவது நாளாகவும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நிரந்தர நியமனம் தரும்வரை தொடர்ந்து போரர்ட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

தமக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று கோரி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்றைய தினமும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் கூறியுள்ளனர். (த-4)

# பாதுகாப்பு வலயக் காணிகளின் உரிமையாளர்கள் பெயர் பதிவு

யாழ்ப்பாணம், பெப். 20

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளின் உரிமையாளர்கள் தங்கள் பெயர்ப் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் அறிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும், ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/233 காங்கேசன்துறை மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் இன்று மல்லாகத்தில் உள்ள வலிகாமம் வடக்குப் பிரதேச சபை அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்களும் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

வெளியூரில் இருப்பவர்கள் எமது அலுவலக மின்னஞ்சல் முகவரி vnpskks@yahoo.com என்னும் முகவரியின் மூலம் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 0212241130, 0770279676 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியும் என்று தவிசாளர் அறிவித்துள்ளார். (த-5)

# விவசாயிகளிடம் நெல் கொள்வனவு ஆரம்பம்

## கிளிநொச்சியில் நேற்று நிகழ்வு



கிளிநொச்சி,பெப் 20

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் நெல்லை அரச விலை நிர்ணயத்துக்கு அமைவாகக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்ட நெல் சந்தைப்படுத்தும் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி கனகபுரம் அம்பாள்குளம் பழைய சந்தையில் அமைக்கப்பட்டுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபை அலுவலகத்தில் இடம்பெற்றது.

விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டாமலும், அவர்களுடைய வியர்வைக்கு ஏற்றவாறு நெல்லை மொத்தமாகக் கொள்வனவு செய்வதிலும் நெல் சந்தைப்படுத்தல் சபை ஈடுபடும். விவசாயிகள் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு ஏற்றவாறு நெல்லை வழங்க முடியும் என வடக்கு மாகாண நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர் சாந்தகுமார தெரிவித்தார்.

அந்த வகையில் சந்தைப்படுத்தல் சபையில் சிவப்பு நாடு, வெள்ளை நாடு கிலோ 40ரூபாவாக ஒரு மூடை நெல் 2ஆயிரத்து 800 ரூபாவுக்கும், சம்பா கிலோ 45 ரூபா வீதம் ஒரு மூடை நெல் 3ஆயிரத்து 150 ரூபாவுக்கும், கீரிச் சம்பா கிலோ 50 ரூபா வீதம் ஒரு மூடை 3ஆயிரத்து 500 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தமது நெல்லை சந்தைப்படுத்தல் சபையிடம் கொடுப்பதில் நேற்று ஆர்வம் காட்டினர்.

இந்த ஆரம்ப வைபவத்தில் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் குகராசா, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் மகாதேவா மற்றும் அரச அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-21)

# ஐ.நா அறிக்கை ஒத்திவைப்புக்கு வடக்கு- கிழக்கில் கடும் எதிர்ப்பு

## கையெழுத்துப் போராட்டத்துக்கு சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 20
இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றம் தொடர்பான ஐநா விசாரணை அறிக்கை சமப்பிப்பைப் பிற்போட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு-கிழக்கில் கையெழுத்துப் போராட்டம் நடத்தவுள்ளதாக சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழகப் பொதுநூலகத்தில் நேற்று இடம்பெற்ற பல்கலைச்சமூகம் மற்றும் சிவில் அமைப்புக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

போர்க்குற்ற விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதை ஒத்திவைத்தமையை யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் ஏற்கனவே கண்டனம் தெரிவித்த நிலையில், சிவில் சமூகமும் நேற்றுக் கண்டனம் தெரிவித்ததோடு அதனை வலுப்படுத்தும் நோக்கில் வடக்கு-கிழக்கில் கையெழுத்துப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கூட்டத்தில் சமூக அமைப்புக்கள், மனிதாபிமான அமைப்புக்கள் எனப் பல்வேறு அமைப்புக்களையும் சேர்ந்த 40 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பல்கலைக்கழகச் சமூகம் முன்னெடுக்கும் பேரணிக்குத் தாம் ஆதரவு வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-4)

## 11 குரங்குகள் சிக்கின

ஒரே தடவையில் 11 குரங்குகள் கூட்டினுள் அகப்பட்டன.
இந்தச் சம்பவம் நேற்று மீசாலையில் இடம்பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த பொ.வே. இராசேந்திரம் என்பவர் தனது சொந்தச் செலவில் தயாரித்த குரங்கு பிடிக்கும் கூட்டில் பனங்கிளங்குகளைப் போட்டு பொறி வைத்திருந்தார்.
கூட்டமாக வடந்த குரங்கள் கூட்டினுள் புகுந்து கிழங்குகளை எடுப்பதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கையில் கூட்டின் கதவு மூடப்பட்டதால் 11 குரங்குகள் அதனுள் அகப்பட்டுக்கொண்டன. அதனைஅப்புறப்படுத்தவனப்பரிபாலனத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (த-9)

# 'மாற்றம்' நிகழ்வு வேறு இடத்துக்கு

யாழ்ப்பாணம், பெப். 20
'மாற்றம்' அமைப்பினால் யாழ்.மாவட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் வடக்கு மாகாண சபையினர் பங்கெடுக்கமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த நிகழ்வு யாழிலுள்ள தனியார் விடுதி ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் ஸியா உல் ஹசன் ரவூப் தெரிவித்துள்ளார்.

மத்திய-வடக்கு மாகாண அமைச்சர்கள் பங்கேற்றும் கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்று 'மாற்றம்' அமைப்பினால் அழைப்பிதழ்கள் வெளியிடப்பட்டிருந்தன. இந்த நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இந்த நிகழ்வு தொடர்பில் தம்மிடம் முன்கூட்டியே பேசப்படவில்லை என்றும், இதில் வடக்கு மாகாண அமைச்சர்கள் பங்கெடுக்கமாட்டார்கள் என்றும் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில், மாற்றம் அமைப்பு முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தங்களின் இல்லத்தில் கடந்த 6 ஆம் திகதி சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது அமைப்பின் குறிக்கோள்கள் தொடர்பாக விரிவாகத் தெரியப்படுத்தியிருந்தோம்.

மேலும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள எமது இளைஞர் மாநாட்டில் பங்கு கொள்ளமுடியாது என்றும், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ஊடாக தங்களின் முதல் உரையை அனுப்புவதாகவும், ஏனைய நான்கு அமைச்சர்களுடன் கலந்துரையாடுவதற்கும் அனுமதித்திருந்தீர்கள். நாங்கள் தங்களினூடாகவே எங்களின் யாழ். நிகழ்வு ஆரம்பிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக, 20 ஆம் திகதி (இன்று) எமது உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பம் செய்வதற்கு தங்களின் மாகாண அலுவலகத்தில் ஏற்பாடு செய்யவும் பணித்தீர்கள்.

மேலும் தங்களின் பங்கெடுப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், கடந்த 6 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தை ஒதுக்கீடு செய்யச் சென்றபோது, 22 ஆம் திகதிக்கு ஏற்கனவே மண்டபம் ஒதுக்கப்பட்டு விட்டது. இதனால் அரசியல் கலப்பில்லாத எமது நிகழ்வை யாழ்.இந்துக் கல்லூரியில் ஒழுங்கமைத்தோம்.

மத்திய- மாகாண அமைச்சர்களை ஒரே மேடையில் அமரச் செய்வதன் மூலம் இரு அரசின் வேலைத் திட்டத்தினை இலகுவாக மக்களிடையே கொண்டு செல்ல முடியும் என்று நம்புகின்றோம்.

மேலும் நாம் எமது நிகழ்வுகளை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் ஹோட்டலுக்கு மாற்றியுள்ளோம். எனவே தங்களின் முடிவை மறுபரிசீலனை செய்து ஒத்துழைப்பு வழங்குமாறு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# பல்கலையிலிருந்து நல்லூருக்கு ஐ.நாவுக்கு மனு வழங்கும் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 20
போர்க்குற்ற விசாரணை அறிக்கையை மார்ச் மாதம் சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழகச் சமூகம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடத்தும் பேரணி யாழ்.பல்கலையில் ஆரம்பித்து நல்லூரைச் சென்றடையும். அங்கு வைத்து மனு கையளிக்கப்படும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் இ.இராசகுமாரன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகப் பொதுநூலகத்தில் நேற்று சிவில் அமைப்புக்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. அதன் பின்னர் இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறிக்கையைப் பிற்போடுவதாக ஐ.நா. அறிவித்துள்ளது. அதற்கு பல்கலைக்கழகச் சமூகம் கடும் கண்டனம் தெரிவித்ததோடு பேரணியை தொடர்ந்து நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக வாசலில் இருந்து பேரணி புறப்பட்டு பலாலி வீதியூடாக கந்தர்மடம் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து நல்லூர் கந்தசுவாமி கோயிலை நோக்கிச் சென்று கோயில் வடக்கு வீதியில் வைத்து ஐ.நா. அலுவலகப் பிரதிநிதிகளிடம் மனு கையளிக்கப்படும். [illegible] அனைத்து சிவில் அமைப்புக்களையும் அதன் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் இராசகுமாரன் கேட்டுள்ளார். (த-4)

## பல்கலை மாணவியின் இறுதி ஊர்வலம் நேற்று

கொழும்பு, பெப். 20
தற்கொலை செய்து கொண்ட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவியின் இறுதி ஊர்வலம் நேற்று இடம்பெற்றது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவியான ஹோமகமவைச் சேர்ந்த எஸ். எஸ். அமாலி அவரது குடியிருப்பில் தற்கொலை செய்து கொண் டார்.

அவரது தற்கொலைக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையே காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த மாணவி தற்கொலை செய்வதற்கு முன்னர் கடிதமொன்றை எழுதி வைத்துள்ளதுடன் அதில், பல்கலைக்கழக மாணவர்களைத் தனது பூதவுடலைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டாமெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனக்கு சேர வேண்டிய எதுவும் இருப்பின் அதனை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வழங்கும் படியும், முடிந்தால் தனது உடலை பொரளை மயானத்தில் எரிக்கும் படியும், தனது புத்தகங்களைத் தனது பூதவுடலுடன் சேர்த்து எரிக்கும்படியும் அந்த மாணவி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## 101 கிலோ கஞ்சாவுடன் 4 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், பெப். 20
பண்டத்தரிப்பில் ஓட்டோவில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட 101 கிலோகிராம் கேரளக் கஞ் சாவை நேற்று மீட்டதோடு 4 பேரைக் கைது செய்து 3 வாக னங்களையும் கைப்பற்றியுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி அங்கு சென்ற பொலி ஸார், ஓட்டோவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை மீட்டனர். தென்னிந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட இந்தக் கஞ்சாப் பொதிகளை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும், அநுராதபுரத்தைச் சேர்ந்த இருவரும், காலி யைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டு ஓட்டோக்கள், படி வாகனம் ஒன்றையும் மீட்டுள்ளனர். அது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவர்களுக்குப் பின்னணி யார்? யாழ்ப்பானத்துக்குக் கொண்டு வந்து கொடுத்தர்கள் யார்? முகவர் யார் அவற்றை எங்கு கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தனர் உள்ளிட்ட விடயங் கள் விசாரணையின் பின்னரே தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வீட்டில் கஞ்சா வைத்தி ருந்த நபரை சாவகச்சேரி பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலை யடுத்துச் சாவகச்சேரி கெருடா வில் பகுதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் நபரையும் கைது செய்தனர்.

இந்த நபரை நேற்று பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட் பிணையில் செல்லுமாறு உத்தர விடப்பட்டது. (த-4,86,9)

# மாகாண சபை உறுப்பினரின் பூதவுடல் தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம், பெப். 20
வடக்கு மாகாணசபை உறுப்பினர் வீ.கனகசுந்தரசுவாமியின் பூதவுடல் நேற்று மாலை தீயுடன் சங்கமாகியது. அவரது இறுதிக் கிரியைகளில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்கெடுத்தனர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினராக முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வீ.கனகசுந்தரசுவாமி தேர்வு செய்யப்பட்டிருந்தார். கடந்த சில மாதங்களாக புற்றுநோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்திருந்தார்.

அவரது இல்லத்தில் நேற்று இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. சமயக் கிரியைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12 மணி வரை இடம்பெற்றது. இதன் பின்னர் இரங்கலுரை நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான, சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம், சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளும், எதிர்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் புதுக்குடியிருப்பு சந்தையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கும் இரங்கலுரை நிகழ்த்தப்பட்டது. புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் அவரது பூதவுடல் தீயுடன் சங்கமமாகியது. (த-5)

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550
Hotlines 0777585913, 0777222422, 071429935
அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 21/02/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.
Batch 1 : 21-02-2015
Batch 2 : 23-02-2015
Batch 3 : 25-02-2015
Batch 4 : 28-02-2015

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.